ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு

பதிப்பு-ஆசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு—1957

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

முகவுரை

ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் குறைந்த அடி வரையறை பெற்ற நூறு நூறு பாடல்களைத் தனித்தனிப் பெற்றுள்ளமையினால். 'ஐங்குறுநூறு' இப் பெயர் பெற்றது. இதில் அமைந்த பாடல்கள் அகவற்பாவின் கீழ்எல்லையாகிய மூன்று அடிச் சிறுமையையும் ஆறு அடிப் பேரெல்லையையும் கொண்டவை.

நூலுக்குப் புறம்பாகிய கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை, என்ற வரிசையில் இதன் ஐந்து பகுதிகளும் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார், என்னும் ஐவராவர்.

ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளது. இவற்றுள் ஒவ்வொன்றும் 'பத்து' என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்தும் தனித்தனியான கட்டுக்கோப்பு உடையது. இது பொருளமைப்பினாலேயோ, இதனுள் அமைந்த பத்துப் பாடல்களிலும் ஆட்சி பெறும் ஏதேனும் ஒரு சொல்லினாலேயோ, பெயரிடப்பட்டிருக்கின்றது. 'களவன் பத்து', 'மஞ்ஞைப் பத்து', 'தெய்யோப் பத்து', முதலியன சொல்லாட்சியினால் பெற்ற பெயர்கள். 'பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து', 'தோழி வற்புறுத்த பத்து' முதலியவை பொருளமைப்பால் பெற்ற பெயர்கள். 'வேட்கைப் பத்து', 'அன்னாய்ப் பத்து' முதலியன சொல்லாட்சியும் பொருளமைதியும் பொருந்தியவை.

இத் தொகையைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்றும், தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையார் என்றும், நூலிறுதியில் உள்ள பழங் குறிப்பினால் தெரியவருகின்றன.

இந் நூலின் செய்யுள்-தொகை 500. 129, 130-ஆம் செய்யுட்கள் பிரதிகளில் காணப்பெறாது மறைந்து போயின. 416, 490-ஆம் செய்யுட்களின் இரண்டாம் அடிகளில் சீர்கள் குறைந்து காண்கின்றன. ஒவ்வொரு பாடலின் கீழும் கொடுக்கப்பெற்றிருக்கும் கருத்துக்கள் பழமையானவையே. சில பிரதிகளில் மட்டும் காணப்பெற்ற மிகைப் பாடல்கள் நூலின் இறுதியில் பின்-இணைப்பாகத் தரப்பெற்றுள்ளன.

இந் நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. இது பதவுரையாகவோ பொழிப்புரையாகவோ அமையாது, உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள், முதலியவற்றை நன்கு விளக்கி, சிற்சில இடங்களில் மட்டும் திரிசொற்களின் பொருளையும் புலப்படுத்திச் செல்லுகின்றது. ஒருசில இடங்களில் இலக்கணக் குறிப்பும், சொல் முடிபு பொருள் முடிபுகளும் விளக்கப் பெற்றுள்ளன. இந்தப் பழைய உரை 469-ஆம் செய்யுள் வரையில்தான் இப்பொழுது கிடைத்துள்ளது: இடையிடையே சில பாடல்களுக்கும் இவ் உரை இல்லை. அருமையாக அமைந்த சிறந்த இந்தப் பழைய உரை நூல் முழுமைக்கும் கிடைக்காமற் போனது ஒரு பெருங் குறையே. இந்த உரையை இயற்றிய ஆசிரியரைப் பற்றி யாதொன்றும் அறியக்கூடவில்லை. ஆயினும், இவரது உரைப் போக்கிலிருந்து பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், முதலிய உரையாசிரியர்களை ஒத்த பெருமை உடையவர் என்று திண்ணமாகக் கூறலாம்.

56·2

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இரு தாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே.

வாழ்த்து.—பாரதம் பாடிய பெருந்தேவனார்

முதலாவது

மருதம்

(ஓரம்போகியார்)

1. வேட்கைப் பத்து

1

'வாழி ஆதன், வாழி அவினி!
நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க!' என வேட்டேமே.

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய், மீண்டு தலைவியோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் அவ்வாறு ஒழுக, நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது. 1

2

'வாழி ஆதன், வாழி அவினி!
விளைக வயலே! வருக இரவலர்!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'பல் இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண் துறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க!' என வேட்டேமே.

இதுவும் அது. 2

3

'வாழி ஆதன், வாழி அவினி!
பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'வித்திய உழவர் நெல்லொடு பெயரும்,
பூக் கஞல் ஊரன் தன் மனை
வாழ்க்கை பொலிக!' என வேட்டேமே.

இதுவும் அது. 3

4

'வாழி ஆதன், வாழி அவினி!
பகைவர் புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'பூத்த கரும்பின், காய்த்த நெல்லின்,
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க!' என வேட்டேமே.

இதுவும் அது. 4

5

'வாழி ஆதன், வாழி அவினி!
பசி இல்லாகுக! பிணி சேண் நீங்குக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'முதலைப் போத்து முழு மீன் ஆரும்
தண் துறை ஊரன் தேர் எம்
முன்கடை நிற்க' என வேட்டேமே.

இதுவும் அது. 5

6

'வாழி ஆதன், வாழி அவினி!
வேந்து பகை தணிக! யாண்டு பல நந்துக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'மலர்ந்த பொய்கை, முகைந்த தாமரைத்
தண் துறை ஊரன் வரைக!
எந்தையும் கொடுக்க!' என வேட்டேமே.

களவினில் பலநாள் ஒழுகிவந்து, வரைந்து கொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது. 6

7

'வாழி ஆதன், வாழி அவினி!
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'உளைப் பூ மருதத்துக் கிளைக் குருகு இருக்கும்
தண் துறை ஊரன் தன் ஊர்க்
கொண்டனன் செல்க!' என வேட்டேமே.

இதுவும் அது. 7

8

'வாழி ஆதன், வாழி அவினி!
அரசு முறை செய்க! களவு இல்லாகுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'அலங்குசினை மாஅத்து அணி மயில் இருக்கும்
பூக் கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்பதாக!' என வேட்டேமே.

இதுவும் அது. 8

9

'வாழி ஆதன், வாழி அவினி!
நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'கயல் ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண் துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க!' என வேட்டேமே.

இதுவும் அது. 9

10

'வாழி ஆதன், வாழி அவினி!
மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!
என வேட்டோளே, யாயே: யாமே,
'பூத்த மாஅத்து, புலால்அம் சிறு மீன்,
தண் துறை ஊரன் தன்னொடு
கொண்டனன் செல்க!' என வேட்டேமே.

இதுவும் அது. 10

2. வேழப் பத்து

11

மனை நடு வயலை வேழம் சுற்றும்
துறை கேழ் ஊரன் கொடுமை நாணி,
'நல்லன்' என்றும், யாமே;
'அல்லன்' என்னும், என் தட மென் தோளே.

பாணன் முதலாயினர்க்குத் தலைமகன் கொடுமை கூறி வாயில் மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள், சொல்லியது. 'தலைவன் எவ்வாறு தப்பி ஒழுகினும், அவன் கொடுமை நின்னால் புலப்படுதல் தகாது' என்று கழறிய பாங்கிக்குத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம். 1

12

கரை சேர் வேழம் கரும்பின் பூக்கும்
துறை கேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுகதில்ல, யாமே;
தோற்கதில்ல, என் தட மென் தோளே.

உழையர் நெருங்கிக் கூறிய திறமும் தனது ஆற்றாமையும் நினைந்து, வாயில் நேரக் கருதிய தலைமகள், 'பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான்' என்பது கேட்டு, பொருளாய்க் கருத்து அழிந்து, தன்னுள்ளே சொல்லியது. 2

13

பரியுடை நல் மான் பொங்குஉளை அன்ன
அடைகரை வேழம் வெண் பூப் பகரும்,
தண் துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே.

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், 'அவன் பெண்டிர் நள்ளென் யாமத்தும் துயிலார்; அவர் அறியாமல் அவன் வரும் திறம் யாது?' எனச் சொல்லி வாயில் மறுத்தது. 3

14

கொடிப் பூ வேழம் தீண்டி, அயல
வடிக்கொள் மாஅத்து வண் தளிர் நுடங்கும்

அணித் துறை ஊரன் மார்பே
பனித் துயில் செய்யும் இன் சாயற்றே.

தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பினன் உணர்ந்த தோழி, 'அவன் கொடுமை நினையாது அவன் மார்பை நினைந்து ஆற்ருயாகின்றது என்னை?' என்ருட்கு, 'அவன் கொடியனேஆயினும், அவன் மார்பு குளிர்ந்த துயிலைச் செய்யும் இனிய சாயலை உடைத்து; ஆதலால் காண்' எனச் சொல்லியது. 4

15

மணல் ஆடு மலிர்நிறை விரும்பிய, ஒண் தழை,
புனல் ஆடு மகளிர்க்குப் புணர் துணை உதவும்
வேழ மூதூர் ஊரன்
ஊரன்ஆயினும், ஊரன் அல்லன்னே.

சேணிடைப் பிரிந்து வந்து உடன் உறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகின்றது என்று குறிப்பினன் உணர்ந்து, தலைமகள் வேறுபட்டாளாக, தோழி அதனை அறியாது, 'அவன் உடன்உறையவும் வேறுபடுகின்றது என்னை?' என்ருட்கு அவள் சொல்லியது. 5

16

ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்
சிறு தொழுமகளிர் அஞ்சனம் பெய்யும்
பூக் கஞல் ஊரனை உள்ளி,
பூப் போல் உண்கண் பொன் போர்த்தனவே.

வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி, 'அவன் வரவையே நினைத்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது என்னை?' எனச் சொல்லி, வாயில் மறுத்தது. 6

17

புதல் மிசை நுடங்கும் வேழ வெண் பூ
விசும்பு ஆடு குருகின் தோன்றும் ஊரன்
புதுவோர் மேவலன்ஆகலின்,
வறிது ஆகின்று, என் மடம் கெழு நெஞ்சே.

தலைமகன் பரத்தையிற் பிரிந்த வழி, 'இவ்வாறு ஒழுகுதலும் ஆடவர்க்கு இயல்பு அன்றே; நீ இதற்கு நெஞ்சு அழிகின்றது என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 7

18

இருஞ் சாய் அன்ன செருந்தியொடு வேழம்
கரும்பின் அலமரும் கழனி ஊரன்,
பொருந்து மலர் அன்ன என் கண் அழ,
பிரிந்தனன்அல்லனே, 'பிரியலென்' என்றே?

பரத்தையிற் பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலைமகற்குப் பின் அவ் ஒழுக்கம் உளதாயவழி, அவன் வரவிடுத்த வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது. 8

19

எக்கர் மாஅத்துப் புதுப் பூம் பெருஞ் சினை,
புணர்ந்தோர் மெய்ம் மணம் கமழும் தண் பொழில்,

11

வேழ வெண் பூ வெள் உளை சீக்கும்
ஊரன்ஆகலின் கலங்கி,
மாரி மலரின் கண் பனி உகுமே.

'பல் நாள் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளையாகிய நீ சில் நாள் அவன் புறத்து ஒழுகுகின்ற இதற்கு ஆற்ருயாகின்றது என்னை?' என்ற தோழிக்கு, 'எதிர்ப்பாடு இன்றி ஓர் ஊர்க்கண்ணே உறைகையினுலே ஆற்றேனுகின்றேன்' எனத் தலைமகள் சொல்லியது. 9

20

அறு சில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப்பூச் சினை சீக்கும்,
காம்பு கண்டன்ன தூம்புடை, வேழத்துத்
துறை நணி ஊரனை உள்ளி, என்
இறை ஏர் எல் வளை நெகிழ்பு ஓடும்மே.

தலைமகளை வாயில் நேர்வித்தற் பொருட்டாக, 'காதலர் கொடுமை செய்தாராயினும், அவர் திறம் மறவாதொழியல் வேண்டும்' என்று முகம்புகுகின்ற தோழிக்கு, 'என் கைவளை நில்லாதாகின்றது அவரை நினைந்ததன் பயன் அன்றே; இனி அமையும்' எனத் தலைமகள் சொல்லியது. 10

3. களவன் பத்து

21

முள்ளி நீடிய முது நீர் அடைகரைப்
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்
தண் துறை ஊரன் தெளிப்பவும்,
உண்கண் பசப்பது எவன்கொல்?—அன்னுய்!

'புறத்தொழுக்கம் எனக்கு இனி இல்லை' என்று தலைமகன் தெளிப்பவும், 'அஃது உளது' என்று வேறுபடும் தலைமகட்குத் தோழி சொல்லியது. 1

22

அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேர் அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து, 'இனி
நீயேன்' என்றது எவன்கொல்?—அன்னுய்!

களவினில் புணர்ந்து, பின்பு வரைந்து கொண்டு ஒழுகாநின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்ருக, ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 2

23

முள்ளி வேர் அளைக் களவன் ஆட்டி,
பூக் குற்று, எய்திய புனல் அணி ஊரன்
தேற்றம்செய்து நப்புணர்ந்து, இனித்
தாக்கு அணங்கு ஆவது எவன்கொல்?—அன்னுய்!

இதுவும் அது. 3

24

தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர்
எய்தினன் ஆகின்றுகொல்லோ? மகிழ்நன்
பொலந் தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலம் கொண்டு துறப்பது எவன்கொல்?—அன்னாய்!

'பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான்' என்பது கேட்ட தோழி, வாயிலாய் வந்தார் கேட்ப, தலைமகட்குச் சொல்லியது. 4

25

புயல் புறந்தந்த புனிற்று வளர் பைங் காய்
வயலைச் செங் கொடி களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு பலர்க்கு
இழை நெகிழ் செல்லல் ஆக்கும்—அன்னாய்!

இதுவும் அது. 5

26

கரந்தைஅம் செறுவில் துணை துறந்து, களவன்
வள்ளை மென் கால் அறுக்கும் ஊரன்
எம்மும், பிறரும், அறியான்;
இன்னன் ஆவது எவன்கொல்?—அன்னாய்!

தலைமகற்கு வாயிலாகப் புகுந்தார், 'நின் முனிவிற்கு அவன் பொருந்தாநின்றான்' என்றவழி, தலைமகட்குத் தோழி, 'அவன்பாடு அஃது இல்லை' என்பதுபடச் சொல்லியது. 6

27

செந்நெல்அம் செறுவில் கதிர் கொண்டு, களவன்
தண்ணக மண் அளைச் செல்லும் ஊரற்கு
எல் வளை நெகிழச் சாஅய்,
அல்லல் உழப்பது எவன்கொல்?—அன்னாய்!

தலைமகன் மனைக்கண் வருங்காலத்து வாராது தாழ்த்துழி, 'புறத்தொழுக்கம் உளதாயிற்று' எனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி சொல்லியது. 7

28

உண்துறை அணங்கு இவள் உறை நோய் ஆயின்,
தண் சேறு களவன் வரிக்கும் ஊரற்கு
ஒண் தொடி நெகிழச் சாஅய்,
மென் தோள் பசப்பது எவன்கொல்? —அன்னாய்!

இற்செறிவித்த இடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு, 'இது தெய்வத்தினான் ஆயிற்று' என்று, தமர் வெறி எடுப்புழி, அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 8

29

மாரி கடி கொள, காவலர் கடுக,
வித்திய வெண் முளை கள்வன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு உற மரீஇ,
திதலை அல்குல் நின் மகள்
பசலை கொள்வது எவன்கொல்?—அன்னாய்!

வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுப்புழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 9

30

வேப்பு நனை அன்ன நெடுங் கட் கள்வன்
தண்ணக மண் அளை நிறைய, நெல்லின்
இரும் பூ உறைக்கும் ஊரற்கு இவள்
பெருங் கவின் இழப்பது எவன்கொல்?—அன்னாய்!

இதுவும் அது. 10

4. தோழிக்கு உரைத்த பத்து

31

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
கடன் அன்று என்னும்கொல்லோ—நம் ஊர்
முடம் முதிர் மருதத்துப் பெருந் துறை
உடன் ஆடு ஆயமோடு உற்ற சூளே?

முன் ஒரு நாள் தன்னோடு புதுப்புனல் ஆடுழி, 'இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்' என ஆயத்தாரோடு சூளுற்ற தலைமகன் பின்பும் பரத்தையரோடு புனலாடத் தொடங்குகின்றான் என்பது கேட்ட தலைமகள், அவன் உழையர் கேட்ப, தோழிக்குச் சொல்லியது. 1

32

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
ஒரு நாள் நம் இல் வந்ததற்கு, எழு நாள்
அழுப என்ப, அவன் பெண்டிர்—
தீ உறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 2

33

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
மருது உயர்ந்து ஓங்கிய விரி பூம் பெருந் துறை,
பெண்டிரொடு ஆடும் என்ப—தன்
தண் தார் அகலம் தலைத்தலைக் கொளவே.

இதுவும் அது. 3

34

அம்ம வாழி, தோழி! நம் ஊர்ப்
பொய்கைப் பூத்த, புழைக் கால் ஆம்பல்
தாது ஏர் வண்ணம் கொண்டன—
ஏதிலாளர்க்குப் பசந்த என் கண்ணே.

இதுவும் அது. 4

35

அம்ம வாழி, தோழி! நம் ஊர்ப்
பொய்கை ஆம்பல் நார் உரி மென் கால்
நிறத்தினும் நிழற்றுதல்மன்னே;
இனிப் பசந்தன்று, என் மாமைக் கவினே.

வாயிலாய்ப் புகுந்தார் தலைமகன் குணம் கூறிய வழி, 'அவனுக்கு இல்லாதனவே கூறுதலால், இப்பொழுதுகாண் என் மேனி பசந்தது' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 5

36

அம்ம வாழி, தோழி! ஊரன்
நம் மறந்து அமைகுவன்ஆயின், நாம் மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம்மன்னே—
கயல் எனக் கருதிய உண்கண்
பயலைக்கு ஒல்காவாகுதல் பெறினே.

தான் வாயில் நேரும் குறிப்பினளானமை அறியாது, தோழி வாயில் மறுத்துழி, அவள் நேரும் வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது. 6

37

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து, பனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்;
தேற்றான், உற்ற சூள் வாய்த்தல்லே.

தலைமகளைச் சூளினால் தெளித்தான் என்பது கேட்ட காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது. 7

38

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
தன் சொல் உணர்ந்தோர் அறியலன்—என்றும்
தண் தளிர் வௌவும் மேனி,
ஒண் தொடி முன்கை, யாம் அழப் பிரிந்தே.

தலைமகன் மனைவயிற் போகக் கருதினான் என்பது சொல்லிய தன் தோழிக்குப் பரத்தை சொல்லியது. 8

39

அம்ம வாழி, தோழி! ஊரன்
வெம் முலை அடைய முயங்கி, நம் வயின்
திருந்துஇழைப் பணைத்தோள் நெகிழ,
பிரிந்தனன்ஆயினும், பிரியலன் மன்னே.

ஒரு ஞான்று தலைவன் தன் மனைக்கண் சென்றது கொண்டு, 'அவன் பெண்மைநலம் எல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தான்' என்பது தலைவி கூறினள் எனக் கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினர் கேட்ப, தன் தோழிக்குச் சொல்லியது. 9

40

'அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
ஒண் தொடி முன்கை யாம் அழப் பிரிந்து, தன்
பெண்டிர் ஊர் இறைகொண்டனன்' என்ப—
கெண்டை பாய்தர அவிழ்ந்த
வண்டு பிணி ஆம்பல் நாடுகிழவோனே.

உலகியல் பற்றித் தலைவன் தன் மனைக்கண் ஒரு ஞான்று போனதே கொண்டு, 'அவ் வழிப் பிரியாது உறைகின்றான்' என்று, அயற் பரத்தையர் பலரும் கூறினர் என்பது கேட்ட காதற்பரத்தை, அவர் பாங்காயினர் கேட்ப, தன் தோழிக்குச் சொல்லியது.10

5. புலவிப் பத்து

41

'தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையொடு
வெண் பூம் பொய்கைத்து, அவன் ஊர்' என்ப; அதனால்
தன் சொல் உணர்ந்தோர் மேனி
பொன் போல் செய்யும் ஊர்கிழவோனே.

கழறித் தெருட்டற் பாலராகிய அகம் புகல் மரபின் வாயில்கள் புகுந்துழி, தலைவனை யும் பாணன் முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து, தலைவி கூறியது. 1

42

மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள்கொல்லோ—
யாணர் ஊர!—நின் மாண் இழை அரிவை?
காவிரி மலிர்நிறை அன்ன நின்
மார்பு நனி விலக்கல் தொடங்கியோளே.

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை, 'தலைவன் பிற பரத்தையருடன் ஒழுகினன்' என்று புலந்தாளாக, அதனை அறிந்த தலைவி, அவன் தன் இல்லத்துப் புகுந்துழி, தான் அறிந்தமை தோன்றச் சொல்லியது. 2

43

அம்பணத்து அன்ன யாமை ஏறி,
செம்பின் அன்ன பார்ப்புப் பல துஞ்சும்

யாணர் ஊர! நின்னினும்
பாணன் பொய்யன்; பல சூளினனே.

பாணன் வாயிலாகப் புகுந்து தெளிப்ப மறுத்த தலைமகள், பாணனோடு தலைவன் புகுந்து தெளித்துழிச் சொல்லியது 3

44

தீம் பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத்
தாய் முகம் நோக்கி வளர்ந்திசினாஅங்கு,
அதுவே ஐய, நின் மார்பே;
அறிந்தனை ஒழுகுமதி; அறனுமார் அதுவே.

பரத்தையர் மனைக்கண்ணே பல் நாள் தங்கி, தன் மனைக்கண்ணே வந்த தலைமகற்குத் தோழி கூறியது. 4

45

கூதிர் ஆயின் தண் கலிழ் தந்து,
வேனில் ஆயின் மணி நிறம் கொள்ளும்
யாறு அணிந்தன்று, நின் ஊரே;
பசப்பு அணிந்தனவால்—மகிழ்ந!—என் கண்ணே.

நெடுநாள் பரத்தையர் இடத்தனாய் ஒழுகிய தலைமகன் மனைவயின் சென்றுழித் தோழி சொல்லியது. 5

46

நினக்கே அன்று அஃது; எமக்குமார் இனிதே—
நின் மார்பு நயந்த நல் நுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை ஆகி,
ஈண்டு நீ அருளாது, ஆண்டு உறைதல்லே.

மனைக்கண் வருதல் பரத்தை விலக்க விலங்கி, பின்பு, உலகியல் பற்றி, அவள் குறிப்பினோடும் வந்தமை அறிந்த தோழி தலைமகனைப் புலந்து சொல்லியது. 6

47

முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த
அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்
அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர!
மாண் இழை ஆயம் அறியும்—நின்
பாணன் போலப் பல பொய்த்தல்லே.

பாணற்கு வாயில் மறுத்த தலைமகள் பின் அப் பாணனோடு தலைமகன் புகுந்து, தன் காதன்மை கூறியவழிச் சொல்லியது. 7

48

வலை வல் பாண்மகன் வால் எயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டு கழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!
வேண்டேம், பெரும!—நின் பரத்தை
ஆண்டுச் செய் குறியோடு ஈண்டு நீ வரலே.

பரத்தையர்மாட்டு ஒழுகாநின்று தன் மனைக்கண் சென்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது. 8

49

அம் சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சில் மீன் சொரிந்து, பல் நெற்பெறூஉம்
யாணர் ஊர! நின் பாண்மகன்
யார் நலம் சிதையப் பொய்க்குமோ, இனியே?

பாணன் வாயிலாகப் பரத்தையோடு கூடினுன் என்பது கேட்ட தலைமகள் தனக்கும் பாணனுல் காதன்மை கூறுவிப்பான் புக்க தலைமகற்குச் சொல்லியது. 9

50

துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்—
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர!—
தஞ்சம் அருளாய் நீயே; நின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே.

மனையின் நீங்கிப் பரத்தையிடத்துப் பல் நாள் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது. 10

6. தோழி கூற்றுப் பத்து

51

நீர் உறை கோழி நீலச் சேவல்
கூர் உகிர்ப் பேடை வயாஅம் ஊர!
புளிங்காய் வேட்கைத்து அன்று, நின்
மலர்ந்த மார்பு—இவள் வயாஅ நோய்க்கே.

வாயில் பெற்றுப் புகுந்து போய்ப் புறத்தொழுக்கம் ஒழுகி, பின்பும் வாயில் வேண்டும் தலைமகற்குத் தோழி மறுத்தது. 1

52

வயலைச் செங் கொடிப் பிணையல் தைஇச்
செவ் விரல் சிவந்த சேயரி மழைக் கண்
செவ் வாய்க் குறுமகள் இனைய;
எவ் வாய் முன்னின்று—மகிழ்ந!—நின் தேரே?

வாயில் பெற்றுக் கூடியிருந்த தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது. 2

53

துறை எவன் அணங்கும், யாம் உற்ற நோயே?—
சிறை அழி புதுப் புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன ஊர!—நீ உற்ற சூளே.

தலைவி தன்னுடன் போய்ப் புனலாடிய வழி, 'இது பரத்தையருடன் ஆடிய துறை' என நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமையை உணர்ந்த தலைமகன், மனைவயின் புகுந்துழி, 'தெய்வங்கள் உறையும் துறைக்கண்ணே நாம் ஆடினவதனுல் பிறந்தது கொல், நினக்கு இவ் வேறுபாடு?' என்று வினுயினுற்கு அவள் சொல்லியது. 3

54

திண் தேர்த் தென்னவன் நல் நாட்டு உள்ளதை
வேனில்ஆயினும் தண் புனல் ஒழுகும்
தேனூர் அன்ன இவள் தெரிவளை நெகிழ,
ஊரின் ஊரனை நீ தர, வந்த
பைஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல், அம்ம! அம் முறை வரினே.

வாயில் வேண்டிவந்த தலைமகற்குத் தலைமகள் குறிப்பு அறிந்த தோழி, அவன் கொடுமை கூறி, வாயில் மறுத்தது. 4

55

கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும்,
தேர் வண் கோமான், தேனூர் அன்ன இவள்
நல் அணி நயந்து நீ துறத்தலின்,
பல்லோர் அறியப் பசந்தன்று, நுதலே.

வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுகி, வாயில் வேண்டி வந்து, தன் மெலிவு கூறிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது. 5

56

பகல் கொள் விளக்கோடு இரா நாள் அறியா,
வெல் போர்ச் சோழர், ஆமூர் அன்ன இவள்
நலம் பெறு சுடர் நுதல் தேம்ப,
எவன் பயம் செய்யும், நீ தேற்றிய மொழியே?

புறத்தொழுக்கம் உளதாகியது அறிந்து தலைமகள் மெலிந்துழி, 'அஃது இல்லை' என்று தேற்றும் தலைமகற்குத் தோழி சொல்லியது. 6

57

பகலில் தோன்றும் பல் கதிர்த் தீயின்
ஆம்பல்அம் செறுவின் தேனூர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய,
அனைநலம் உடையளோ—மகிழ்ந! —நின் பெண்டே?

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று என்பது கேட்ட தோழி அவனை வினவியது. 7

58

விண்டு அன்ன வெண்ணெற் போர்வின்,
கை வண் விராஅன், இருப்பை அன்ன
இவள் அணங்குற்றனை போறி;
பிறர்க்கும் அனையையால்; வாழி நீயே!

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் புலந்த தலைமகற்குத் தோழி கூறியது. 8

59

கேட்டிசின்—வாழியோ, மகிழ்ந!—ஆற்றுற,
மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர
நினக்கு மருந்து ஆகிய யான், இனி,
இவட்கு மருந்து அன்மை நோம், என் நெஞ்சே.

தலைமகள் ஆற்றுளாம்வண்ணம் மனைக்கண் வரவு சுருங்கிய தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகிய வழி ஆற்றுளாகிய தோழி சொல்லியது. 9

60

பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி ஊர! நின் மொழிவல்: என்றும்
துஞ்சு மனை நெடு நகர் வருதி;
அஞ்சாயோ, இவள் தந்தை கை வேலே?

வரையாது ஒழுகும் தலைமகன் இரவுக்குறி வந்துழித் தோழி சொல்லியது. 10

7. கிழத்தி கூற்றுப் பத்து

61

நறு வடி மாஅத்து விளைந்து உகு தீம் பழம்
நெடு நீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்,
கை வண் மத்தி, கழாஅர் அன்ன
நல்லோர் நல்லோர் நாடி,
வதுவை அயர விரும்புதி நீயே.

'வதுவை அயர்ந்தாள் ஒரு பரத்தையைச் சில் நாளில் விட்டு, மற்றொரு பரத்தையை வதுவை அயர்ந்தான்' என்பது அறிந்த தலைமகள் அவன் மனைவயின் புக்குழிப் புலந்தாளாக, 'இது மறைத்தற்கு அரிது' என உடன்பட்டு, 'இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது' என்றாற்கு அவள் சொல்லியது. 1

62

இந்திர விழவில் பூவின் அன்ன
புன் தலைப் பேடை வரி நிழல் அகவும்
இவ் ஊர் மங்கையர்த் தொகுத்து, இனி
எவ் ஊர் நின்றன்று—மகிழ்ந!—நின் தேரே?

இதுவும் அது. 2

63

பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்
வாளை நாள் இரை பெறூஉம் ஊர!
எம் நலம் தொலைவது ஆயினும்,
துன்னலம்—பெரும!—பிறர்த் தோய்ந்த மார்பே.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து கூறியது. 3

64

அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலம் மிகு புதுப் புனல் ஆட, கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்;
பலரே தெய்ய; எம் மறையாதீமே.

தலைமகன் பரத்தையரோடு புனலாடினான் என்பது அறிந்த தலைமகள் அவன் மறைத்துழிச் சொல்லியது. 4

65

கரும்பு நடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசி களையும் பெரும் புனல் ஊர!
புதல்வனை ஈன்ற எம் மேனி
முயங்கன்மோ தெய்ய; நின் மார்பு சிதைப்பதுவே.

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது. 5

66

உடலினென் அல்லேன்; பொய்யாது உரைமோ:
யார் அவள், மகிழ்ந! தானே—தேரொடு,
தளர்நடைப் புதல்வனை உள்ளி, நின்
வள மனை வருதலும், வெளவியோளே?

புதல்வனைப் பிரியாதவன் பிரிந்து, புறத்துத் தங்கி, வந்தானாக, அவனோடு புலந்து தலைமகள் சொல்லியது. 6

67

மடவள் அம்ம, நீ இனிக் கொண்டோளே—
‘தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்
பெரு நலம் தருக்கும்’ என்ப: விரிமலர்த்
தாது உண் வண்டினும் பலரே,
ஓதி ஒள் நுதல் பசப்பித்தோரே.

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை புறன்உரைத்தாள் எனக் கேட்ட தலைவி தலைமகன் வந்துழி, அவள் திறத்தாராய் நின்று ஒழுகும் வாயில்கள் கேட்பச் சொல்லியது. 7

68

கன்னி விடியல், கணைக் கால் ஆம்பல்
தாமரை போல மலரும் ஊர!
பேணாளோ நின் பெண்டே—
யான் தன் அடக்கவும், தான் அடங்கலளே?

பரத்தை தான் தலைமகளைப் புறங்கூறி வைத்து, தன்னைத் தலைமகள் புறங்கூறினாளாகப் பிறர்க்குக் கூறினமை கேட்ட தலைவி தலைமகற்குச் சொல்லியது. 8

69

கண்டனெம் அல்லமோ, மகிழ்ந! நின் பெண்டே?—
பலர் ஆடு பெருந் துறை, மலரொடு வந்த

தண் புனல் வண்டல் உய்த்தென,
உண்கண் சிவப்ப, அழுது நின்றோளே!

தலைமகன் பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையைக் களவில் மணந்து ஒழுகுகின்றதனை அறிந்த தலைமகள், 'தனக்கு இல்லை' என்று அவன் மறைத்துழிச் சொல்லியது. 9

70

பழனப் பல் மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மா நீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர்; நறியர்—நின் பெண்டிர்:
பேஎய் அனையம், யாம்; சேய் பயந்தனமே.

பரத்தையரோடு பொழுது போக்கி நெடிது துய்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது. 10

8. புனலாட்டுப் பத்து

71

சூது ஆர் குறுந் தொடிச் சூர் அமை நுடக்கத்து
நின் வெங் காதலி தழீஇ, நெருநை
ஆடினை என்ப, புனலே; அலரே
மறைத்தல் ஒல்லுமோ, மகிழ்ந?
புதைத்தல் ஒல்லுமோ, ஞாயிற்றது ஒளியே?

பரத்தையரோடு புனலாடினன் எனக் கேட்டுப் புலந்த தலைமகள் தலைமகன் அதனை இல்லை என்று மறைத்துழிச் சொல்லியது. 1

72

வயல் மலர் ஆம்பல் கயில் அமை நுடங்கு தழைத்
திதலை அல்குல், துயல்வரும் கூந்தல்,
குவளை உண்கண், ஏஎர் மெல்லியல்
மலர் ஆர் மலிர்நிறை வந்தென,
புனலாடு புணர்துணை ஆயினள், எமக்கே.

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப் புனல் ஆட வேண்டிய தலைமகன் களவுக் காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது. 2

73

வண்ண ஒண் தழை நுடங்க, வால் இழை
ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தென,
கள் நறுங் குவளை நாறித்
தண்ணென்றிசினே—பெருந் துறைப் புனலே.

இதுவும் அது. 3

74

விசும்பு இழி தோகைச் சீர் போன்றிசினே—
பசும் பொன் அவிர் இழை பைய நிழற்ற,

கரை சேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள் தண் நறுங் கதுப்பே.

இதுவும் அது. 4

75

பலர் இவண் ஒவ்வாய், மகிழ்ந!—அதனால்,
அலர் தொடங்கின்றால் ஊரே—மலர
தொல் நிலை மருதத்துப் பெருந் துறை,
நின்னோடு ஆடினள், தண் புனல்-அதுவே.

பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத்துக் கூறியவழித் தோழி கூறியது. 5

76

பைஞ்சாய்க் கூந்தல், பசு மலர்ச் சுணங்கின்—
தண் புனலாடி, தன் நலம் மேம்பட்டனள்—
ஒண் தொடி மடவரல், நின்னோடு,
அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே.

இதுவும் அது. 6

77

அம்ம வாழியோ, மகிழ்ந! நின் மொழிவல்:
பேர் ஊர் அலர் எழ, நீர் அலைக் கலங்கி,
நின்னொடு தண் புனல் ஆடுதும்;
எம்மொடு சென்மோ; செல்லல், நின் மனையே.

முன் ஒரு ஞான்று தலைவியோடு புனலாடினான் எனக்கேட்டு, 'இவனுடன் இனி ஆடேன்' என உட்கொண்ட பரத்தை, 'புதுப்புனல் ஆடப்போது' என்ற தலைமகற்குச் சொல்லியது. 7

78

கதிர் இலை நெடு வேற் கடு மான் கிள்ளி
மதில் கொல் யானையின், கதழ்பு, நெறி வந்த,
சிறை அழி புதுப்புனல் ஆடுகம்;
எம்மொடு கொண்மோ, எம் தோள் புரை புணையே.

இதுவும் அது. 8

79

'புதுப் புனல் ஆடி அமர்த்த கண்ணள்,
யார் மகள், இவள்?' எனப் பற்றிய மகிழ்ந!
யார் மகள்ஆயினும் அறியாய்;
நீ யார் மகனை, எம் பற்றியோயே?

தன்னொடு கூடாது தனித்துப் புனலாடுகின்றான் எனக் கேட்டு, தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தானும் தனியே போய்ப் புனலாடினாளாக, அவனை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று, தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைப்பற்றிய வழி அவள் தோழி சொல்லியது. 9

80

புலக்குவெம்அல்லேம்; பொய்யாது உரைமோ:
நலத்தகு மகளிர்க்குத் தோட் துணை ஆகி,
தலைப் பெயற் செம் புனல் ஆடித்
தவநனி சிவந்தன, மகிழ்ந! நின் கண்ணே.

தன்னை ஒழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது. 10

9. புலவி விராய பத்து

81

குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்,
மலர் அணி வாயிற் பொய்கை, ஊர! நீ
என்னை 'நயந்தனென்' என்றி; நின்
மனையோள் கேட்கின், வருந்துவள் பெரிதே.

தன்னைக் கொடுமை கூறினள் தலைமகள் என்பது கேட்ட பரத்தை, தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினனாக, அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது. 1

82

வெகுண்டனள் என்ப, பாண! நின் தலைமகள்—
'மகிழ்நன் மார்பின் அவிழ் இணர் நறுந் தார்த்
தாது உண் பறவை வந்து, எம்
போது ஆர் கூந்தல் இருந்தன' எனவே.

மனைவயிற் புகுந்த பாணற்குத் தலைமகன் கேட்குமாற்றால் தலைமகள் சொல்லியது. 2

83

மணந்தனை அருளாய்ஆயினும், பைபயத்
தணந்தனை ஆகி, உய்ம்மோ—நும் ஊர்
ஒண் தொடி முன் கை ஆயமும்
தண் துறை ஊரன் பெண்டு எனப்படற்கே.

வரைந்த அணுமைக்கண்ணே தலைமகற்குப் புறத்தொழுக்கம் உண்டாகிய வழி, அதனை அறிந்த தலைவி அவனோடு புலந்து சொல்லியது. 3

84

செவியின் கேட்பினும் சொல் இறந்து வெகுள்வோள்,
கண்ணின் காணின், என் ஆகுவள்கொல்—
நறு வீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண் கயம் போல,
பலர் படிந்து உண்ணும் நின் பரத்தை மார்பே?

பரத்தையர் மனைக்கண் தங்கிப் புணர்ச்சிக் குறியோடு வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது. 4

85

வெண் நுதற் கம்புள் அரிக் குரற் பேடை
தண் நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்
மறு இல் யாணர் மலி கேழ் ஊர! நீ
சிறுவரின் இனைய செய்தி;
நகாரோ—பெரும!—நிற் கண்டிசினோரே?

தலைமகன் பரத்தையர்மேல் காதல் கூர்ந்து நெடித்துச் செல்வுழி, மனையகம் புகுந்தானாகத் தலைவி கூறியது. 5

86

வெண் தலைக் குருகின் மென் பறை விளிக் குரல்
நீள் வயல் நண்ணி இமிழும் ஊர!
எம் இவண் நல்குதல் அரிது;
நும் மனை மடந்தையொடு தலைப்பெய்தீமே.

'புதல்வன் கூறிய மாற்றம் தலைமகட்குப் பாங்காயினார் கூறக் கேட்டான்' என்பது அறிந்த பரத்தை அதற்குப் புலந்து, தலைமகற்குச் சொல்லியது. 6

87

பகன்றைக் கண்ணிப் பல் ஆன் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர! நின் மனையோள்
யாரையும் புலக்கும்; எம்மை மற்று எவனோ?

தலைமகள் தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட காதற்பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்ப, தலைமகனோடு புலந்து சொல்லியது. 7

88

வண் துறை நயவரும் வள மலர்ப் பொய்கைத்
தண் துறை ஊரனை, எவ்வை எம் வயின்
வருதல் வேண்டுதும் என்பது
ஒல்லேம் போல், யாம் அது வேண்டுதுமே.

தலைமகனை நயப்பித்துக் கொள்கையில் விருப்பு இல்லாதாள் போல, அவ்வாறு கோடலையே விரும்புவாள், 'அது தனக்கு முடியாது' எனத் தலைமகள் புறனுரைத்தாள் எனக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார்க்குச் சொல்லியது. 8

89

அம்ம வாழி, பாண! எவ்வைக்கு
எவன்? பெரிது அளிக்கும் என்ப—பழனத்து
வண்டு தாது ஊதும் ஊரன்
பெண்டு என விரும்பின்று, அவள்தன் பண்பே.

'தலைமகன் தலைமகளைப் போற்றி ஒழுகாநின்றான்' என்பது கேட்ட காதற்பரத்தை அவன் பாணனுக்குச் சொல்லுவாளாய் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. 9

90

மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டனகொல்?
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான்கொல்?
அன்னது ஆகலும் அறியாள்,
எம்மொடு புலக்கும், அவன் புதல்வன் தாயே.

தலைமகன் தன் மனைக்கண் செல்லாமல் தான் விலக்குகின்றாளாகத் தலைமகள் கூறினாள் என்பது கேட்ட காதற்பரத்தை தலைமகன் கேட்குமாற்றால் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. 10

10. எருமைப் பத்து

91

நெறி மருப்பு எருமை நீல இரும் போத்து
வெறி மலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன் மகள் இவள்;
பழன வெதிரின் கொடிப் பிணையலளே.

குறைவேண்டிப் பின்னின்று வந்த தலைமகற்குத் தோழி, 'இவள் இளையள் விளைவு இலள்' எனச் சேட்படுத்தது. 1

92

கருங் கோட்டு எருமைச் செங் கட் புனிற்று ஆ
காதல் குழவிக்கு ஊறு முலை மடுக்கும்
நுந்தை, நும் ஊர் வருதும்—
ஒண் தொடி மடந்தை! நின்னை யாம் பெறினே.

'நினக்கு வரைந்து தருதற்குக் குறை நின் தமர் அங்கு வந்து கூறுமையே' எனத் தோழி கூறினாளாக, தலைமகள் முகம் நோக்கி, 'இவள் குறிப்பினால் கூறினாள்' என்பது அறிந்த தலைமகன், 'வரைவு மாட்சிமைப்படின் நானே வருவல்' எனத் தலைமகட்குச் சொல்லியது. 2

93

எருமை நல் ஏற்றினம் மேயல் அருந்தென,
பசு மோரோடமோடு ஆம்பல் ஒல்லா,
செய்த வினைய மன்ற—பல் பொழில்
தாது உண் வெறுக்கைய ஆகி, இவள்
போது அவிழ் முச்சி ஊதும் வண்டே.

முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறிநாற்றத்தால் பண்டையளவு அன்றி வண்டுகள் மொய்த்தனவாக, 'இதற்குக் காரணம் என்?' என்று வினாவிய செவிலித் தாய்க்குக் கூறுவாள் போன்று, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது. 3

94

மள்ளர் அன்ன தடங் கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையொடு வதியும்

நிழல் முதிர் இலஞ்சிப் பழனத்ததுவே—
கழனித் தாமரை மலரும்,
கவின் பெறு சுடர் நுதல் தந்தை, ஊரே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீள்கின்றான் சொல்லியது. 4

95

கருங் கோட்டு எருமை கயிறு பரிந்து அசைஇ,
நெடுங் கதிர் நெல்லின் நாள் மேயல் ஆரும்
புனல் முற்று ஊரன், பகலும்,
படர் மலி அரு நோய் செய்தனன், எமக்கே.

உண்டிக்காலத்து மனைக்கண் வருதலும் சுருங்கி, பரத்தையிடத்தனாய்த் தலைமகன் ஒழுகியவழி, அவற்கு வாயிலாய் வந்தார்க்குத் தலைமகள் சொல்லியது. 5

96

அணி நடை எருமை ஆடிய அள்ளல்,
மணி நிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகள், இவள்;
பழன ஊரன் பாயல் இன் துணையே.

பரத்தையர் பலரோடும் ஒழுகுதல் கண்டு பொறாதிருந்த தலைமகள், தலைமகன் மனைக்கண் புகுந்துழி, உடன்படுதல் கண்ட வாயில்கள் தம்முள்ளே சொல்லியது. 6

97

பகன்றை வால் மலர் மிடைந்த கோட்டைக்
கருந் தாள் எருமைக் கன்று வெரூஉம்,
பொய்கை, ஊரன் மகள், இவள்;
பொய்கைப் பூவினும் நறுந் தண்ணியளே.

புறத்தொழுக்கம் இன்றியே இருக்கவும், 'உளது' என்று புலந்த தலைமகளைப் புலவி நீக்கிய தலைமகன், புணர்ச்சியது இறுதிக்கண், தன்னுள்ளே சொல்லியது. 7

98

தண் புனல் ஆடும் தடங் கோட்டு எருமை
திண் பிணி அம்பியின் தோன்றும் ஊர!
ஒண் தொடி மட மகள் இவளினும்
நுந்தையும் ஞாயும் கடியரோ, நின்னே?

புறத்தொழுக்கம் உளது ஆகிய துணையானே புலந்து வாயில் நேராத தலைமகள் கொடுமை தலைமகன் கூறக் கேட்ட தோழி அவற்குச் சொல்லியது. 8

99

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை,
கழனி எருமை, கதிரொடு மயக்கும்

பூக் கஞல் ஊரன் மகள், இவள்;
நோய்க்கு மருந்து ஆகிய பணைத் தோளோளே.

தோழி முதலாயினோர் தலைமகன் கொடுமை கூறி விலக்கவும், தலைமகள் வாயில் நேர்ந்துழி, அவன் உவந்து சொல்லியது. 9

100

புனலாடு மகளிர் இட்ட ஒள் இழை,
மணல் ஆடு சிமையத்து, எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகள், இவள்;
பாணர் நரம்பினும் இன் கிளவியளே.

வாயில் நேர்தற்பொருட்டு முகம்புகுவான் வேண்டி இயற்பழித்துழி, தலைமகள் இயற்பட மொழிந்த திறம் தலைமகற்குத் தோழி சொல்லியது. 10

மருதம் முற்றும்

இரண்டாவது

நெய்தல்

(அம்மூவனார்)

11. தாய்க்கு உரைத்த பத்து

101

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! உதுக் காண்—
ஏர் கொடிப் பாசடும்பு பரிய ஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று, நின் மகள்
பூப் போல் உண்கண் மரீஇய
நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே.

அறத்தொடு நின்ற பின்னர் வரைதற் பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழித் தோழி செவிலிக்குக் காட்டிச் சொல்லியது. 1

102

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—நம் ஊர்
நீல் நிறப் பெருங் கடற் புள்ளின் ஆனாது,
துன்புறு துயரம் நீங்க,
இன்புற இசைக்கும், அவர் தேர் மணிக் குரலே.

இதுவும் அது. 2

103

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—புன்னையொடு
ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்
இவட்கு அமைந்தனனால் தானே;
தனக்கு அமைந்தன்று, இவள் மாமைக் கவினே.

அறத்தொடு நின்ற தோழி, வதுவை நிகழாநின்றுழி, தாய்க்குக் காட்டி உவந்து சொல்லியது. 3

104

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—நம் ஊர்ப்
பலர் மடி பொழுதின், நலம் மிகச் சாஅய்
நள்ளென வந்த இயல் தேர்ச்
செல்வக் கொண்கன் செல்வனஃது ஊரே.

புதல்வற் பெற்றுழித் தலைமகன் மனைக்கண் சென்ற செவிலிக்கு, முன்பு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி, அவன் ஊர் நன்மை காட்டிச் சொல்லியது. 4

105

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! —முழங்குகடல்
திரை தரு முத்தம் வெண் மணல் இமைக்கும்
தண்ணம் துறைவன் வந்தென,
பொன்னினும் சிவந்தன்று; கண்டிசின் நுதலே.

அறத்தொடு நின்ற பின் வேண்டுவன தருதற்குப் பிரிந்த தலைமகன் வரைவொடு வந்துழி, தலைமகள் நுதற்கண் முன்புள்ள பசப்பு நீங்கும்வண்ணம் தோன்றிய கதிர்ப்புக் காட்டி, செவிலிக்குத் தோழி சொல்லியது. 5

106

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! —அவர் நாட்டுத்
துதிக்கால் அன்னம் துணை செத்து மிதிக்கும்
தண் கடல் வளையினும் இலங்கும் இவள்
அம் கலிழ் ஆகம் கண்டிசின் நினைந்தே.

அறத்தொடு நின்ற தோழி அது வற்புறுப்பான் வேண்டிச் செவிலிக்குச் சொல்லியது. 6

107

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—என் தோழி
சுடர் நுதல் பசப்பச் சாஅய், படர் மெலிந்து,
தண் கடற் படு திரை கேட்டொறும்,
துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே.

தோழி செவிலிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது. 7

108

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! கழிய
முண்டகம் மலரும் தண் கடற் சேர்ப்பன்
எம் தோள் துறந்தனன்ஆயின்,
எவன்கொல் மற்று அவன் நயந்த தோளே?

அறத்தொடுநிலை பிறந்த பின்னும் வரைவு நீடிற்றாக, 'மற்றொரு குலமகளை வரையும் கொல்?' என்று ஐயுற்ற செவிலி குறிப்பு அறிந்த தோழி அவட்குச் சொல்லியது. 8

109

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—நெய்தல்
நீர்ப் படர் தூம்பின் பூக் கெழு துறைவன்
எம் தோள் துறந்த காலை, எவன்கொல்
பல் நாள் வரும், அவன் அளித்த பொழுதே?

அறத்தொடு நின்ற பின்பு வரைவான் பிரிந்த தலைமகன் கடிதின் வாராதவழி, ஐயுற்ற செவிலி, 'அவன் நும்மைத் துறந்தான்போலும்; நுங்கட்கு அவன் கூறிய திறம் யாது?' என்றாட்குத் தோழி சொல்லியது. 9

110

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!—புன்னை
பொன் நிறம் விரியும் பூக் கெழு துறைவனை

'என்னை' என்றும், யாமே; இவ் ஊர்
பிறிது ஒன்றாகக் கூறும்;
ஆங்கும் ஆக்குமோ, வாழிய, பாலே?

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 10

12. தோழிக்கு உரைத்த பத்து

111

அம்ம வாழி, தோழி! பாணன்
சூழ் கழிமருங்கின் நாண் இரை கொளீஇச்
சினைக் கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே—
அருந் தவம் முயறல் ஆற்றாதேமே?

'இற்செறிப்பார்' எனக் கேட்ட தலைமகள் வரையாது வந்து ஒழுகும் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது. 1

112

அம்ம வாழி, தோழி! பாசிலைச்
செருந்தி தாய இருங் கழிச் சேர்ப்பன்
தான் வரக் காண்குவம் நாமே;
மறந்தோம் மன்ற, நாணுடை நெஞ்சே.

களவு நீடுவழி, 'வரையலன்கொல்?' என்று அஞ்சிய தோழிக்குத் தலைமகன் வரையும் திறம் தெளிக்க, தெளிந்த தலைமகள் சொல்லியது. 2

113

அம்ம வாழி, தோழி! நென்னல்
ஓங்குதிரை வெண் மணல் உடைக்கும் துறைவற்கு,
ஊரார், 'பெண்டு' என மொழிய, என்னை,
அது கேட்டு, 'அன்னாய்' என்றனள், அன்னை;
பைபய 'எம்மை' என்றனென், யானே.

வரையாது வந்து ஒழுகும் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, 'நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இது' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 3

114

அம்ம வாழி, தோழி! கொண்கன்
நேரேம்ஆயினும், செல்குவம்கொல்லோ—
கடலின் நாரை இரற்றும்
மடல்அம் பெண்ணை அவனுடை நாட்டே?

இடைவிட்டு ஒழுகும் தலைமகன் வந்து சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது. 4

115

அம்ம வாழி, தோழி! பல் மாண்
நுண் மணல் அடைகரை நம்மோடு ஆடிய
தண்ணம் துறைவன் மறைஇ,
அன்னை அருங் கடி வந்து நின்றோனே!

இற் செறிப்புண்ட பின்பும், வரைந்து கொள்ள நினையாது தலைமகன் வந்தானாக, அதனை அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது. 5

116

அம்ம வாழி, தோழி! நாம் அழ,
நீல இருங் கழி நீலம் கூம்பும்
மாலை வந்தன்று, மன்ற—
காலை அன்ன காலை முந்துறுத்தே.

எற்பாட்டின்கண் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 6

117

அம்ம வாழி, தோழி! நலனே
இன்னது ஆகுதல் கொடிதே! —புன்னை
அணி மலர் துறைதொறும் வரிக்கும்
மணி நீர்ச் சேர்ப்பனை மறவாதோர்க்கே.

வரையாது வந்து ஒழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 7

118

அம்ம வாழி, தோழி! யான் இன்று,
அறனிலாளற் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்குவென் சென்றனென்;
பின் நினைந்து இரங்கிப் பெயர்தந்தேனே.

சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தோழி வாயில் மறுத்த தலைமகள், பின்பு தலைமகன் வந்துழி, நிகழ்ந்ததனை அவட்குக் கூறியதூஉம் ஆம். 8

119

அம்ம வாழி, தோழி! நன்றும்
எய்யாமையின் ஏதில பற்றி,
அன்பு இலன் மன்ற பெரிதே—
மென் புலக் கொண்கன் வாராதோனே!

'வரைதற்கு வேண்டுவன முயல்வேம்' எனச் சொல்லி வரையாது செலுத்துகின்ற தலைமகன் சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 9

120

அம்ம வாழி, தோழி! நலம் மிக
நல்லஆயின, அளிய மென் தோளே—

மல்லல் இருங் கழி மல்கும்
மெல்லம் புலம்பன் வந்தமாறே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்து சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 10

13. கிழவற்கு உரைத்த பத்து

121

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?—
முண்டகக் கோதை நனைய,
தெண் திரைப் பௌவம் பாய்ந்து நின்றோளே!

பரத்தை தலைமகற்குச் சொல்லியது. 'பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றான்' என்பது அறிந்து தலைவி புலந்துழி, 'இத் தவறு என் மாட்டு இலை; நீ இப் புலவியை நீக்க வேண்டும்' என்று தோழிக்குத் தலைமகன் கூற, புலவியை நீக்கக் கருதிய தோழி, அவள் இளமை கூறி, நகையாடிச் சொல்லியதூஉம் ஆம்.

இனி வருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இத் துறையாம் 1

122

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
ஒள் இழை உயர் மணல் வீழ்ந்தென,
வெள்ளாங்குருகை வினவுவோளே! 2

123

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
ஒண் நுதல் ஆயம் ஆர்ப்ப,
தண்ணென் பெருங் கடல் திரை பாய்வோளே! 3

124

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
வண்டற் பாவை வௌவலின்,
நுண் பொடி அளைஇக் கடல் தூர்ப்போளே! 4

125

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
தெண் திரை பாவை வௌவ,
உண்கண் சிவப்ப அழுது நின்றோளே! 5

126

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
உண்கண் வண்டினம் மொய்ப்ப,
தெண் கடற் பெருந் திரை மூழ்குவோளே! 6

127

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
தும்பை மாலை இள முலை
நுண் பூண் ஆகம் விலங்குவோளே! 7

128

கண்டிகும்அல்லமோ, கொண்க! நின் கேளே?—
உறுஅ வறு முலை மடாஅ,
உண்ணுப் பாவையை ஊட்டுவோளே! 8

129

....
....
....
(இந்தப் பாடல் கிடைக்கப்பெறவில்லை) 9

130

....
....
....
(இந்தப் பாடல் கிடைக்கப்பெறவில்லை) 10

14. பாணற்கு உரைத்த பத்து

131

நன்றே, பாண! கொண்கனது நட்பே—
தில்லை வேலி இவ் ஊர்க்
கல்லென் கௌவை எழாஅக்காலே.

வாயில் வேண்டி வந்த பாணன் தலைமகன் காதன்மை கூறினனாக, தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக் கூறியது. 1

132

அம்ம வாழி, பாண!—புன்னை
அரும்பு மலி கானல் இவ் ஊர்
அலர் ஆகின்று, அவர் அருளுமாறே.

வாயில் வேண்டி வந்த பாணன், 'நீர் கொடுமை கூற வேண்டா; நும்மேல் அருள் உடையர்' என்றாற்குத் தலைமகள் சொல்லியது. 2

133

யான் எவன் செய்கோ? பாண! —ஆனது
மெல்லம் புலம்பன் பிரிந்தென,
புல்லென்றன, என் புரி வளைத் தோளே!

வாயிலாய்ப் புகுந்த பாணன் தலைமகள் தோள் மெலிவு கண்டு, 'மனைப்புறத்துப் போய் வந்த துணையானே இவ்வாறு வேறுபடுதல் தகாது' என்றாற்கு அவள் சொல்லியது. 3

134

காண்மதி, பாண!—இருங் கழிப்...
பாய்பரி நெடுந் தேர்க் கொண்கனொடு
தான் வந்தன்று, என் மாமைக் கவினே.

பிரிவின்கண் தலைமகள் கவின் தொலைவு கண்டு வெறுத்து ஒழுகுகின்ற பாணற்குத் தலைமகன் வந்துழிக் கவின் எய்திய தலைமகள் சொல்லியது. 4

135

பைதலம்அல்லேம், பாண! —பணைத் தோள்,
ஐது அமைந்து அகன்ற அல்குல்,
நெய்தல்அம் கண்ணியை நேர்தல் நாம் பெறினே.

பரத்தை ஒருத்தியைத் தலைப்பெய்வான் வேண்டி அதனைத் தலைமகன் மறைத்து ஒழுகுகின்றது அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் பாணற்குச் சொல்லியது. 5

136

நாண் இலை மன்ற, பாண!—நீயே
கோள் நேர் இலங்கு வளை நெகிழ்த்த
கானல் அம் துறைவற்குச் சொல் உகுப்போயே!

வாயிலாய்ப் புகுந்து தலைமகன் குணம் கூறிய பாணற்கு வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது. 6

137

நின் ஒன்று வினவுவல், பாண!—நும் ஊர்த்
திண் தேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தம் நலம் பெறுபவோ மற்றே?

தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்து நீங்கின இடத்தும், அவன் முன்பு செய்த தீங்கு நினைந்து தலைமகள் வேறுபட்டிருந்தாளாக, இவி 'இந்த வேறுபாடு என்?' என்று வினவிய பாணற்கு அவள் சொல்லியது. 7

138

பண்பு இலை மன்ற, பாண!—இவ் ஊர்
அன்பு இல கடிய கழறி,
மென் புலக் கொண்கனைத் தாராதோயே!

தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்தது அறியாது வந்த பாணற்குத் தலைமகள் நகையாடிச் சொல்லியது. 8

139

அம்ம வாழி, கொண்க!—எம்வயின்
மாண் நலம் மருட்டும் நின்னினும்,
பாணன் நல்லோர் நலம் சிதைக்கும்மே.

ஆற்றாமை வாயிலாகப் புகுந்திருந்த தலைமகற்குப் பாணன் வந்துழித் தலைமகள் சொல்லியது. 9

140

காண்மதி, பாண!—நீ உரைத்தற்கு உரியை—
துறை கெழு கொண்கன் பிரிந்தென,
இறை கேழ் எல் வளை நீங்கிய நிலையே.

பாணன் தூதாகிச் செல்ல வேண்டும் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்லியது. 10

15. ஞாழற் பத்து

141

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண் துளி வீசிப்
பயலைசெய்தன பனி படு துறையே.

வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றுளாகின்ற தலைமகள், 'அவன் வரைதற்குப் பிரியவும், நீ ஆற்றுய் ஆகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது. 1

142

எக்கர் ஞாழல் இறங்கு இணர்ப் படு சினைப்
புள் இறை கூரும் துறைவனை
உள்ளேன்—தோழி!—படீஇயர் என் கண்ணே!

வரையாது வந்தொழுகும் தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானுக, 'நின் கண் துயிறற் பொருட்டு நீ அவனை மறக்க வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 2

143

எக்கர் ஞாழல் புள் இமிழ் அகன் துறை,
இனிய செய்த; நின்று, பின்
முனிவு செய்த—இவள் தட மென் தோளே.

புறத்துத் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது. 3

144

எக்கர் ஞாழல் இணர் படு பொதும்பர்த்
தனிக் குருகு உறங்கும் துறைவற்கு
இனிப் பசந்தன்று—என் மாமைக் கவினே.

'தலைமகன் வரைந்து கோடல் நினையாது, களவொழுக்கமே விரும்பி ஒழுகா நின்றுன்' என்பது அறிந்து வேறுபட்ட தலைமகள், 'அவன் கூறியவாற்ருல் இனிக் கடிதின் வரைவன்; ஆற்ருயாகாது ஒழியவேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது. 4

145

எக்கர் ஞாழற் சிறியிலைப் பெருஞ் சினை
ஓதம் வாங்கும் துறைவன்
மாயோள் பசலை நீக்கினன், இனியே!

வரைவு மறுத்த தமர் உடம்படுமாற்ருல் சான்ருேரைத் தலைமகன் விடுத்தது அறிந்த தோழி தலைமகள் கேட்குமாற்ருல் சொல்லியது. 5

146

எக்கர் ஞாழல் அரும்பு முதிர் அவிழ் இணர்
நறிய கமழும் துறைவற்கு
இனியமன்ற—என் மாமைக் கவினே.

வரைவு கடாவவும் வரையாது ஒழுகுகின்றுழி, 'நம்மை எவ்வகை நினைத்தார் கொல்லோ?' என்று ஐயுற்றிருந்த தலைமகள் வரைவு தலைவந்துழித் தோழிக்குச் சொல்லியது. 6

147

எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர்
ஒண் தழை அயரும் துறைவன்—
'தண் தழை விலை' என—நல்கினன், நாடே.

சுற்றத்தார் வேண்டிய கொடுத்துத் தலைமகன் வரைவு மாட்சிப்படுத்தமை அறிந்த தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது. 7

148

எக்கர் ஞாழல் இகந்து படு பெருஞ் சினை
வீ இனிது கமழும் துறைவனை
நீ இனிது முயங்குமதி, காதலோயே!

களவொழுக்கத்தின் விளைவு அறியாது அஞ்சிய வருத்தம் நீங்க வதுவை கரண வகையான் முடித்த பின்பு, தலைமகளைப் பள்ளியிடத்து உய்க்கும் தோழி சொல்லியது. 8

149

எக்கர் ஞாழற் பூவின் அன்ன
சுணங்கு வளர் இள முலை மடந்தைக்கு
அணங்கு வளர்த்து, அகறல் வல்லாதீமோ!

வரைந்து எய்திய தலைமகன் தலைவியோடு பள்ளியிடத்து இருந்துழித் தோழி வாழ்த்தியது. 9

150

எக்கர் ஞாழல் நறு மலர்ப் பெருஞ் சினைப்
புணரி திளைக்கும் துறைவன்
புணர்வின் இன்னான்; அரும் புணர்வினனே.

முன் ஒருகால் பிரிந்து வந்த தலைமகன் பின்னும் பிரிந்து வந்துழி அவனை முயங்காளாக, தோழி, 'நீ இவ்வாறு செய்தற்குக் காரணம் என்?' என்று வினவியவழி, தலைமகள் தோழிக்குத் தலைமகன் கேட்பச் சொல்லியது. 10

16. வெள்ளாங்குருகுப் பத்து

151

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
மிதிப்ப, நக்க கண் போல் நெய்தல்
கள் கமழ்ந்து ஆனாத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல்லேனே.

வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் வாயில் மறுப்பாள் சொல்லியது. 1

152

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
கையறுபு இரற்று கானல்அம் புலம்பந்
துறைவன் வரையும் என்ப;
அறவன் போலும்; அருளுமார் அதுவே.

தலைமகள் வாயில் மறுத்துழி, 'இவன் நின்மேல் தொடர்ச்சியில் குறைவிலன்; அருளும் உடையன்; ஆதலால் நீ இவனோடு புலத்தல் தகாது' என நெருங்கி, வாயில் நேர்விக்கும் தோழிக்கு அவள் சொல்லியது. 2

153

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
உளர, ஒழிந்த தூவி குவவு மணற்
போர்வில் பெறூஉம் துறைவன் கேண்மை
நல்நெடுங்கூந்தல் நாடுமோ-மற்றே?

பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டிய தலைமகன் கேட்குமாற்றால் வாயிலாய்ப் புகுந்தாற்குத் தோழி கூறியது. 3

154

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
கானற் சேக்கும் துறைவனோடு
யான் எவன் செய்கோ? பொய்க்கும் இவ் ஊரே?

தோழி வாயில் வேண்டி நெருங்கியவழி, வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது. 4

155

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
பதைப்ப, ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென், யானே!

பல வழியானும் வாயில் நேராளாகிய தலைமகள், 'மகப் பேற்றிற்கு உரித்தாகிய காலம் கழிய ஒழுகுகின்றாய்' என நெருங்கிய தோழிக்குச் சொல்லியது. 5

156

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
பதைப்ப, ஒழிந்த செம் மறுத் தூவி
தெண் கழிப் பரக்கும் துறைவன்
எனக்கோ காதலன்; அனைக்கோ வேறே!

பரத்தையிடத்து வாயில் விட்டு ஒழுகுகின்ற தலைமகனது வாயிலாய் வந்தார்க்குத் தோழி வாயில் மறுத்தது. 6

157

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
காலை இருந்து மாலைச் சேக்கும்
தெண் கடற் சேர்ப்பனொடு வாரான்,
தான் வந்தனன், எம் காதலோனே!

பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டி ஒழுகுகின்ற தலைமகன், 'புதல்வன் வாயிலாக வரும்' எனக் கேட்டு, அஞ்சிய தலைமகள் புதல்வன் விளையாடித் தனித்து வந்துழிச் சொல்லியது. 7

158

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
கானல்அம் பெருந் துறைத் துணையொடு கொட்கும்
தண்ணம் துறைவ! கண்டிகும்,
அம் மா மேனி எம் தோழியது துயரே.

பரத்தை புலந்துழிப் புலவி நீக்குவானாய், அஃது இடமாக வந்தமை அறிந்த தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது. 8

159

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
பசி தின, அல்கும் பனி நீர்ச் சேர்ப்ப!
நின் ஒன்று இரக்குவென்அல்லேன்;
தந்தனை சென்மோ—கொண்ட இவள் நலனே?

மருமற்பொருட்டு உண்டிக் காலத்து வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி கூறியது. 9

160

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
நொந்ததன் தலையும் நோய் மிகும் துறைவ!
பண்டையின் மிகப் பெரிது இனைஇ,
முயங்குமதி, பெரும! மயங்கினள் பெரிதே!

புலந்த காதற்பரத்தை புலவி தீராது தலைமகன் வாயில் வேண்டி வந்தான் என்றது அறிந்த தலைமகள் வாயில் மறுத்தது. 10

17. சிறு வெண் காக்கைப் பத்து

161

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
கருங் கோட்டுப் புன்னைத் தங்கும் துறைவற்குப்
பயந்து நுதல் அழியச் சாஅய்,
நயந்த நெஞ்சம் நோய்ப்பாலஃதே!

ஒருவழித் தணந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றுளாய்ச் சொல்லியது. 1

162

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
நீத்து நீர் இருங் கழி இரை தேர்ந்து உண்டு,
பூக் கமழ் பொதும்பர்ச் சேக்கும்
துறைவன் சொல்லோ பிற ஆயினவே!

இதுவும் அது. 2

163

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
இருங் கழித் துவலை ஒலியின் துஞ்சும்
துறைவன் துறந்தென, துறந்து என்
இறை ஏர் முன் கை நீங்கிய, வளையே.

இதுவும் அது. 3

164

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
இருங் கழி மருங்கின் அயிரை ஆரும்
தண்ணம் துறைவன் தகுதி
நம்மோடு அமையாது, அலர் பயந்தன்றே!

தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 4

165

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
அறு கழிச் சிறு மீன் ஆர மாந்தும்
துறைவன் சொல்லிய சொல் என்
இறை ஏர் எல் வளை கொண்டு நின்றதுவே!

இதுவும் அது. 5

166

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
வரி வெண் தாலி வலை செத்து வெரூஉம்
மெல்லம் புலம்பற் தேறி,
நல்ல ஆயின, நல்லோள் கண்ணே.

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் பசப்பிற்கு வருந்திய தோழி அவனை இயற்பழித்துக் கூறியது. 6

167

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
இருங் கழி இனக் கெடிறு ஆரும் துறைவன்
நல்குவன் போலக் கூறி,
நல்கான்ஆயினும், தொல் கேளன்னே.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் விட, வாயிலாய் வந்தார்க்கு அவன் கொடுமை கூறித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் சொல்லியது. 7

168

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
துறை படி அம்பி அகமணை ஈனும்
தண்ணம் துறைவன் நல்கின்,
ஒண் நுதல் அரிவை பால் ஆரும்மே.

நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமை அறிந்த தலைமகள் ஆற்றாளாய்ப் பசி அட நிற்புழி, 'இதற்குக் காரணம் என்?' என்று செவிலி வினவ, தோழி அறத்தொடு நின்றது. 8

169

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
ஒள் இணர் ஞாழல் முனையின், பொதி அவிழ்
புன்னைஅம் பூஞ் சினைச் சேக்கும் துறைவன்
நெஞ்சத்து உண்மை அறிந்தும்,
என் செயப் பசக்கும்—தோழி!—என் கண்ணே?

காதற்பரத்தையை விட்டு மற்றொருத்தியுடன் ஒழுகாநின்ற தலைமகன் வாயில்வேண்டி விடுத்துழி, வாயில் நேர்தல் வேண்டி, 'நின் கண் பசந்தனகாண்' என்று முகம்புகு தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 9

170

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
இருங் கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
'நல்லன்' என்றிஆயின்;
பல் இதழ் உண்கண் பசத்தல்-மற்று எவனோ?

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகிய வழி வேறுபட்ட தலைமகள், 'அவற்கு அவ்வாறு நிகழ்ச்சி இல்லை; நம்மேல் அன்புடையன்' என்று தெளிக்கும் தோழிக்குச் சொல்லியது. 10

18. தொண்டிப் பத்து

171

திரை இமிழ் இன் இசை அளைஇ, அயலது
முழவு இமிழ் இன் இசை மறுகுதொறு இசைக்கும்
தொண்டி அன்ன பணைத் தோள்,
ஒண் தொடி, அரிவை—என் நெஞ்சு கொண்டோளே!

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் ஆயத்தோடு செல்லும் தலைமகளைக் கண்டு சொல்லியது. 1

172

ஒண் தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே!
வண்டு இமிர் பனித் துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடல் ஒலித் திரை போல,
இரவினானும் துயில் அறியேனே!

'கண் துயில்கின்றிலை; இதற்குக் காரணம் என்?' என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் சொல்லியது. 2

173

இரவினானும் இன் துயில் அறியாது
அரவு உறு துயரம் எய்துப—தொண்டித்
தண் நறு நெய்தல் நாறும்
பின்இருங் கூந்தல் அணங்குற்றோரே.

தலைமகன் குறிவழிச் சென்று தலைமகளைக் கண்ட பாங்கன் தன்னுள்ளே சொல்லியது. 3

174

அணங்குடைப் பனித் துறைத் தொண்டி அன்ன
மணம் கமழ் பொழில் குறி நல்கினள்—நுணங்குஇழை
பொங்கு அரி பரந்த உண்கண்,
அம் கலிழ் மேனி—அசைஇய எமக்கே.

குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டு வந்த பாங்கன், 'அவள் நின்றுழி நின்றாள்' என்று கூறியவழி, ஆண்டுச் செல்லக் கருதிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது. 4

175

எமக்கு நயந்து அருளினைஆயின், பணைத் தோள்
நல் நுதல் அரிவையொடு மென்மெல இயலி,
வந்திசின் வாழியோ, மடந்தை!—
தொண்டி அன்ன நின் பண்பு பல கொண்டே.

பாங்கற் கூட்டங் கூடி நீங்கும் தலைமகன், 'இனி வருமிடத்து நின் தோழியோடும் வர வேண்டும்' எனத் தலைமகட்குச் சொல்லியது. 5

176

பண்பும் பாயலும் கொண்டனள்—தொண்டித்
தண் கமழ் புது மலர் நாறும் ஒண் தொடி,
ஐது அமைந்து அகன்ற அல்குல்,
கொய்தளிர்மேனி!—கூறுமதி தவறே.

தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழிச் சென்ற தலைமகன், 'இவள் என்னை இவை கோடற்குக் காரணம் என்?' என்று தோழியை வினவியது. 6

177

தவறு இலர்ஆயினும், பனிப்ப மன்ற—
இவறு திரை திளைக்கும் இடு மணல் நெடுங் கோட்டு
முண்டக நறு மலர் கமழும்
தொண்டி அன்னோள் தோள் உற்றோரே.

தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழி, 'இவள் என்னை வருத்துதற்குச் செய்த தவறு என்?' என்று வினவிய தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது. 7

178

தோளும் கூந்தலும் பல பாராட்டி,
வாழ்தல் ஒல்லுமோ-மற்றே—செங்கோற்

குட்டுவன் தொண்டி அன்ன
எற்கண்டு நயந்து, நீ நல்காக்காலே?

தலைமகன் தோழியை இரந்து குறையுறுவான் சொல்லியது. 8

179

நல்குமதி, வாழியோ! நளி நீர்ச் சேர்ப்ப!—
அலவன் தாக்கத் துறை இருப் பிறழும்
இன் ஒலித் தொண்டி அற்றே,
நின் அலது இல்லா இவள் சிறு நுதலே.

குறியிடத்து வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது. 9

180

சிறு நணி வரைந்தனை கொண்மோ—பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறை தபு முது குருகு இருக்கும்
துறை கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

தாழ்த்து வரையக் கருதிய தலைமகனைத் தோழி நெருங்கி, 'கடிதின் வரைய வேண்டும்' எனச் சொல்லியது. 10

19. நெய்தற் பத்து

181

நெய்தல் உண்கண், நேர் இறைப் பணைத் தோட்
பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்
குப்பை வெண் மணல் குரவை நிறூஉம்
துறை கெழு கொண்கன் நல்கின்,
உறைவு இனிது, அம்ம!—இவ் அழுங்கல் ஊரே.

'இக் களவொழுக்கம் நெடிது செல்லின், இவ் ஊர்க்கண் அலர் பிறக்கும்' என்று அஞ்சியிருந்த தலைவி, 'தலைமகன் வரைந்து கொள்ளத் துணிந்தான்' என்று கூறிய தோழிக்குச் சொல்லியது. 1

182

நெய்தல் நறு மலர் செருந்தியொடு விரைஇக்
கை புனை நறுந் தார் கமழும் மார்பன்—
அருந் திறற் கடவுள் அல்லன்—
பெருந் துறைக் கண்டு, இவள் அணங்கியோனே.

தலைமகள் மெலிவுகண்டு, 'தெய்வத்தால் ஆயிற்று' எனத் தமர் நினைந்துழி, தோழி அறத்தொடு நின்றது. 2

183

[கணங்கொள் அருவிக் கான் கெழு நாடன்,
குறும்பொறை நாடன், நல்வயல் ஊரன்,]

தண் கடற் சேர்ப்பன் பிரிந்தென, பண்டையின்
கடும் பகல் வருதி—கையறு மாலை!—
கொடுங் கழி நெய்தலும் கூம்பக்
காலை வரினும், களைஞரோ இலரே.

வரைவிடைவைத்துப் பிரிந்துழி ஆற்றுளாகிய தலைமகள் மாலைக்குச் சொல்லியது.
(முதலிரண்டு அடிகள் சில பிரதிகளில் காணப்படுகின்றன.) 3

184

நெய்தல் இருங் கழி நெய்தல் நீக்கி
மீன் உண் குருகினம் கானல் அல்கும்
கடல் அணிந்தன்று, அவர் ஊரே;
கடலினும் பெரிது, எமக்கு அவருடை நட்பே.

வாயில் வேண்டி வந்தார் தலைமகன் அன்புடைமை கூறியவழி, வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது. 4

185

அலங்குஇதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறு கெழு துவர் வாய்,
அரம் போழ் அவ் வளைக் குறுமகள்
நரம்பு ஆர்த்தன்ன தீம் கிளவியளே.

'ஆயமகளிருள் நின்னால் நயக்கப்பட்டாள் யாவள்?' என வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது. 5

186

நாரை நல் இனம் கடுப்ப, மகளிர்
நீர் வார் கூந்தல் உளரும் துறைவ!
'பொங்குகழி நெய்தல் உறைப்ப, இத் துறைப்
பல்கால் வரூஉம் தேர்' என,
'செல்லாதீமோ' என்றனள், யாயே.

பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி செறிப்பு அறிவுறீஇ வரைவுகடாயது. 6

187

நொதுமலாளர் கொள்ளார் இவையே;
எம்மொடு வந்து கடல் ஆடு மகளிரும்
நெய்தல்அம் பகைத்தழைப் பாவை புனையார்;
உடலகம் கொள்வோர் இன்மையின்,
தொடலைக்கு உற்ற சில பூவினரே.

தோழி கையுறை மறுத்தது. 7

188

இருங் கழிச் சேயிறு இனப் புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கைஅம் பெருந் துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகை பெரிது உடைய, காதலி கண்ணே!

விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவி இல்வாழ்க்கைச் சிறப்புக் கண்டு, மகிழ்ந்து சொல்லியது. 8

189

புன்னை நுண் தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென,
நல்லஆயின—தோழி!—என் கண்ணே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவான் வந்துழிக் கண்டு உவகையோடு வந்த தோழி, 'நின் கண் மலர்ச்சிக்குக் காரணம் என்?' என்று வினாவிய தலைவிக்குச் சொல்லியது. 9

190

தண் நறு நெய்தல் தளை அவிழ் வான் பூ
வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்
மெல்லம் புலம்பன் மன்ற—எம்
பல் இதழ் உண்கண் பனி செய்தோனே.

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 10

20. வளைப் பத்து

191

கடற்கோடு செறிந்த, மயிர் வார் முன்கை,
கழிப் பூத் தொடர்ந்த இரும் பல் கூந்தல்,
கானல் ஞாழற் கவின் பெறும் தழையள்
வரையரமகளிரின் அரியள்—என்
நிறை அரு நெஞ்சம் கொண்டு ஒளித்தோளே.

'நின்னால் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள்?' என்று வினாவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது. 1

192

கோடு புலம் கொட்ப, கடல் எழுந்து முழங்க,
பாடு இமிழ் பனித் துறை ஓடுகலம் உகைக்கும்
துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன,
வீங்கின மாதோ—தோழி!—என் வளையே!

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்துழித் தலைவி முனிந்து கூறுவாள்போலத் தன் மெலிவு நீங்கினமை தோழிக்குச் சொல்லியது. 2

193

வலம்புரி உழுத வார் மணல் அடைகரை
இலங்கு கதிர் முத்தம் இருள் கெட இமைக்கும்
துறை கெழு கொண்க! நீ தந்த
அறைபுனல் வால் வளை நல்லவோ தாமே?

வரையாது வந்து ஒழுகும் தலைமகன் தலைமகட்கு வளைகொண்டு வந்து கொடுத்துழி, 'பண்டை வளை போலாவாய், மெலிந்துழி நீங்கா நலன் உடையவோ இவை?' எனத் தலைமகள் மெலிவு சொல்லித் தோழி வரைவுகடாயது. 3

194

கடற் கோடு அறுத்த, அரம் போழ் அவ் வளை
ஒண் தொடி மடவரற் கண்டிகும்; கொண்க!
நல் நுதல் இன்று மால் செய்தென,
கொன் ஒன்று கடுத்தனள், அன்னையது நிலையே.

பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு மனைக்கண் நிகழ்ந்தது கூறி, செறிப்பு அறிவுறீஇ, வரைவு கடாயது. 4

195

வளை படு முத்தம் பரதவர் பகரும்
கடல் கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடல் அருந் துயரம் நல்கி,
படல் இன் பாயல் வௌவியோளே.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் தனித்து உறைய ஆற்றுனுய்ச் சொல்லியது. 5

196

கோடு ஈர் எல் வளை, கொழும் பல் கூந்தல்,
ஆய் தொடி, மடவரல் வேண்டுதிஆயின்—
தெண் கழிச் சேயிருப் படூஉம்
தண் கடற் சேர்ப்ப!—வரைந்தனை கொண்மோ.

குறை மறுக்கப்பட்ட தலைமகன் பின்னும் குறைவேண்டியவழித் தோழி சொல்லியது. 6

197

இலங்கு வளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி,
முகம் புதை கதுப்பினள், இறைஞ்சி நின்றோளே—
புலம்பு கொள் மாலை மறைய—
நலம் கேழ் ஆகம் நல்குவள் எனக்கே.

தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் தலைவியது நிலைமை கண்டு சொல்லியது. 7

198

வளை அணி முன் கை, வால் எயிற்று அமர் நகை,
இளையர் ஆடும் தளை அவிழ் கானல்,
குறுந் துறை வினவி நின்ற
நெடுந் தோள் அண்ணற் கண்டிகும், யாமே.

பரத்தையர் மனைக்கண் பல் நாள் தங்கி, பின்பு ஆற்றாமையே வாயிலாக வந்த தலைமகனை எதிர்ப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியது. 8

199

கானல்அம் பெருந் துறைக் கலிதிரை திளைக்கும்
வான் உயர் நெடு மணல் ஏறி, ஆனுது,

காண்கம் வம்மோ—தோழி!
செறிவளை நெகிழ்த்தோன் எறிகடல் நாடே!

தலைமகன் ஒருவழித் தணந்துழி ஆற்ருளாகிய தலைமகளை ஆற்றுவிக்கும் தோழி சொல்லியது. 9

200

இலங்கு வீங்கு எல்வளை! ஆய்நுதல் கவின,
பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் இனியே;
விலங்கு அரி நெடுங் கண் ஞெகிழ்மதி;
நலம் கவர் பசலையை நகுகம் நாமே!

உடன்போக்குத் துணிந்தவழி, அதற்கு இரவின்கண் தலைமகன் வந்தது அறிந்த தோழி தலைமகளைப் பாயல் உணர்த்திச் சொல்லியது. 10

நெய்தல் முற்றும்

மூன்றாவது

குறிஞ்சி

(கபிலர்)

21. அன்னாய் வாழிப் பத்து

201

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! என்னை-
தானும் மலைந்தான்; எமக்கும் தழை ஆயின;
பொன் வீ மணி அரும்பினவே—
என்ன மரம்கொல், அவர் சாரலவ்வே!

நொதுமலர் வரைவின்கண் செவிலி கேட்குமாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிலை குறித்து உரைத்தது. 1

202

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் ஊர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற—
நெடு மலை நாடன் ஊர்ந்த மாவே.

தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமை கண்ட தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குக் காட்டிச் சொல்லியது. 2

203

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைத்
தேன் மயங்கு பாலினும் இனிய—அவர் நாட்டு
உவலைக் கூவற் கீழ
மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே.

உடன்போய் மீண்ட தலைமகள், 'நீ சென்ற நாட்டு நீர் இனிய அல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய்?' எனக் கேட்ட தோழிக்குக் கூறியது. 3

204

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! அஃது எவன்கொல்?—
வரையரமகளிரின் நிரையுடன் குழீஇ,
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி,
நல்லள்நல்லள் என்ப;
தீயேன்தில்ல, மலைகிழவோற்கே!

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 4

205

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! என் தோழி
நனி நாண் உடையள்; நின்னும் அஞ்சும்;
ஒலி வெள் அருவி ஓங்கு மலை நாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
தவ நனி வெய்யள்; நோகோ, யானே.

நொதுமலர் வரைவு வேண்டி விட்டுழித் தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, 'இவள் இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னை?' என்று வினவிய செவிலிக்குத் தோழி 5
அறத்தொடு நின்றது.

206

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! உவக்காண்—
மாரிக் குன்றத்துக் காப்பாள் அன்னன்;
தூவலின் நனைந்த தொடலை ஒள் வாள்,
பாசி சூழ்ந்த பெருங் கழல்,
தண் பனி வைகிய வரிக் கச்சினனே!

இரவுக்குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமை அறிந்த தோழி தலைமகட் 6
குச் சொல்லியது

207

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நன்றும்
உணங்கலகொல்லோ, நின் தினையே? உவக்காண்—
நிணம் பொதி வழுக்கின் தோன்றும்,
மழை தலைவைத்து, அவர் மணி நெடுங் குன்றே.

'மழையின்மையால் தினை உணங்கும்; விளையமாட்டா; புனங்காப்பச் சென்று அவரை எதிர்ப்படலாம் என்று எண்ணியிருந்த இது கூடாதாயிற்று' என வெறுத்திருந்த தலை 7
மகட்குத் தோழி சொல்லியது.

208

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! கானவர்
கிழங்கு அகழ் நெடுங் குழி மல்க வேங்கைப்
பொன் மலி புது வீ தாஅம் அவர் நாட்டு,
மணி நிற மால் வரை மறைதொறு, இவள்
அறை மலர் நெடுங் கண் ஆர்ந்தன பனியே.

செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி, அவளால் வரைவு மாட்சிமைப் பட்ட பின்பு, 'இவள் இவ்வாறு பட்ட வருத்தம் எல்லாம் நின்னின் தீர்ந்தது' என்பது குறிப்பின் 8
தோன்ற அவட்குச் சொல்லியது.

209

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நீ மற்று
யான் அவர் மறத்தல் வேண்டுதிஆயின்,
கொண்டல் அவரைப்பூவின் அன்ன
வெண் தலை மா மழை சூடி,
தோன்றல் ஆனாது, அவர் மணி நெடுங் குன்றே.

வரைவிடை வைத்துப்பிரிவின்கண் அவனை நினைவு விடாது ஆற்றாளாகியவழி, 'சிறிது 9
மறந்து ஆற்ற வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

210

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைப்
புலவுச் சேர் துறுகல் ஏறி, அவர் நாட்டுப்
பூக் கெழு குன்றம் நோக்கி நின்று,
மணி புரை வயங்கு இழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து, அவள் உற்ற நோயே.

காப்பு மிகுதிக்கண் தலைமகள் மெலிவுகண்டு, 'தெய்வத்தினான் ஆயிற்று' என்று வெறியெடுப்புழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 10

22. அன்னாய்ப் பத்து

211

நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன
வயலைஅம் சிலம்பின் தலையது
செயலைஅம் பகைத் தழை வாடும்—அன்னாய்!

தலைமகன் ஆற்றாமை கண்டு, கையுறை ஏற்ற தோழி தலைமகள் தழை ஏற்க வேண்டிக் கூறியது. 1

212

சாத்த மரத்த பூழில் எழு புகை
கூட்டு விரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ, நாம் அகல்வு?—அன்னாய்!

வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுத்தவழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 2

213

நறு வடி மாஅத்து மூக்கு இறுபு உதிர்ந்த
ஈர்ந் தண் பெரு வடு, பாலையில், குறவர்,
உறை வீழ் ஆலியின், தொகுக்கும் சாரல்
மீமிசை நல் நாட்டவர் வரின்,
யான் உயிர் வாழ்தல் கூடும்—அன்னாய்!

வரைவொடு வருதலைத் துணிந்தான் என்பது தோழி கூறக் கேட்ட தலைமகள் சொல்லியது. 3

214

சாரற் பலவின் கொழுந் துணர் நறும் பழம்
இருங் கல் விடர் அளை வீழ்ந்தென, வெற்பில்
பெருந்தேன் இறாஅல் சிதறும் நாடன்,
பேர் அமர் மழைக் கண் கலிழ, தன்
சீருடை நல் நாட்டுச் செல்லும்—அன்னாய்!

தலைமகன், 'ஒருவழித் தணப்பல்' என்று கூறியவதனை அவன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குத் தோழி சொல்லியது. 4

215

கட்டளை அன்ன மணி நிறத் தும்பி,
இட்டிய குயின்ற துளைவயின் செலீஇயர்,
தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்
தீம் குழல் ஆம்பலின், இனிய இமிரும்
புதல் மலர் மாலையும் பிரிவோர்
அதனினும் கொடிய செய்குவர்—அன்னாய்!

இரவுக்குறி நயந்த தலைமகள், பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லியது. 5

216

குறுங் கை இரும் புலிக் கோள் வல் ஏற்றை,
நெடும் புதல் கானத்து மடப் பிடி ஈன்ற
நடுங்கு நடைக் குழவி கொளீஇய, பலவின்
பழம் தூங்கு கொழு நிழல் ஒளிக்கும் நாடற்கு,
கொய்தரு தளிரின் வாடி, நின்
மெய் பிறிதாதல் எவன்கொல்?—அன்னாய்!

வரைவு நீட ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி கூறியது. 6

217

பெரு வரை வேங்கைப் பொன் மருள் நறு வீ
மான் இனப் பெருங் கிளை மேயல் ஆரும்
கானக நாடன் வரவும், இவள்
மேனி பசப்பது எவன்கொல்?—அன்னாய்!

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சி உணர்ந்த தோழி ஆற்றாளாகிய தலைமகட்குச் சொல்லியது. 7

218

நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்;
மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்;
களிறு கோட் பிழைத்த கதம் சிறந்து எழு புலி
எழுதரு மழையின் குழுமும்
பெருங் கல் நாடன் வரும்கொல்?—அன்னாய்!

தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அது கேட்டு, 'இஃது என் ஆம் கொல்?' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி தனக்கு நற்குறி செய்யக்கண்டு, 'கடிதின் வந்து வரைவான்' எனச் சொல்லியது. 8

219

கருங் கால் வேங்கை மாத் தகட்டு ஒள் வீ
இருங் கல் வியல் அறை வரிப்பத் தாஅம்
நல் மலை நாடன் பிரிந்தென,
ஒள் நுதல் பசப்பது எவன்கொல்?—அன்னாய்!

வரைவிடை வைத்துப் பிரிந்த அணுமைக்கண்ணே ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது. 9

220

அலங்குமழை பொழிந்த அகன்கண் அருவி
ஆடுகழை அடுக்கத்து இழிதரு நாடன்
பெரு வரை அன்ன திரு விறல் வியல் மார்பு
முயங்காது கழிந்த நாள், இவள்
மயங்கு இதழ் மழைக்கண் கலிழும்—அன்னாய்!

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 10

23. அம்ம வாழிப் பத்து

221

அம்ம வாழி, தோழி! காதலர்
பாவை அன்ன என் ஆய்கவின் தொலைய,
நல் மா மேனி பசப்ப,
'செல்வல்' என்ப—தம் மலை கெழு நாட்டே.

'ஒருவழித் தணந்து வரைதற்கு வேண்டுவன முடித்து வருவல்' என்று தலைமகன் கூறக் கேட்ட தலைமகள் அவன் சிறைப்புறத்தானாய்க் கேட்ப, தோழிக்குச் சொல்லியது. 1

222

அம்ம வாழி, தோழி! நம் ஊர்
நளிந்து வந்து உறையும் நறுந் தண் மார்பன்
இன்னினி வாராமாறுகொல்—
சில் நிரை ஓதி! என் நுதல் பசப்பதுவே?

குறி இரண்டன்கண்ணும் வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வந்து, சிறைப்புறத்து நின்றுழி, 'நின் நுதல் பசத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 2

223

அம்ம வாழி, தோழி! நம் மலை
வரை ஆம் இழிய, கோடல் நீட,
காதலர்ப் பிரிந்தோர் கையற, நலியும்
தண் பனி வடந்தை அற்சிரம்
முந்து வந்தனர்—நம் காதலோரே.

வரைவிடை வைத்துப்பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமை அறிந்த தோழி தலைமகட்கு மகிழ்ந்து சொல்லியது. 3

224

அம்ம வாழி, தோழி! நம் மலை
மணி நிறம் கொண்ட மா மலை வெற்பில்
துணி நீர் அருவி நம்மோடு ஆடல்
எளிய மன்னால், அவர்க்கு; இனி,
அரியஆகுதல் மருண்டனென், யானே.

இற்செறிப்பு உணர்ந்த தலைமகள் ஆற்றாளாய், தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லியது. 4

225

அம்ம வாழி, தோழி! பைஞ் சுனைப்
பாசடை நிவந்த பனி மலர்க் குவளை
உள்ளகம் கமழும் கூந்தல் மெல்லியல்
ஏர் திகழ் ஒள் நுதல் பசத்தல்
ஓரார்கொல்—நம் காதலோரே?

மெலிவு கூறி வரைவு கடாவக் கேட்ட தலைமகன் தான் வரைதற்பொருட்டால் ஒருவழித் தணந்து நீட்டித்தானாக, ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது. 5

226

அம்ம வாழி, தோழி! நம் மலை
நறுந் தண் சிலம்பின் நாறு குலைக் காந்தள்
கொங்கு உண் வண்டின் பெயர்ந்து புறமாறி, நின்
வன்புடை விறற் கவின் கொண்ட
அன்பிலாளன் வந்தனன், இனியே.

வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது. 6

227

அம்ம வாழி, தோழி! நாளும்,
நல் நுதல் பசப்பவும், நறுந் தோள் நெகிழவும்,
'ஆற்றலம் யாம்' என மதிப்பக் கூறி,
நப் பிரிந்து உறைந்தோர் மன்ற; நீ
விட்டனையோ—அவர் உற்ற சூளே?

ஒருவழித் தணந்து வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குத் தோழி சொல்லியது. 7

228

அம்ம வாழி, தோழி! நம் ஊர்
நிரந்து இலங்கு அருவிய நெடு மலை நாடன்
இரந்து குறையுறாஅன் பெயரின்,
என் ஆவதுகொல்—நம் இன் உயிர் நிலையே?

தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அவர் கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய், தோழி அறத்தொடு நின்றது. 8

229

அம்ம வாழி, தோழி! நாம் அழப்
பல் நாள் பிரிந்த அறனிலாளன்
வந்தனனோ, மற்று இரவில்?
பொன் போல் விறற் கவின் கொள்ளும், நின் நுதலே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது கேட்டு, தலைமகட்கு எய்திய கவினைத் தோழி, தான் அறியாதாள் போன்று, அவளை வினவியது. 9

230

அம்ம வாழி, தோழி! நம்மொடு
சிறு தினைக் காவலன் ஆகி, பெரிதும் நின்
மென் தோள் ஞெகிழவும், திரு நுதல் பசப்பவும்,
பொன் போல் விறற் கவின் தொலைத்த
குன்ற நாடற்கு அயர்வர்—நன் மணனே.

தலைமகன் வரைவு வேண்டித் தமரை விடுத்துழி, 'மறுப்பர்கொல்லோ?' என்று அச்சம் உறுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது. 10

24. தெய்யோப் பத்து

231

யாங்கு வல்லுநையோ—ஓங்கல் வெற்ப!
இரும் பல் கூந்தல் திருந்துஇழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு?—தெய்யோ!

ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது. 1

232

போது ஆர் கூந்தல் இயல் அணி அழுங்க
ஏதிலாட்டியை நீ பிரிந்ததற்கே,
அழல் அவிர் மணிப்பூண் நனையப்
பெயல்ஆனா, என் கண்ணே—தெய்யோ!

ஒருவழித் தணந்து வந்த தலைமகன் 'நான் பிரிந்த நாட்கண் நீர் என் செய்தீர்?' எனக் கேட்க, தோழி அவர்க்குச் சொல்லியது. 2

233

வருவைஅல்லை; வாடை நனி கொடிதே—
அரு வரை மருங்கின் ஆய்மணி வரன்றி,
ஒல்லென இழிதரும் அருவி நின்
கல்லுடை நாட்டுச் செல்லல்—தெய்யோ!

ஒருவழித் தணந்து வரைய வேண்டும் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. 3

234

'மின் அவிர் வயங்குஇழை ஞெகிழச் சாஅய்,
நன்னுதல் பசத்தல் யாவது?'—'துன்னிக்
கனவில் காணும் இவளே
நனவில் காணாள், நின் மார்பே—தெய்யோ!'

இடைவிடாது வந்தொழுகாநின்றே களவு நீடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன் தலைமகள் வேறுபாடு கண்டு, 'இதற்குக் காரணம் என்?' என்று வினவியவழி, 'நின்னைக் கனவில் கண்டு, விழித்துக் காணாளாய் வந்தது' எனத் தோழி சொல்லி வரைவு முடுக்கியது. 4

235

கையற வீழ்ந்த மை இல் வானமொடு
அரிது காதலர்ப்பொழுதே; அதனால்,
தெரிஇழை தெளிர்ப்ப முயங்கி,
பிரியலம் என்கமோ? எழுகமோ?—தெய்யோ!

உடன்போக்கு நேர்வித்த பின்பு தலைமகன் உடன்கொண்டு போவான் இடையாமத்து வந்துழி, தலைமகட்குத் தோழி சொல்லியது. 5

236

அன்னையும் அறிந்தனள்; அலரும் ஆயின்று;
நல் மனை நெடு நகர் புலம்பு கொள உறுதரும்,
இன்னா வாடையும் மலையும்;
நும் ஊர்ச் செல்கம்; எழுகமோ?—தெய்யோ!

களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவும் உணர்த்தி, தோழி உடன்போக்கு நயந்தாள் போன்று, வரைவு கடாயது. 6

237

காமம் கடவ, உள்ளம் இனைப்ப,
யாம் வந்து காண்பது ஓர் பருவம்ஆயின்,
ஓங்கித் தோன்றும் உயர் வரைக்கு
யாங்கு எனப்படுவது, நும் ஊர்?—தெய்யோ!

அல்லகுறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனாகக் கொண்டு, அவன் பின்பு வந்துழி, அவற்குத் தோழி சொல்லியது. 7

238

வார் கோட்டு வயத் தகர் வாராது மாறினும்,
குரு மயிர்ப் புருவை நசையின் அல்கும்
மாஅல் அருவித் தண் பெருஞ் சிலம்ப!
நீ இவண் வரூஉம்காலை,
மேவரும் மாதோ, இவள் நலனே—தெய்யோ!

வரையாது வந்தொழுகும் தலைமகனுக்கு, 'இவள் கவின் நீ வந்த காலத்து வருதலால், நீ போன காலத்து அதன் தொலைவு உனக்கு அறியப்படாது' எனத் தோழி சொல்லி, வரைவு கடாயது. 8

239

சுரும்பு உணக் களித்த புகர் முக வேழம்
இரும் பிணர்த் துறுகல் பிடி செத்துத் தழூஉம் நின்
குன்று கெழு நல் நாட்டுச் சென்ற பின்றை,
நேர் இறைப் பணைத் தோள் ஞெகிழ,
வாராய்ஆயின், வாழேம்—தெய்யோ!

'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி கூறியது. 9

240

அறியேம்அல்லேம்; அறிந்தனம்மாதோ—
பொறி வரிச் சிறைய வண்டினம் மொய்ப்பச்
சாந்தம் நாறும் நறியோள்
கூந்தல் நாறும் நின் மார்பே—தெய்யோ!

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதானமை அறிந்து தலைமகள் புலந்தவழி, அவன் அதனை 'இல்லை' என்று மறைத்தானாக, தோழி சொல்லியது. 10

25. வெறிப் பத்து

241

நம் உறு துயரம் நோக்கி, அன்னை
வேலற் தந்தனள்ஆயின், அவ் வேலன்
வெறி கமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல?—செறிஎயிற்றோயே!

இற்செறித்தவழித் தலைமகட்கு எய்திய மெலிவு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று?' என்று வேலனைக் கேட்பத் துணிந்துழி, அறத்தொடுநிலை துணிந்த தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது. 1

242

அறியாமையின், 'வெறி' என மயங்கி,
அன்னையும் அருந் துயர் உழந்தனள்; அதனால்,
எய்யாது விடுதலோ கொடிதே—நிரை இதழ்
ஆய் மலர் உண்கண் பசப்ப,
சேய் மலை நாடன் செய்த நோயே.

தலைமகள் அறத்தொடுநிலை நயப்ப வேண்டித் தோழி அவட்குச் சொல்லியது. 2

243

கறி வளர் சிலம்பிற் கடவுட் பேணி,
அறியா வேலன், 'வெறி' எனக் கூறும்;
அது மனம் கொள்குவை, அனை!—இவள்
புது மலர் மழைக் கண் புலம்பிய நோய்க்கே.

தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது. 3

244

அம்ம வாழி, தோழி! பல் மலர்
நறுந் தண் சோலை நாடு கெழு நெடுந்தகை
குன்றம் பாடான்ஆயின்,
என் பயம் செய்யுமோ—வேலற்கு வெறியே?

வெறியாடல் துணிந்துழி, விலக்கலுறுந் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது. 4

245

பொய்யா மரபின் ஊர் முது வேலன்
கழங்கு மெய்ப்படுத்து, கன்னம் தூக்கி,
'முருகு' என மொழியும்ஆயின்,
கெழுதகைகொல்—இவள் அணங்கியோற்கே?

தலைமகன் சிறைப்புறத்தானாக, வெறி அறிவுறீஇத் தோழி வரைவு கடாயது. 5

246

வெறி செறித்தனனே, வேலன்—கறிய
கல் முகை வயப் புலி கழங்கு மெய்ப்படூஉ,
....
மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து,
மன்றில் பையுள் தீரும்
குன்ற நாடன் உறீஇய நோயே.

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாய் நின்றுழி, அவன் கேட்கு மாற்றால் வெறி நிகழாநின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது. 6

247

அன்னை தந்தது ஆகுவது அறிவென்:
பொன் நகர் வரைப்பில் கன்னம் தூக்கி,
'முருகு' என மொழியும்ஆயின்,
அரு வரை நாடன் பெயர்கொலோ, அதுவே?

வெறி விலக்கலுறும் தோழி தமர் கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது. 7

248

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி,
மலை வான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினன் அறிகுவது என்றால்,
நன்றால்அம்ம, நின்ற இவள் நலனே!

'தலைமகள் வேறுபாடு கழங்கினால் தெரியும்' என்று வேலன் கூறியவழி, அதனைப் 'பொய்' என இகழ்ந்த தோழி வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது. 8

249

பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து, அன்னைக்கு,
'முருகு' என மொழியும் வேலன்; மற்று-அவன்
வாழிய—இலங்கும் அருவிச்
சூர் மலை நாடனை அறியாதோனே!

வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது. 9

250

பொய் படுபு அறியாக் கழங்கே!—மெய்யே
மணி வரைக் கட்சி மட மயில் ஆலும் நம்

மலர்ந்த வள்ளிஅம் கானங் கிழவோன்;
ஆண்தகை விறல் வேள் அல்லன்—இவள்
பூண் தாங்கு இளமுலை அணங்கியோனே.

'தலைமகட்கு வந்த நோய் முருகனால் வந்தமை இக் கழங்கு கூறிற்று' என்று வேலன் சொன்னான் என்பது கேட்ட தோழி அக் கழங்கிற்கு உரைப்பாளாய், செவிலி கேட்கு மாற்றால் அறத்தொடுநிலை குறித்துச் சொல்லியது. 10

26. குன்றக் குறவன் பத்து

251

குன்றக் குறவன் ஆர்ப்பின், எழிலி
நுண் பல் அழி துளி பொழியும் நாட!
நெடு வரைப் படப்பை நும் ஊர்க்
கடு வரல் அருவி காணினும் அழுமே.

வரையாது வந்தொழுகும் தலைமகற்கு வரைவு வேட்ட தோழி கூறியது. 1

252

குன்றக் குறவன் புல் வேய் குரம்பை
மன்று ஆடு இள மழை மறைக்கும் நாடன்
புரையோன்—வாழி, தோழி!—விரை பெயல்
அரும் பனி அளைஇய கூதிர்ப்
பெருந் தண் வாடையின் முந்து வந்தனனே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்துக்கு முன்னே வந்தானாக, உவந்த தோழி தலைமகட்குச் சொல்லியது. 2

253

குன்றக் குறவன் சாந்த நறும் புகை
தேம் கமழ் சிலம்பின் வரையகம் கமழும்
கானக நாடன் வரையின்,
மன்றலும் உடையள்கொல்—தோழி!—யாயே?

'வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவொடு புகுதராநின்றான்' என்பது தோழி கூறக் கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது. 3

254

குன்றக் குறவன் ஆரம் அறுத்தென,
நறும் புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டு இமிர் சுடர் நுதற் குறுமகள்!
கொண்டனர், செல்வர்—தம் குன்று கெழு நாட்டே.

உடன்போக்கு உடன்பட வேண்டிய தோழி தலைமகட்குச் சொல்லியது. 4

255

குன்றக் குறவன் காதல் மட மகள்
வரையரமகளிர்ப் புரையும் சாயலள்;

ஐயள்; அரும்பிய முலையள்;
செய்ய வாயினள்; மார்பினள், சுணங்கே.

'நின்னாற் காணப்பட்டவள் எத்தன்மையள்?' என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது. 5

256

குன்றக் குறவன் காதல் மட மகள்
வண்டு படு கூந்தல் தண் தழைக் கொடிச்சி;
வளையள்; முளை வாள் எயிற்றள்;
இளையள்ஆயினும், ஆர் அணங்கினளே.

'நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தள் அல்லள்' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது. 6

257

குன்றக் குறவன் கடவுட் பேணி,
இரந்தனன் பெற்ற எல் வளைக் குறுமகள்
ஆய் அரி நெடுங் கண் கலிழ,
சேயதால் தெய்ய—நீ பிரியும் நாடே.

'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது. 7

258

குன்றக் குறவன் காதல் மட மகள்
அணி மயில் அன்ன அசை நடைக் கொடிச்சியைப்
பெரு வரை நாடன் வரையும்ஆயின்,
கொடுத்தனெம்ஆயினோ நன்றே—
இன்னும் ஆனாது, நன்னுதல் துயரே.

வரைவு வேண்டிவிட மறுத்துழித் தமர்க்கு உரைப்பாளாய், வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி, அவன் மலை காண்டலே பற்றாகத் தாங்கள் உயிர் வாழ்கின்றமை தோன்றச் சொல்லியது. 8

259

குன்றக் குறவன் காதல் மட மகள்
மன்ற வேங்கை மலர் சில கொண்டு,
மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி,
தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள்;
மலர்ந்த காந்தள் நாறிக்
கலிழ்ந்த கண்ணள்—எம் அணங்கியோளே.

வரையத் துணிந்த தலைமகன் வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்துகின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு, 'இனி அது கடுக முடியும்' என உவந்த உள்ளத்தனாய், தன்னுள்ளே சொல்லியது. 9

260

குன்றக் குறவன் காதல் மட மகள்,
மென் தோட் கொடிச்சியைப் பெறற்கு அரிதுதில்ல—

பைம் புறப் படு கிளி ஓப்பலர்;
புன் புல மயக்கத்து விளைந்தன தினையே!

பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி, 'இனிப் புனங்காவற்கு வாரோம்' எனக் கூறி வரைவு கடாயது. 10

27. கேழற் பத்து

261

மென் தினை மேய்ந்த தறுகட் பன்றி
வன் கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்—
எந்தை அறிதல் அஞ்சிக்கொல்?
அதுவே மன்ற—வாராமையே.

அல்லகுறிப்பட்டுத் தலைமகன் நீங்கினமை அறியாதாள் போன்று தோழி, பிற்றை ஞான்று அவன் சிறைப்புறத்தானுய் நிற்ப, தலைமகட்குச் சொல்லியது. 1

262

சிறு தினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்;
மருந்தும் அறியும்கொல்—தோழி!—அவன் விருப்பே?

'வரைந்து கொள்ள நினைக்கிலன்' என்று வேறுபட்ட தலைமகள், 'அவன் நின்மேல் விருப்பமுடையன்; நீ நோகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது. 2

263

நன் பொன் அன்ன புனிறு தீர் ஏனல்
கட்டளை அன்ன கேழல் மாந்தும்
குன்று கெழு நாடன்தானும்
வந்தனன்; வந்தன்று—தோழி!—என் நலனே!

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன், மீண்டமை அறிந்த தலைமகள், 'நீ தொலைந்த நலம் இன்று எய்திய காரணம் என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது. 3

264

இளம் பிறை அன்ன கோட்ட கேழல்
களங்கனி அன்ன பெண்பாற் புணரும்
அயம் திகழ் சிலம்ப! கண்டிகும்—
பயந்தன மாதோ, நீ நயந்தோள் கண்ணே!

வரையாது வந்து ஒழுகும் தலைமகனைப் பகற்குறிக்கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது. 4

265

புலி கொல் பெண்பால் பூ வரிக் குருளை
வளை வெண் மருப்பின் கேழல் புரக்கும்
குன்று கெழு நாடன் மறந்தனன்—
பொன்போல் புதல்வனோடு என் நீத்தோனே.

பரத்தை இடத்தானாக ஒழுகுகின்ற தலைமகன் விடுத்த வாயில்மாக்கட்குத் தலைமகள் சொல்லியது. 5

266

சிறுக் கட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தலொடு
குறுக் கை இரும் புலி பொரூஉம் நாட!
நனி நாண் உடையைமன்ற—
பனிப் பயந்தன, நீ நயந்தோள் கண்ணே!

நொதுமலர் வரைவு பிறந்துழி, தலைமகட்கு உளதாகிய வேறுபாடு தோழி கூறி, தலைமகனை வரைவு கடாயது. 6

267

சிறு கட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தல்
துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி,
ஐவனம் கவரும் குன்ற நாடன்
வண்டு படு கூந்தலைப் பேணி,
பண்பு இல சொல்லும், தேறுதல் செத்தே.

'தலைமகளைத் தலைமகன் வரைவல்' எனத் தெளித்தான் என்று அவள் கூறக் கேட்ட தோழி, அவன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது. 7

268

தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு
வள மலைச் சிறு தினை உணீஇ, கானவர்
வரை ஓங்கு உயர் சிமைக் கேழல் உறங்கும்
நல் மலை நாடன் பிரிதல்
என் பயக்கும்மோ—நம் விட்டுத் துறந்தே?

'அவன் குறிப்பு இருந்தவாற்றால் நம்மைப் பிரிந்து வந்தல்லது வரையமாட்டான் போன்று இருந்தது' எனத் தலைமகள் கூறக்கேட்ட தோழி, அவட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது, 8

269

கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை
விளைந்த செறுவின் தோன்றும் நாடன்
வாராது அவண் உறை நீடின்—நேர் வளை
இணை ஈர் ஓதி! நீ அழ—
துணை நனி இழக்குவென், மடமையானே.

குறை நயப்பக் கூறித் தலைமகளைக் கூட்டிய தோழி, அவன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழி, தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. 9

270

கிழங்கு அகழ் கேழல் உழுத சிலம்பில்
தலை விளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்பு கொள் நெடு வரை
காணினும் கலிழும் நோய் செத்து,
தாம் வந்தனர், நம் காதலோரே.

வரைவு காரணமாக நெட்டிடை கழிந்து, பொருள்வயிற் போகிய தலைமகன் வந்தமை அறிந்த தோழி, உவந்த உள்ளத்தளாய், தலைமகட்குச் சொல்லியது. 10

28. குரக்குப் பத்து

271

அவரை அருந்த மந்தி பகர்வர்
பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்,
பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன்;
தொல் கேள்ஆகலின், நல்குமால் இவட்கே.

தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, செவிலிக்குத் தோழி அறத்தொடு
நின்றது. 1

272

கரு விரல் மந்திக் கல்லா வன் பறழ்
அரு வரைத் தீம் தேன் எடுப்பி, அயலது
உரு கெழு நெடுஞ் சினைப் பாயும் நாடன்
இரவின் வருதல் அறியான்;
'வரும் வரும்' என்ப—தோழி!—யாயே.

அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாக, முன்னைநாள் நிகழ்ந்ததனைத்
தோழிக்குச் சொல்லுவாள் போன்று, தலைமகள் சொல்லியது. 2

273

அத்தச் செயலைத் துப்பு உறழ் ஒண் தளிர்
புன் தலை மந்தி வன் பறழ் ஆரும்
நல் மலை நாட! நீ செலின்,
நின் நயந்து உறைவி என்னினும் கலிழ்மே.

வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகன் 'நின் துணைவியை உடம்படுவித்தேன்; இனி
நீயே இதற்கு உடம்படாது கலிழ்கின்றாய்' என்றாற்குத் தோழி கூறியது. 3

274

மந்திக் கணவன் கல்லாக் கடுவன்,
ஒண் கேழ் வயப்புலி குழுமலின், விரைந்து, உடன்
குன்று உயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன்—வாழி, தோழி!—என்
மென் தோட் கவினும், பாயலும், கொண்டே.

வரைவிடை வைத்துப் பிரிந்துழி, ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 4

275

குரங்கின் தலைவன் குரு மயிர்க் கடுவன்
சூரல்அம் சிறு கோல் கொண்டு, வியல் அறை
மாரி மொக்குள் புடைக்கும் நாட!
யாம் நின் நயந்தனம்எனினும், எம்
ஆய்நலம் வாடுமோ—அருளுதிஎனினே?

வரையாது வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வருதலால், எதிர்ப்பாடு பெறாத
தோழி குறியிடத்து எதிர்ப்பட்டு, அவன் கொடுமை கூறி, நெருங்கிச் சொல்லியது. 5

276

மந்திக் காதலன் முறி மேய் கடுவன்
தண் கமழ் நறைக் கொடி கொண்டு, வியல் அறைப்
பொங்கல் இள மழை புடைக்கும் நாட!
நயவாய்ஆயினும் வரைந்தனை சென்மோ—
கல் முகை வேங்கை மலரும்
நல் மலை நாடன் பெண்டு எனப் படுத்தே!

வரையாது வந்தொழுகும் தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது. 6

277

குறவர் முன்றில் மா தீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனொடு உகளும்
குன்ற நாட! நின் மொழிவல்; என்றும்,
பயப்ப நீத்தல் என்—இவள்
கயத்து வளர் குவளையின் அமர்த்த கண்ணே?

வரையாது வந்தொழுகும் தலைமகன் புணர்ந்து நீங்குழி, எதிர்ப்பட்ட தோழி வரைவு கடாயது. 7

278

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன் பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன் எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய் தந்து,
கண்டோர் தண்டா நலம் கொண்டனனே!

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 8

279

கல் இவர் இற்றி புல்லுவன ஏறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை உகளும் நாட! நீ வரின்,
கல் அகத்தது எம் ஊரே;
அம்பற் சேரி அலர் ஆங்கட்டே.

இரவுக்குறி வேண்டும் தலைமகனைத் தோழி வரவு அருமை கூறி மறுத்தது. 9

280

கரு விரல் மந்திக் கல்லா வன் பார்ப்பு
இரு வெதிர் ஈர்ங் கழை ஏறி, சிறு கோல்
மதி புடைப்பது போல் தோன்றும் நாட!
வரைந்தனை நீ எனக்கேட்டு யான்
உரைத்தனென்அல்லெனோ—அஃது என் யாய்க்கே?

புணர்ந்து உடன்போகிய தலைமகன் தலைமகளைக் கரணவகையான் வரைந்தானாக, எதிர்சென்ற தோழிக்கு, 'இனி யான் இவனை வரைந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும்' என்றானாக, அவள் சொல்லியது. 10

29. கிள்ளைப் பத்து

281

வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய, பலவே!—ஒள் இழை
இரும் பல் கூந்தற் கொடிச்சி
பெருந் தோள் காவல் காட்டியவ்வே.

ஆயத்தோடு விளையாட்டு விருப்பினால் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன், அவள் புனங்காவற்கு உரியளாய் நின்றது கண்டு, மகிழ்ந்து சொல்லியது. 1

282

சாரற் புறத்த பெருங் குரற் சிறு தினைப்
பேர் அமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்,
சோலைச் சிறு கிளி உன்னும் நாட!
ஆர் இருள் பெருகின; வாரல்—
கோட்டு மா வழங்கும் காட்டக நெறியே.

இரவுக்குறி நேர்ந்த தோழி தலைமகன் வந்து புணர்ந்து நீங்குழி, அவனை எதிர்ப்பட்டுச் சொல்லியது. 2

283

வன்கட் கானவன் மென் சொல் மட மகள்
புன் புல மயக்கத்து உழுத ஏனல்
பைம் புறச் சிறு கிளி கடியும் நாட!
பெரிய கூறி நீப்பினும்,
பொய்வலைப் படூஉம் பெண்டு தவப் பலவே.

தோழி வாயில் மறுக்கவும், தலைமகன் ஆற்றாமை கண்டு, தலைமகள் வாயில் நேர, அவன் பள்ளியிடத்தானாய் இருந்துழிப் புக்க தோழி கூறியது. 3

284

அளியதாமே, செவ் வாய்ப் பைங் கிளி—
குன்றக் குறவர் கொய்தினைப் பைங் கால்
இருவி நீள்புனம் கண்டும்,
பிரிதல் தேற்றாப் பேர் அன்பினவே.

தினை அரிந்துழி, கிளியை நோக்கிக் கூறுவாள் போல், சிறைப்புறமாக ஓம்படுத்தது. 4

285

பின் இருங் கூந்தல் நல் நுதற் குறமகள்
மென் தினை நுவணை உண்டு, தட்டையின்
ஐவனச் சிறு கிளி கடியும் நாட!
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்கு வல்லுநையோ, ஈங்கு—இவட் துறந்தே?

ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது. 5

286

சிறு தினை கொய்த இருவி வெண் கால்
காய்த்த அவரைப் படு கிளி கடியும்
யாணர் ஆகிய நல் மலை நாடன்
புகர் இன்று நயந்தனன்போலும்;
கவரும்—தோழி!—என் மாமைக் கவினே.

உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃது ஒழிந்து, தானே வரைவிடை வைத்துப் பிரிய நினைந்ததனைக் குறிப்பினான் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகன், 'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்றவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉம் ஆம். 6

287

நெடு வரை மிசையது குறுங் கால் வருடை
தினை பாய் கிள்ளை வெரூஉம் நாட!
வல்லைமன்ற பொய்த்தல்;
வல்லாய் மன்ற, நீ அல்லது செயலே.

'இன்ன நாளில் வரைவல்' எனக் கூறி, அந்நாளில் வரையாது, பின் அவ்வாறு கூறும் தலைமகற்குத் தோழி கூறியது. 7

288

நன்றே செய்த உதவி—நன்று தெரிந்து
யாம் எவன் செய்குவம்? நெஞ்சே! —காமர்
மெல் இயல் கொடிச்சி காப்பப்
பல் குரல் ஏனல் பாத்தரும் கிளியே.

'கிளிகள் புனத்தின்கண் படியாநின்றன' என்று, தலைவியைக் காக்க ஏவியவழி, அதனை அறிந்த தலைமகன் உவந்து, தன் நெஞ்சிற்குச் சொல்லியது. 8

289

'கொடிச்சி இன் குரல் கிளி செத்து, அடுக்கத்துப்
பைங் குரல் ஏனற் படர்தரும் கிளி' எனக்
காவலும் கடியுநர் போல்வர்—
மால் வரை நாட!—வரைந்தனை கொண்மோ!

இற்செறித்த பின்னர்த் தோழி வரைவு கடாவுழி, 'முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல்' என்றாற்கு அவள் சொல்லியது. 9

290

அறம் புரி செங்கோல் மன்னனின் தாம் நனி
சிறந்தனபோலும், கிள்ளை—பிறங்கிய
பூக் கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கவும் படும்; அவள் ஒப்பவும் படுமே.

காவல் மிகுதியான் இரவுக்குறி மறுக்கப்பட்டு நீங்கிய தலைமகன் வந்துழி, அவன் கேட்டு வெறுப்புத் தீர்த்தற் பொருட்டால், தினைப்புனம் காவல் தொடங்காநின்றாள் என்பது தோன்ற, தோழி கூறியது. 10

30. மஞ்ஞைப் பத்து

291

மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத்ததுவே—பணைத் தோள்,
ஆய் தழை நுடங்கும் அல்குல்,
காதலி உறையும் நனி நல் ஊரே.

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது. 1

292

மயில்கள் ஆல, பெருந் தேன் இமிர,
தண் மழை தழீஇய மா மலை நாட!
நின்னினும் சிறந்தனள், எமக்கே—நீ நயந்து
நல் மனை அருங் கடி அயர,
எம் நலம் சிறப்ப, யாம் இனிப் பெற்றோளே.

பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவை முடித்தவனை இல்லத்துக் கொண்டு புகுந்துழி, தலைமகள் உவந்து சொல்லியது. 2

293

சிலம்பு கமழ் காந்தள் நறுங் குலை அன்ன
நலம் பெறு கையின் என் கண் புதைத்தோயே!
பாயல் இன் துணை ஆகிய பணைத் தோள்
தோகை மாட்சிய மடந்தை!
நீ அலது உளரோ—என் நெஞ்சு அமர்ந்தோரே?

பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண் புதைத்துழி, சொல்லியது. 3

294

எரி மருள் வேங்கை இருந்த தோகை
இழை அணி மடந்தையின் தோன்றும் நாட!—
இனிது செய்தனையால்; நுந்தை வாழியர்!—
நல் மனை வதுவை அயர, இவள்
பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே!

வதுவை செல்லாநின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது. 4

295

வருவதுகொல்லோ தானே—வாராது
அவண் உறை மேவலின், அமைவதுகொல்லோ—
புனவர் கொள்ளியின் புகல் வரும் மஞ்ஞை,
இருவி இருந்த குருவி வருந்துற,
பந்து ஆடு மகளிரின் படர்தரும்
குன்று கெழு நாடனொடு சென்ற என் நெஞ்சே?

தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி, உடன்சென்ற நெஞ்சினைத் தலைமகள் நினைந்து கூறியது. 5

296

கொடிச்சி காக்கும் பெருங் குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட!
நடுநாட் கங்குலும் வருதி;
கடு மா தாக்கின், அறியேன் யானே.

இரவுக்குறி வருகின்ற தலைமகற்குத் தோழி ஆற்றருமை கூறி மறுத்தது. 6

297

விரிந்த வேங்கைப் பெருஞ் சினைத் தோகை
பூக் கொய் மகளிரின் தோன்றும் நாட!—
பிரியினும், பிரிவது அன்றே—
நின்னொடு மேய மடந்தை நட்பே.

ஒருவழித் தணந்து வரைய வேண்டும் என்ற தலைமகற்குத் தோழி கூறியது. 7

298

மழை வரவு அறியா மஞ்ஞை ஆலும்
அடுக்கல் நல் ஊர் அசைநடைக் கொடிச்சி
தான் எம் அருளாள்ஆயினும்,
யாம் தன் உள்ளுபு மறந்தறியேமே!

தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்திய வழி, அவள் நாணத்தினால் மறைத்து ஒழுகிய அதனைக் கூறக்கேட்ட தலைமகன் சொல்லியது. 8

299

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்,
பைஞ் சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம் சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது; இவள்-
தன் போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய நிலைமைக்கண், தலைமகள் ஆய வெள்ளத்தோடு கூடி நிற்கக் கண்ட தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது. 9

300

கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அம் சிறை விரிக்கும் பெருங் கல் வெற்பன்
வந்தனன்; எதிர்ந்தனர் கொடையே;
அம் தீம் கிளவி! பொலிக, நின் சிறப்பே!

தலைமகன் தானே வரைவு வேண்டிவிட, சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழி சொல்லியது. 10

குறிஞ்சி முற்றும்

நான்காவது

பாலை

(ஓதலாந்தையார்)

31. செலவு அழுங்குவித்த பத்து

301

மால் வெள்ளோத்திரத்து மை இல் வால் இணர்,
அருஞ் சுரம் செல்வோர், சென்னிக் கூட்டும்
அவ் வரை இறக்குவைஆயின்,
மை வரை நாட!—வருந்துவள் பெரிதே.

பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது. 1

302

அரும்பொருள் செய் வினை தப்பற்கும் உரித்தே;
பெருந் தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்;
செல்லாய்ஆயினோ நன்றே—
மெல்லம் புலம்ப! —இவள் அழப் பிரிந்தே.

பொருள்வயிற் பிரியும் தலைமகன், 'பிரிவு உடன்படுத்த வேண்டும்' என்றானாக, அவற்குத் தோழி சொல்லியது. 2

303

புதுக் கலத்தன்ன கனிய ஆலம்
போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ் சுரம்
தண்ணிய இனிய ஆக;
எம்மொடும் சென்மோ, விடலை! நீயே.

சுரத்து அருமை கூறி உடன் செலவு மறுக்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது. 3

304

கல்லாக் கோவலர் கோலின் தோண்டிய
ஆன் நீர்ப் பத்தல் யானை வௌவும்
கல் அதர்க் கவலை செல்லின், மெல் இயல்
புயல் நெடுங்கூந்தல் புலம்பும்;
வைய மான் தோன்றல்! வல்லாதீமே.

பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. 4

305

களிறு பிடி தழீஇப் பிற புலம் படராது,
பசி தின வருந்தும் பைது அறு குன்றத்து,
சுடர்த் தொடிக் குறுமகள் இனைய,
எனைப்பயம் செய்யுமோ—விடலை! நின் செலவே?

'உடன்போக்கு ஒழித்துத் தனித்துச் செல்வல்' என்ற தலைமகற்குத் தோழி கூறியது. 5

306

வெல்போர்க் குருசில்! நீ வியன் சுரன் இறப்பின்,
பல் காழ் அல்குல் அவ் வரி வாட,
குழலினும் இனைகுவள் பெரிதே—
விழவு ஒலி கூந்தல் மாஅயோளே.

பிரியும் தலைமகற்குத் தோழி தலைமகள் பிரிவாற்றாமை கூறியது. 6

307

ஞெலி கழை முழங்குஅழல் வயமா வெரூஉம்
குன்றுடை அருஞ் சுரம் செலவு அயர்ந்தனையே;
நன்று இல, கொண்க! நின் பொருளே—
பாவை அன்ன நின் துணைப் பிரிந்து வருமே.

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் அதன் சிறப்புக் கூறியவழி, தோழி அதனை இழித்துக் கூறியது. 7

308

பல் இருங் கூந்தல் மெல்லியலோள்வயின்
பிரியாய்ஆயினும் நன்றே; விரிஇணர்க்
கால் எறுழ் ஒள் வீ தாஅய
முருகு அமர் மா மலை பிரிந்தெனப் பிரிமே.

'பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி, 'பிரியாதொழியப் பெறின் நன்று; பிரிவையாயின் இப் பருவத்து இம் மாமலை எங்களை விட்டுப் பிரிந்தால் பிரி' எனச் சொல்லியது. 8

309

வேனிற் திங்கள் வெஞ் சுரம் இறந்து
செலவு அயர்ந்தனையால் நீயே; நன்றும்
நின் நயந்து உறைவி கடுஞ் சூற் சிறுவன்
முறுவல் காண்டலின், இனிதோ—
இறு வரை நாட!—நீ இறந்து செய்பொருளே?

'பொருள் வயிற் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. 9

310

பொலம் பசும் பாண்டிற் காசு நிரை அல்குல்,
இலங்கு வளை மென் தோள், இழை நிலை நெகிழப்
பிரிதல் வல்லுவைஆயின்,
அரிதே—விடலை!—இவள் ஆய்நுதற் கவினே!

பிரிகின்ற தலைமகற்குத் தோழி, 'நீ நினைக்கின்ற கருமம் முடித்தாய்ஆயினும், இவள் நலம் மீட்டற்கு அரிது' எனச் சொல்லி, செலவு அழுங்குவித்தது. 10

32. செலவுப் பத்து

311

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்,
ஆர் இடைச் செல்வோர் ஆறு நனி வெரூஉம்
காடு இறந்தனரே காதலர்;
'நீடுவர்கொல்' என நினையும், என் நெஞ்சே!

'ஆற்றது அருமை நினைந்து, நீ ஆற்ருயாதல் வேண்டா; அவர் அவ்வழி முடியச் சென்ருர்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 1

312

அறம் சாலியரோ! அறம் சாலியரோ!
வறன் உண்டாயினும், அறம் சாலியரோ!—
வாள் வனப்பு உற்ற அருவிக்
கோள் வல் என்னையை மறைத்த குன்றே.

உடன்போயின தலைமகள் மீண்டு வந்துழி, 'நின் ஐயன்மார் பின் துரந்து வந்த இடத்து நிகழ்ந்தது என்னை?' என்ற தோழிக்கு நிகழ்ந்தது கூறி, தலைமகன் மறைதற்கு உதவி செய்த மலையை வாழ்த்தியது. 2

313

தெறுவது அம்ம, நும் மகள் விருப்பே—
உறு துயர் அவலமொடு உயிர் செலச் சாஅய்,
பாழ்படு நெஞ்சம் படர் அடக் கலங்க,
நாடு இடை விலங்கிய வைப்பின்
காடு இறந்தனள், நம் காதலோளே!

தலைமகள் புணர்ந்து உடன்போகியவழி, செவிலி ஆற்ருமை கண்ட நற்ருய் அவட்குச் சொல்லியது. 3

314

'அவிர்தொடி கொட்ப, கழுது புகவு அயர,
கருங் கட் காக்கையொடு கழுகு விசும்பு அகவ,
சிறு கண் யானை ஆள் வீழ்த்துத் திரிதரும்
நீள் இடை அருஞ் சுரம்' என்ப—நம்
தோள் இடை முனிநர் சென்ற ஆறே.

தலைமகன் பிரிந்துழி, அவனுடன் போய் மீண்டார் வழியது அருமை தங்களில் கூறக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 4

315

பாயல் கொண்ட பனி மலர் நெடுங் கண்
பூசல் கேளார் சேயர் என்ப—
இழை நெகிழ் செல்லல் உறீஇ,
கழை முதிர் சோலைக் காடு இறந்தோரே.

சொல்லாது தலைமகன் பிரிந்துழி, தலைமகள் வேறுபாடு கண்ட தோழி இரங்கிச் சொல்லியது. 5

316

பொன் செய் பாண்டிற் பொலங்கலம் நந்த,
தேர் அகல் அல்குல் அவ் வரி வாட,
இறந்தோர்மன்ற தாமே—பிறங்கு மலை
புல் அரை ஓமை நீடிய
புலி வழங்கு அதர கானத்தானே.

தலைமகள் மெலிவுக்கு நொந்து, தலைமகன் பிரிவின்கண் தோழி கூறியது. 6

317

சூழ்கம் வம்மோ—தோழி! பாழ்பட்டுப்
பைது அற வெந்த பாலை வெங் காட்டு
அருஞ் சுரம் இறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே!

தலைமகன் பிரிந்து நீட்டித்துழி, நெஞ்சினைத் தூது விட்ட தலைமகள், அது வாராது தாழ்த்துழி, தோழிக்குச் சொல்லியது. 7

318

ஆய்நலம் பசப்ப, அரும் படர் நலிய,
வேய் மருள் பணைத்தோள் வில் இழை நெகிழ,
நசை நனி கொன்றோர்மன்ற—விசை நிமிர்ந்து
ஓடு எரி நடந்த வைப்பின்,
கோடு உயர் பிறங்கல், மலை இறந்தோரே.

'நம்மைப் பிரியார்' என்று கருதியிருந்த தலைமகள், அவன் பிரிந்துழி, இரங்கிச் சொல்லியது. 8

319

கண் பொர விளங்கிய கதிர் தெறு வைப்பின்,
மண் புரை பெருகிய மரம் முளி கானம்
இறந்தனரோ, நம் காதலர்?
மறந்தனரோதில், மறவா நம்மே?

தலைமகன் பிரிந்துழி, அவன் உணர்த்தாது பிரிந்தமை கூறிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 9

320

முள் அரை இலவத்து ஒள் இணர் வான் பூ,
முழங்குஅழல் அசைவளி எடுப்ப, வானத்து
உருமுப் படு கனலின் இரு நிலத்து உறைக்கும்
கவலை அருஞ் சுரம் போயினர்—
தவல் இல் அரு நோய் தலைத்தந்தோரே.

தலைமகன் பிரிந்துழிச் சுரத்து வெம்மை நினைந்து, தலைமகள் சொல்லியது. 10

33. இடைச்சுரப் பத்து

321

உலறு தலைப் பருந்தின் உளி வாய்ப் பேடை
அலறு தலை ஓமை அம் கவட்டு ஏறிப்
புலம்பு கொள விளிக்கும் நிலம் காய் கானத்து,
மொழி பெயர் பல் மலை இறப்பினும்,
ஒழிதல்செல்லாது—ஒண்டொடி குணனே.

பிரிந்து போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது. 1

322

நெடுங் கழை முளிய வேனில் நீடி,
கடுங் கதிர் ஞாயிறு கல் பகத் தெறுதலின்,
வெய்ய ஆயின, முன்னே; இனியே,
ஒள் நுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின, சுரத்திடை ஆறே!

இடைச் சுரத்துக்கண் தலைமகன் தலைமகள் குணம் நினைத்தலில் தனக்கு உற்ற வெம்மை நீங்கியது கண்டு சொல்லியது. 2

323

வள் எயிற்றுச் செந்நாய் வயவு உறு பிணவிற்குக்
கள்ளிஅம் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ் சுரக் கவலை நீந்தி,
வந்த—நெஞ்சம்!—நீ நயந்தோள் பண்பே.

இடைச் சுரத்துத் தலைமகள் குணம் நினைந்த தலைமகன், 'அவள் பண்பு வந்தன' என உவந்து, தன் நெஞ்சிற்குச் சொல்லியது. 3

324

எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீள் இடைச்
சிறிது கண்படுப்பினும், காண்குவென்மன்ற—
நள்ளென் கங்குல், நளி மனை நெடு நகர்,
வேங்கை வென்ற சுணங்கின்
தேம் பாய் கூந்தல் மாஅயோளே.

பிரிந்து வந்த தலைமகன் தலைமகளை நலம் பாராட்டக் கண்ட தோழி, 'இவள் குணத்தினை மறந்து அமைந்தவாறு யாது?' என வினவினாட்கு அவன் சொல்லியது. 4

325

வேனில் அரையத்து இலை ஒலி வெரீஇ,
போகில் புகா உண்ணாது, பிறிது புலம் படரும்
வெம்பு அலை அருஞ் சுரம் நலியாது—
எம் வெங் காதலி பண்பு துணைப் பெற்றே.

பிரிந்து வந்த தலைமகன், 'சுரத்தின் வெம்மை எங்ஙனம் ஆற்றினீர்?' என்ற தோழிக்குச் சொல்லியது. 5

326

அழல் அவிர் நனந் தலை நிழல் இடம் பெறாது,
மட மான் அம் பிணை மறியொடு திரங்க,
நீர் மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னாமன்ற, சுரமே;
இனியமன்ற, யான் ஒழிந்தோள் பண்பே!

இடைச்சுரத்து வெம்மை ஆற்றானாகிய தலைமகன் தலைமகள் குணம் நினைந்து, நொந்து சொல்லியது. 6

327

பொறி வரித் தடக் கை வேதல் அஞ்சி,
சிறு கண் யானை நிலம் தொடல்செல்லா;
வெயில் முளி சோலைய, வேய் உயர் சுரனே;
அன்ன ஆர் இடையானும்,
தண்மை செய்த, இத் தகையோள் பண்பே!

பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தலைமகள் குணம் நினைந்து, இரங்கிச் சொல்லியது. 7

328

நுண் மழை தளித்தென நறு மலர் தாஅய்த்
தண்ணியஆயினும், வெய்யமன்ற—
மட வரல் இன் துணை ஒழியக்
கடம் முதிர் சோலைய காடு இறந்தேற்கே.

'மழை வீழ்தலால் சுரம் தண்ணென்றது; இனி வருத்தம் இன்றிப் போகலாம்' என்ற உழையர்க்குத் தலைமகன் சொல்லியது. 8

329

ஆள் வழக்கு அற்ற பாழ்படு நனந் தலை
வெம் முனை அருஞ் சுரம் நீந்தி, நம்மொடு
மறுதருவதுகொல் தானே—செறிதொடி
கழிந்து உகு நிலைய ஆக
ஒழிந்தோள் கொண்ட, என் உரம் கெழு, நெஞ்சே?

இடைச்சுரத்தின்கண் மீளலுறும் நெஞ்சினை நொந்து, தலைமகன் உழையர்க்குச் சொல்லியது. 9

330

வெந் துகள் ஆகிய வெயிற் கடம் நீந்தி,
வந்தனம்ஆயினும், ஒழிக இனிச் செலவே!—
அழுத கண்ணள் ஆய்நலம் சிதையக்
கதிர் தெறு வெஞ் சுரம் நினைக்கும்,
அவிர் கோல் ஆய்தொடி உள்ளத்துப் படரே.

பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. 10

34. தலைவி இரங்கு பத்து

331

அம்ம வாழி, தோழி! அவிழ் இணர்க்
கருங் கால் மராஅத்து வைகு சினை வான் பூ
அருஞ் சுரம் செல்லுநர் ஒழிந்தோர் உள்ள,
இனிய கமழும் வெற்பின்
இன்னாது என்ப, அவர் சென்ற ஆறே.

தலைமகன் பிரிந்துழி, 'செல்லும் வழியிடத்து மலையின் உளதாகிய நாற்றத்தால் நம்மை நினைத்து முடியச் செல்லார், மீள்வரோ?' எனக் கேட்ட தலைவிக்கு, 'அவர் முடியச் சென்றார்' என்பது அறிந்து, இரங்கித் தோழி கூறியது. 1

332

அம்ம வாழி, தோழி! என்னதூஉம்
அறன் இல மன்ற தாமே—விறல் மிசைக்
குன்று கெழு கானத்த பண்பு இல் மாக் கணம்,
'கொடிதே காதலிப் பிரிதல்;
செல்லல், ஐய!' என்னாதவ்வே.

பிரிந்த தலைமகன், 'சுரத்திடைக் கழியச் சென்றான்' என்பது கேட்ட தலைமகள் அங்குள்ள மாக்களை நொந்து, தோழிக்குச் சொல்லியது. 2

333

அம்ம வாழி, தோழி! யாவதும்
வல்லாகொல்லோ தாமே—அவண
கல்லுடை நல் நாட்டுப் புள்ளினப் பெருந் தோடு,
'யாஅம் துணை புணர்ந்து உறைதும்;
யாங்குப் பிரிந்து உறைதி!' என்னாதவ்வே?

புட்களை நொந்து சொல்லியது. 3

334

அம்ம வாழி, தோழி! சிறியிலை
நெல்லி நீடிய கல் காய் கடத்திடை,
பேதை நெஞ்சம் பின் செல, சென்றோர்
கல்லினும் வலியர்மன்ற—
பல் இதழ் உண்கண் அழப் பிரிந்தோரே.

பிரிவு நீட, ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 4

335

அம்ம வாழி, தோழி! நம்வயின்—
நெய்த்தோர் அன்ன செவிய எருவை
கற்புடை மருங்கில் கடு முடை பார்க்கும்
காடு நனி கடிய என்ப—
நீடி இவண் வருநர் சென்ற ஆறே.

தலைமகன் சென்ற சுரத்தினிடத்துக் கொடுமை பிறர் கூறக்கேட்ட தலைமகள் ஆற்றாது தோழிக்குச் சொல்லியது. 5

336

அம்ம வாழி, தோழி! நம்வயின்
பிரியலர் போலப் புணர்ந்தோர்மன்ற—
நின்றது இல் பொருட் பிணி முற்றிய
என்றூழ் நீடிய சுரன் இறந்தோரே.

பிரிவதற்கு முன்பு தங்களுடன் அவன் ஒழுகிய திறம் நினைந்து, தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 6

337

அம்ம வாழி, தோழி! நம்வயின்
மெய் உற விரும்பிய கை கவர் முயக்கினும்
இனியமன்ற தாமே—
பனி இருங் குன்றம் சென்றோர்க்குப் பொருளே.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்துழி, தன் முயக்கினும் அவற்குப் பிற்காலத்துப் பொருள் சிறந்தது எனத் தலைவி இரங்கித் தோழிக்குச் சொல்லியது. 7

338

அம்ம வாழி, தோழி! சாரல்
இலை இல மலர்ந்த ஓங்கு நிலை இலவம்
மலை உறு தீயின் சுரமுதல் தோன்றும்
பிரிவு அருங் காலையும், பிரிதல்
அரிது வல்லுநர்—நம் காதலோரே.

தலைமகன் பிரிந்துழி, 'இக் காலத்தே பிரிந்தார்' எனத் தலைமகள் இரங்கிச் சொல்லியது. 8

339

அம்ம வாழி, தோழி! சிறியிலைக்
குறுஞ் சினை வேம்பின் நறும் பழம் உணீஇய
வாவல் உகக்கும் மாலையும்
இன்றுகொல், தோழி! அவர் சென்ற நாட்டே?

தலைமகன் குறித்த பருவ வரவின்கண் மாலைப் பொழுது கண்டு, ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 9

340

அம்ம வாழி, தோழி! காதலர்
உள்ளார்கொல்? நாம் மருள் உற்றனம்கொல்?
விட்டுச் சென்றனர் நம்மே—
தட்டைத் தீயின் ஊர் அலர் எழவே.

தலைமகள் பிரிந்துழி, 'கடிதின் வருவர்' என ஆற்றியிருந்த தலைவி, அவன் நீட்டித்துழி, ஆற்ருது தோழிக்குச் சொல்லியது. 10

35. இளவேனிற் பத்து

341

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
குயிற் பெடை இன் குரல் அகவ,
அயிர்க் கேழ் நுண் அறல் நுடங்கும் பொழுதே!

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது. 1

இனி வருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இஃது ஒக்கும்.

342

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
சுரும்பு களித்து ஆலும் இருஞ் சினைக்
கருங் கால் நுணவம் கமழும் பொழுதே! 2

343

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
திணி நிலைக் கோங்கம் பயந்த
அணி மிகு கொழு முகை உடையும் பொழுதே! 3

344

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
நறும் பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே! 4

345

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
புதுப் பூ அதிரல் தாஅய்க்
கதுப்பு அறல் அணியும் காமர் பொழுதே! 5

346

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
அம் சினைப் பாதிரி அலர்ந்தென,
செங் கண் இருங் குயில் அறையும் பொழுதே! 6

347

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
எழில் தகை இள முலை பொலியப்
பொரிப் பூம் புன்கின் முறி திமிர் பொழுதே! 7

348

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
வலம் சுரி மராஅம் வேய்ந்து, நம்
மணம் கமழ் தண் பொழில் மலரும் பொழுதே! 8

349

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
பொரி கால் மாஞ் சினை புதைய
எரி கால் இளந் தளிர் ஈனும் பொழுதே! 9

350

அவரோ வாரார்; தான் வந்தன்றே—
வேம்பின் ஒண் பூ உறைப்ப,
தேம் படு கிளவி அவர் தெளிக்கும் பொழுதே! 10

36. வரவு உரைத்த பத்து

351

அத்தப் பலவின் வெயில் தின் சிறு காய்,
அருஞ் சுரம் செல்வோர், அருந்தினர் கழியும்
காடு பின் ஒழிய வந்தனர்; தீர்க, இனி—
பல் இதழ் உண்கண் மடந்தை! நின்
நல் எழில் அல்குல் வாடிய நிலையே.

பிரிந்த தலைமகன் வரவு உணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது. 1

352

விழுத் தொடை மறவர் வில் இடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்
பெருங் கை யானை இருஞ் சினம் உறைக்கும்
வெஞ் சுரம் 'அரிய' என்னார்,
வந்தனர்—தோழி!—நம் காதலோரே!

இதுவும் அது. 2

353

எரிக் கொடிக் கவைஇய செவ் வரை போலச்
சுடர்ப் பூண் விளங்கும் ஏந்து எழில் அகலம்
நீ இனிது முயங்க, வந்தனர்—
மா இருஞ் சோலை மலை இறந்தோரே.

இதுவும் அது. 3

354

ஈர்ம் பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை
மறியுடை மான் பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன் வந்தனரே—
தெரிஇழை அரிவை!—நின் பண்பு தர விரைந்தே.

இதுவும் அது. 4

355

திருந்துஇழை அரிவை! நின் நலம் உள்ளி,
'அருஞ் செயல் பொருட் பிணி பெருந் திரு உறுக!' எனச்
சொல்லாது பெயர்தந்தேனே—பல் பொறிச்
சிறு கண் யானை திரிதரும்
நெறி விலங்கு அதர கானத்தானே.

நினைந்த எல்லையளவும் பொருள் முற்றி நில்லாது, பெற்ற பொருள் கொண்டு, தலைவியை நினைந்து, மீண்ட தலைமகன் அவட்குச் சொல்லியது. 5

356

உள்ளுதற்கு இனியமன்ற—செல்வர்
யானை பிணித்த பொன் புனை கயிற்றின்,
ஒள் எரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்க, தந்த நின் குணனே.

வினை முற்றி மீண்டு வந்த தலைமகன் தலைவிக்கு அவள் குணம் புகழ்ந்து கூறியது. 6

357

குரவம் மலர, மரவம் பூப்ப,
சுரன் அணி கொண்ட கானம் காணூஉ,
'அழுங்குக, செய்பொருட் செலவு!' என விரும்பி, நின்
அம் கலிழ் மாமை கவின
வந்தனர்—தோழி!—நம் காதலோரே.

பொருள்வயிற் பிரிந்து ஆண்டு உறைகின்ற தலைமகன் குறித்த பருவ வரவு கண்டு, கடிதின் மீண்டு வந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது. 7

358

கோடு உயர் பல் மலை இறந்தனர் ஆயினும்,
நீட விடுமோ மற்றே—நீடு நினைந்து,
துடைத்தொறும் துடைத்தொறும் கலங்கி,
உடைத்து எழு வெள்ளம் ஆகிய கண்ணே?

தலைமகள் ஆற்றாமை கண்டு பிரிந்த தலைமகன் வந்தனனாகத் தோழி சொல்லியது. 8

359

அரும் பொருள் வேட்கையம் ஆகி, நிற் துறந்து,
பெருங் கல் அதரிடைப் பிரிந்த காலைத்
தவ நனி நெடிய ஆயின; இனியே,
அணியிழை உள்ளி யாம் வருதலின்
நணிய ஆயின—சுரத்திடை ஆறே.

மீண்டு வந்த தலைமகன் அவளைப் பிரிகின்ற காலத்துச் சுரத்துச் சேய்மையும், வருகின்ற காலத்து அதன் அணிமையும், கூறியது. 9

360

எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீள் இடை
அரியஆயினும், எளிய அன்றே—
அவவு உறு நெஞ்சம் கவவு நனி விரும்பி,
கடு மான் திண் தேர் கடைஇ,
நெடு மான் நோக்கி! நின் உள்ளி யாம் வரவே!

வினைமுற்றி மீண்டு வந்த தலைமகன், 'சுரத்து அருமை நோக்காது வந்தவாறு என்னை?' என வினவிய தலைமகட்குச் சொல்லியது. 10

37. முன்னிலைப் பத்து

361

உயர்கரைக் கான் யாற்று அவிர்மணல் அகன்துறை
வேனிற் பாதிரி விரி மலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே!
கண்ணினும் கதவ, நின் முலையே!
முலையினும் கதவ, நின் தட மென் தோளே!

புணர்ந்து உடன்போகிய தலைமகன் இடைச்சுரத்துக்கண் விளையாட்டு வகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ, அவள் அதற்கு நாணி, கண்புதைத்த வழிச் சொல்லியது. 1

362

பதுக்கைத்து ஆய ஒதுக்கு அருங் கவலை,
சிறு கண் யானை உறு பகை நினையாது,
யாங்கு வந்தனையோ—பூந் தார் மார்ப!—
அருள் புரி நெஞ்சம் உய்த்தர
இருள் பொர நின்ற இரவினானே?

சேணிடைப் பிரிந்த தலைமகன் இடைநிலத்துத் தங்காது இரவின்கண் வந்துழித் தோழி சொல்லியது. 2

363

சிலை விற் பகழிச் செந் துவர் ஆடைக்
கொலை வில் எயினர் தங்கை! நின் முலைய
சுணங்கு என நினைதி நீயே;
அணங்கு என நினையும், என் அணங்குறு நெஞ்சே.

புணர்ந்து உடன்செல்கின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நலம் பாராட்டியது. 3

364

முளவு மா வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கு, நின் நிலை அறியச்
சொல்லினென் இரக்கும்அளவை—
வென் வேல் விடலை!—விரையாதீமே!

உடன்போக்கு நயந்த தலைமகன் அதனைத் தோழிக்கு உணர்த்த, அவள் முடிப்பாளாய்ச் சொல்லியது. 4

365

கண மா தொலைச்சித் தன்னையர் தந்த
நிண ஊன் வல்சிப் படு புள் ஓப்பும்
நலம் மாண் எயிற்றி போலப் பல மிகு
நன்னல நயவரவு உடையை—
என் நோற்றனையோ?—மாவின் தளிரே!

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்றான் இடைச்சுரத்துக் குழைத்த மாவின் தளிர் கண்டு சொல்லியது. 5

366

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! 'என் தோழி
பசந்தனள் பெரிது' எனச் சிவந்த கண்ணை,
கொன்னே கடவுதி ஆயின், என்னதூஉம்
அறிய ஆகுமோ மற்றே—
முறி இணர்க் கோங்கம் பயந்தமாறே?

தலைமகளை நோக்கி, 'இவ் வேறுபாடு எற்றினான் ஆயிற்று?' என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது. 6

367

பொரி அரைக் கோங்கின் பொன் மருள் பசு வீ,
விரிஇணர் வேங்கையொடு, வேறு பட மிலைச்சி,
விரவு மலர் அணிந்த வேனில் கான் யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
பேரொடு புணர்ந்தன்று—அன்னை!—இவள் உயிரே.

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. 7

368

எரிப் பூ இலவத்து ஊழ் கழி பல் மலர்
பொரிப் பூம் புன்கின் புகர் நிழல் வரிக்கும்
தண் பத வேனில் இன்ப நுகர்ச்சி
எம்மொடு கொண்மோ, பெரும!—நின்
அம் மெல்லோதி அழிவிலள் எனினே!

'வேனிற்காலத்து நும்மொடு விளையாட்டு நுகர வருவல்' என்று, பருவம் குறித்துப் பிரியலுற்ற தலைமகற்குத் தோழி கூறியது. 8

369

வள மலர் ததைந்த வண்டு படு நறும் பொழில்
முளை நிரை முறுவல் ஒருத்தியொடு, நெருநல்
குறி நீ செய்தனை என்ப; அலரே,
குரவ நீள் சினை உறையும்
பருவ மாக் குயிற் கௌவையின், பெரிதே!

பரத்தைஒருத்தியுடன் பொழிலகத்துத் தங்கி வந்த தலைமகன் தலைமகள் வினாயவழி, 'யாரையும் அறியேன்' என்றானாக, அவள் கூறியது. 9

370

வண் சினைக் கோங்கின் தண் கமழ் படலை
இருஞ் சிறை வண்டின் பெருங் கிளை மொய்ப்ப,
நீ நயந்து உறையப்பட்டோள்
யாவளோ? எம் மறையாதீமே.

பரத்தைஒருத்திக்குப் பூ அணிந்தான் என்பது கேட்ட தலைமகள், 'அஃது இல்லை' என்று மறைக்கும் தலைமகற்குக் கூறியது. 10

38. மகட் போக்கியவழித் தாய் இரங்கு பத்து

371

மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்
உயர் நெடுங் குன்றம் படு மழை தலைஇச்
சுரம் நனி இனிய ஆகுகதில்ல—
'அறநெறி இது' எனத் தெளிந்த என்
பிறை நுதற் குறுமகள் போகிய சுரனே! 1

372

என்னும் உள்ளினள்கொல்லோ—தன்னை
நெஞ்சு உணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு,
அழுங்கல் மூதூர் அலர் எழ,
செழும் பல் குன்றம் இறந்த என் மகளே? 2

373

நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக—
புலிக் கோட் பிழைத்த கவைக் கோட்டு முது கலை
மான்பிணை அணைதர, ஆண் குரல் விளிக்கும்
வெஞ் சுரம் என் மகள் உய்த்த
அம்பு அமை வல் வில் விடலை தாயே!

தலைமகளைத் தலைமகன் கொண்டு கழிந்த கொடுமை நினைந்து, நற்றாய் சொல்லியது. 3

374

பல் ஊழ் நினைப்பினும், நல்லென்று ஊழ—
மீளி முன்பின் காளை காப்ப,
முடி அகம் புகாஅக் கூந்தலள்
கடுவனும் அறியாக் காடு இறந்தோளே.

தலைமகள் உடன்போயவழி, அவள் இளமை நினைந்து இரங்கித் தாய் கூறியது. 4

375

'இது என் பாவைக்கு இனிய நன் பாவை;
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி;

இது என் பூவைக்கு இனிய சொற் பூவை' என்று,
அலமரு நோக்கின் நலம் வரு சுடர் நுதல்
காண்தொறும் காண்தொறும் கலங்க,
நீங்கினளோ—என் பூங் கணோளே?

சேரியும் அயலும் தேடிக் காணாது வந்தாரைக் கண்டு தலைமகள் தாய் சொல்லியது. 5

376

நாள்தொறும் கலிழும் என்னினும் இடை நின்று
காடு படு தீயின் கனலியர் மாதோ—
நல் வினை நெடு நகர் கல்லெனக் கலங்க,
பூப் புரை உண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த அறன் இல் பாலே!

தலைமகள் போயவழி, நற்றாய் விதியை வெகுண்டு சொல்லியது. 6

377

நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம் புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்
சென்றனள்மன்ற, என் மகளே—
பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே.

தலைமகள் உடன்போயவழி, அவள் பந்து முதலாகிய கண்ட நற்றாய் கலங்கிச் சொல்லியது. 7

378

செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவல் உகக்கும் மாலை, யாம் புலம்பப்
போகிய அவட்கோ நோவேன்; தே மொழித்
துணை இலள் கலிழும் நெஞ்சின்
இணை ஏர் உண்கண் இவட்கு நோவதுவே.

தலைமகள் உடன்போயவழி, அவள் தோழி ஆற்றாமை கண்ட நற்றாய் சொல்லியது. 8

379

தன் அமர் ஆயமொடு நன் மண நுகர்ச்சியின்
இனிது ஆம்கொல்லோ தனக்கே—பனி வரை
இனக் களிறு வழங்கும் சோலை
வயக்குறு வெள் வேலவற் புணர்ந்து செலவே?

புணர்ந்துஉடன்போகியவழி, தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட நற்றாய், 'அதனை முன்னே அறிவித்து,நாம் மணம் புணர்த்த ஒழுகாது போயினள்' என நொந்து சொல்லியது. 9

380

அத்த நீள் இடை அவனொடு போகிய
முத்து ஏர் வெண் பல் முகிழ் நகை மடவரல்
தாயர் என்னும் பெயரே வல்லாறு
எடுத்தேன்மன்ற, யானே;
கொடுத்தோர்மன்ற, அவள் ஆயத்தோரே.

தலைமகள் உடன்போகியவழித் தெருட்டுவார்க்குச் செவிலித்தாய் சொல்லியது. 10

39. உடன்போக்கின்கண் இடைச் சுரத்து உரைத்த பத்து

381

பைங் காய் நெல்லி பல உடன் மிசைந்து,
செங் கால் மராஅத்த வரி நிழல் இருந்தோர்
யார்கொல், அளியர் தாமே—வார் சிறைக்
குறுங் கால் மகன்றில் அன்ன
உடன் புணர் கொள்கைக் காதலோரே?

உடன்போக்கின்கண் இடைச் சுரத்துக் கண்டார் சொல்லியது. 1

382

புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள், வெள் வேல்
திருந்து கழற் காளையொடு அருஞ் சுரம் கழிவோள்,
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனை இழை மகளிர்ப் பயந்த
மனை கெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே.

தலைமகள் இடைச் சுரத்தினது ஊரின்கண் எல்லிடைத் தங்கியவழி, அவ்வூர்ப் பெண்டிர் பார்த்து இரங்குதல் கண்டார் சொல்லியது. 2

383

கோட் சுரும்பு அரற்றும் நாட் சுரத்து அமன்ற
நெடுங் கால் மராஅத்துக் குறுஞ் சினை பற்றி,
வலம் சுரி வால் இணர் கொய்தற்கு நின்ற
மள்ளன் உள்ளம் மகிழ் கூர்ந்தன்றே—
பைஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அம் சாய் கூந்தல் ஆய்வது கண்டே.

உடன்போகிய தலைமகள் தலைமகன் வளைத்த கொம்பிற் பூக்கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுக்க, கண்டார் கூறியது. 3

384

சேட் புலம் முன்னிய அசை நடை அந்தணிர்!
நும் ஒன்று இரந்தனென் மொழிவல்: எம் ஊர்,
'யாய் நயந்து எடுத்த ஆய்நலம் கவின
ஆர் இடை இறந்தனள்' என்மின்—
நேர் இறை முன்கை என் ஆயத்தோர்க்கே.

உடன்போகிய தலைமகள் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்லியது. 4

385

'கடுங்கட் காளையொடு நெடுந் தேர் ஏறி,
கோள் வல் வேங்கைய மலை பிறக்கு ஒழிய,
வேறு பல் அருஞ் சுரம் இறந்தனள் அவள்' எனக்
கூறுமின்—வாழியோ! ஆறு செல் மாக்கள்!—

நல் தோள் நயந்து பாராட்டி,
எற் கெடுத்து இருந்த அறன் இல் யாய்க்கே.

வரைவு மறுத்துழி, உடன்போய தலைமகள் இடைச் சுரத்துக் கண்டாரை, 'யான் போகின்ற படியை யாய்க்கு நீர் கூற வேண்டும்' எனச் சொல்லியது. 5

386

புன்கண் யானையொடு புலி வழங்கு அத்தம்
நயந்த காதலற் புணர்ந்து சென்றனளே—
நெடுஞ் சுவர் நல் இல் மருண்ட
இடும்பை உறுவி! நின் கடுஞ் சூல் மகளே.

புணர்ந்து உடன்போகிய தலைமகளை இடைச் சுரத்துக் கண்டார் அவள் தாய்க்குச் சென்று கூறியது. 6

387

'அறம் புரி அரு மறை நவின்ற நாவின்
திறம் புரி கொள்கை அந்தணிர்! தொழுவல்' என்று
ஒண்டொடி வினவும் பேதைஅம் பெண்டே!
கண்டனெம் அம்ம, சுரத்திடை அவளை—
இன் துணை இனிது பாராட்ட,
குன்று உயர் பிறங்கல் மலை இறந்தோளே.

பின்சென்ற செவிலியால் வினவப்பட்ட அந்தணர் அவட்குச் சொல்லியது. 7

388

நெருப்பு அவிர் கனலி உருப்புச் சினம் தணியக்
கருங் கால் யாத்து வரி நிழல் இரீஇ,
சிறு வரை இறப்பின், காண்குவை—செறிதொடிப்
பொன் ஏர் மேனி மடந்தையொடு
வென் வேல் விடலை முன்னிய சுரனே.

தேடிச் சென்ற செவிலிக்கு இடைச் சுரத்துக் கண்டார் அவளைக் கண்ட திறம் கூறியது. 8

389

'செய்வினைப் பொலிந்த செறி கழல் நோன் தாள்
மை அணற் காளையொடு பைய இயலி,
பாவை அன்ன என் ஆய்தொடி மடந்தை
சென்றனள்! என்றிர், ஐய!
ஒன்றினவோ, அவள் அம் சிலம்பு அடியே!

பின்சென்ற செவிலித்தாய், வினவப் பட்டோர் 'கண்டோம்' என்புழி, சொல்லியது. 9

390

நல்லோர் ஆங்கண் பரந்து கைதொழுது
பல் ஊழ் மறுகி வினவுவோயே!

திண் தோள் வல்விற் காளையொடு
கண்டனெம்மன்ற சுரத்திடை, யாமே.

பின்சென்ற செவிலித்தாய் பலரையும் வினவ, கண்டோர் தாம் கண்டவாறு அவட்குக் கூறியது. 10

40. மறுதரவுப் பத்து

391

மறு இல் தூவிச் சிறு கருங் காக்கை!
அன்புடை மரபின் நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந் நிண வல்சி
பொலம் புனை கலத்தில் தருகுவென்மாதோ;
வெஞ்சின விறல் வேற் காளையொடு
அஞ்சில்லோதியை வரக் கரைந்தீமே.

உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டு, தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தது. 1

392

வேய் வனப்பு இழந்த தோளும், வெயில் தெற
ஆய்கவின் தொலைந்த நுதலும், நோக்கிப்
பரியல் வாழி, தோழி! பரியின்,
எல்லை இல் இடும்பை தரூஉம்—
நல் வரை நாடனொடு வந்தமாறே.

உடன்போய் மீண்டு வந்த தலைமகள் வழிவரல் வருத்தங் கண்டு, ஆற்றுளாகிய தோழிக்குச் சொல்லியது. 2

393

துறந்ததற்கொண்டு துயர் அடச் சாஅய்,
அறம் புலந்து பழிக்கும் அளைகணாட்டி!
எவ்வ நெஞ்சிற்கு ஏமம் ஆக
வந்தனளோ நின் மட மகள்—
வெந் திறல் வெள் வேல் விடலை முந்துறவே?

உடன்போய்த் தலைமகள் மீண்டு வந்துழி, அயலோர் அவள் தாய்க்குச் சொல்லியது. 3

394

மாண்பு இல் கொள்கையொடு மயங்கு துயர் செய்த
அன்பு இல் அறனும் அருளிற்றுமன்ற;
வெஞ் சுரம் இறந்த அம் சில் ஓதி,
பெரு மட மான் பிணை அலைத்த
சிறு நுதற் குறுமகட் காட்டிய வம்மே.

உடன்போய்த் தலைமகள் வந்துழி, தாய் சுற்றத்தார்க்குச் சொல்லியது. 4

395

முளி வயிர்ப் பிறந்த, வளி வளர் கூர் எரிச்
சுடர் விடு நெடுங் கொடி விடர் முகை முழங்கும்
இன்னா அருஞ் சுரம் தீர்ந்தனம்; மென்மெல
ஏகுமதி வாழியோ, குறுமகள்!—போது கலந்து
கறங்கு இசை அருவி வீழும்,
பிறங்கு இருஞ் சோலை, நம் மலை கெழு நாட்டே.

உடன்போய் மீள்கின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது. 5

396

புலிப் பொறி வேங்கைப் பொன் இணர் கொய்து நின்
கதுப்பு அயல் அணியும் அளவை, பைபயச்
சுரத்திடை அயர்ச்சியை ஆறுகம்—மடந்தை!—
கல் கெழு சிறப்பின் நம் ஊர்
எல் விருந்து ஆகிப் புகுகம், நாமே.

இதுவும் அது. 6

397

'கவிழ் மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரம் நனி வாராநின்றனள்' என்பது
முன்னுற விரைந்த நீர் உரைமின்—
இன் நகை முறுவல் என் ஆயத்தோர்க்கே.

உடன்போய் மீள்கின்ற தலைமகள் தன் ஊர்க்குச் செல்கின்றாரைக் கண்டு கூறியது. 7

398

'புள்ளும் அறியாப் பல் பழம் பழுனி,
மட மான் அறியாத் தட நீர் நிலைஇ,
சுரம் நனி இனிய ஆகுக!' என்று
நினைத்தொறும் கலிழும் என்னினும்
மிகப் பெரிது புலம்பின்று—தோழி!—நம் ஊரே.

தலைமகள் மீண்டு வந்துழி, அவட்குத் தோழி கூறியது. 8

399

'நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,
எம் மனை வதுவை நல் மணம் கழிக' எனச்
சொல்லின் எவனோ மற்றே—வென் வேல்,
மை அற விளங்கிய கழல்அடி,
பொய் வல் காளையை ஈன்ற தாய்க்கே?

உடன் கொண்டுபோன தலைமகன் மீண்டு தலைவியைத் தன் இல்லத்துக்கொண்டு புக்குழி, 'அவன் தாய் அவட்குச் சிலம்பு கழி நோன்பு செய்கின்றாள்' எனக் கேட்ட நற்றாய் ஆண்டுநின்றும் வந்தார்க்குச் சொல்லியது. 9

400

மள்ளர் அன்ன மரவம் தழீஇ,
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்
அரும் பதம் கொண்ட பெரும் பத வேனில்,
'காதல் புணர்ந்தனள் ஆகி, ஆய்கழல்
வெஞ் சின விறல் வேற் காளையொடு
இன்று புகுதரும்' என வந்தன்று, தூதே.

உடன்போய் வதுவை அயரப்பட்ட தலைவி, 'தலைவனோடு இன்று வரும்' எனக் கேட்ட செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

பாலை முற்றும்

ஐந்தாவது

முல்லை

(பேயனார்)

41. செவிலி கூற்றுப் பத்து

401

மறி இடைப்படுத்த மான் பிணை போல,
புதல்வன் நடுவணன் ஆக, நன்றும்
இனிதுமன்ற அவர் கிடக்கை; முனிவு இன்றி
நீல் நிற வியலகம் கவைஇய
ஈனும், உம்பரும், பெறலருங்குரைத்தே.

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது. 1

இனி வருகின்ற பாட்டு ஒன்பதனுள் முதல் எட்டினுக்கும் இஃது ஒக்கும்.

402

புதல்வற் கவைஇய தாய் புறம் முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை, பாணர்
நரம்பு உளர் முரற்கை போல,
இனிதால்; அம்ம! பண்புமார் உடைத்தே. 2

403

புணர்ந்த காதலியின் புதல்வன்தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றே—
அகன் பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன் நகை பயிற்றி,
சிறு தேர் உருட்டும் தளர்நடை கண்டே. 3

404

வாள் நுதல் அரிவை மகன் முலை ஊட்ட,
தான் அவள் சிறுபுறம் கவையினன்—நன்றும்
நறும் பூந் தண் புறவு அணிந்த,
குறும் பல் பொறைய நாடுகிழவோனே. 4

405

ஒண் சுடர்ப் பாண்டிற் செஞ் சுடர் போல,
மனைக்கு விளக்கு ஆயினள்மன்ற—கனைப் பெயல்
பூப் பல அணிந்த வைப்பின்
புறவு அணி நாடன் புதல்வன் தாயே. 5

406

மாதர் உண்கண் மகன் விளையாட,
காதலித் தழீஇ இனிது இருந்தனனே—
தாது ஆர் பிரசம் ஊதும்
போது ஆர் புறவின் நாடுகிழவோனே. 6

407

நயந்த காதலித் தழீஇ, பாணர்
நயம் படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து,
இன்புறு புணர்ச்சி நுகரும்—
மென் புல வைப்பின் நாடுகிழவோனே. 7

408

பாணர் முல்லை பாட, சுடர் இழை
வாள் நுதல் அரிவை முல்லை மலைய,
இனிது இருந்தனனே, நெடுந்தகை—
துனி தீர் கொள்கைத் தன் புதல்வனொடு பொலிந்தே. 8

409

புதல்வற் கவைஇயினன் தந்தை; மென் மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்;
இனிதுமன்ற அவர் கிடக்கை;
நனி இரும் பரப்பின் இவ் உலகுடன் உறுமே. 9

410

மாலை முன்றில் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி ஆக, புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே.
மென் பிணித்து அம்ம—பாணனது யாழே!

கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனொடு பாடல் கேட்டிருந்தமை கண்டு, தன்னுள்ளே உவந்து சொல்லியது. 10

42. கிழவன் பருவம் பாராட்டுப் பத்து

411

ஆர் குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார் தொடங்கின்றால், காமர் புறவே;
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்—
தாழ் இருங் கூந்தல்!—வம்மதி, விரைந்தே.

பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் அப் பருவத்திற்கு முன்னே வந்து, தலைவியொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாக, தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான் தலைவிக்கு உரைத்தது. 1

412

காயா, கொன்றை, நெய்தல், முல்லை,
போது அவிழ் தளவமொடு பிடவு, அலர்ந்து கவினிப்
பூ அணி கொண்டன்றால் புறவே—
பேர் அமர்க்கண்ணி!—ஆடுகம், விரைந்தே.

இதுவும் அது. 2

413

நின் நுதல் நாறும் நறுந் தண் புறவில்
நின்னை போல மஞ்ஞை ஆல,
கார் தொடங்கின்றால் பொழுதே---
பேர் இயல் அரிவை!—நாம் நயத்தகவே.

இதுவும் அது. 3

414

புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகள,
கோட்டவும் கொடியவும் பூப் பல பழுனி—
மெல் இயல் அரிவை! கண்டிகும்—
மல்லல் ஆகிய மணம் கமழ் புறவே.

இதுவும் அது. 4

415

இதுவே, மடந்தை! நாம் மேவிய பொழுதே;
உதுவே, மடந்தை! நாம் உள்ளிய புறவே;
இனிது உடன் கழிக்கின், இளமை
இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே!

இதுவும் அது. 5

416

போது ஆர் நறுந் துகள் கவினிப் புறவில்,
தாது ஆர்ந்து,
களிச் சுரும்பு அரற்றும் காமர் புதலின்,
மடப் பிடி தழீஇய, மாவே;
சுடர்த் தொடி மடவரற் புணர்ந்தனம், யாமே!

பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் பருவத்திற்கு முன்னே வந்து தலைவியொடு கூடிச் செல்லாநின்றுழி, அதற்கு இனியனாய்த் தன்னுள்ளே சொல்லுவான் போன்று, தலைவி அறியுமாற்றால் கூறியது. 6

417

கார் கலந்தன்றால் புறவே; பல உடன்
ஏர் பரந்தனவால் புனமே; ஏர் கலந்து
தாது ஆர் பிரசம் மொய்ப்ப,
போது ஆர் கூந்தல் முயங்கினள், எம்மே.

இதுவும் அது. 7

418

வானம்பாடி வறம் களைந்து, ஆனாது
அழி துளி தலைஇய புறவில், காண்வர
வானரமகளோ நீயே—
மாண் முலை அடைய முயங்கியோயே?

குறித்த பருவத்திற்கு உதவ வாராநின்ற வழிக்கண் உருவு வெளிப்பாடு கண்ட தலைமகன் இல்லத்துப் புகுந்துழி, தலைமகட்குச் சொல்லியது. 8

419

உயிர் கலந்து ஒன்றிய செயிர் தீர் கேண்மைப்
பிரிந்துறல் அறியா, விருந்து கவவி,
நம் போல் நயவரப் புணர்ந்தன—
கண்டிகும் மடவரல்! —புறவின் மாவே.

இன்ப நுகர்ச்சிக்கு ஏற்ற பருவம் வந்துழி, தலைமகளொடு புறவில் சென்ற தலைமகன் அவ்விடத்து மாக்களை அவட்குக் காட்டிச் சொல்லியது. 9

420

பொன் என மலர்ந்த, கொன்றை; மணி எனத்
தேம் படு காயா மலர்ந்த; தோன்றியொடு
நன்னலம் எய்தினை, புறவே! நின்னைக்
காணிய வருதும், யாமே—
வாள் நுதல் அரிவையொடு ஆய் நலம் படர்ந்தே.

குறித்த பருவத்து எய்திய, அணித்தாக வந்த தலைமகன் பருவத்தால் அணிகொண்ட புறவை நோக்கிச் சொல்லியது. 10

43. விரவுப் பத்து

421

மாலை வெண் காழ் காவலர் வீச,
நறும் பூம் புறவின் ஒடுங்கு முயல் இரியும்
புன் புல நாடன் மட மகள்
நலம் கிளர் பணைத் தோள் விலங்கின, செலவே.

வினை பலவற்றிற்கும் பிரிந்து ஒழுகும் தலைமகன் பின்பு மனைவயின் நீங்காது ஒழுகுகின்ற காதல் உணர்ந்தோர் சொல்லியது. 1

422

கடும் பரி நெடுந் தேர்க் கால் வல் புரவி,
நெடுங் கொடி முல்லையொடு தளவமலர் உதிர,
விரையுபு கடைஇ நாம் செல்லின்,
நிரை வளை முன்கை வருந்தலோ இலளே.

மீள்கின்றான் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது. 2

423

மா மழை இடியூஉத் தளி சொரிந்தன்றே;
வாள் நுதல் பசப்பச் செலவு அயர்ந்தனையே;
யாமே நிற் துறந்து அமையலம்;
ஆய் மலர் உண்கணும் நீர் நிறைந்தனவே.

கார்ப் பருவத்தே பிரியக் கருதிய தலைமகற்குத் தோழி தலைமகளது ஆற்றாமை கூறிச் செலவு அழுங்குவித்தது. 3

424

புறவு அணி நாடன் காதல் மட மகள்
ஒள் நுதல் பசப்ப நீ செலின், தெண் நீர்ப்
போது அவிழ் தாமரை அன்ன நின்
காதல்அம் புதல்வன் அழும், இனி முலைக்கே. 4

இதுவும் அது.

425

புன் புறப் பேடை சேவல் இன்புற
மன்னர் இயவரின் இரங்கும் கானம்
வல்லை நெடுந் தேர் கடவின்,
அல்லல் அரு நோய் ஒழித்தல் எமக்கு எளிதே.

வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. 5

426

வென் வேல் வேந்தன் அருந் தொழில் துறந்து, இனி,
நன்னுதல்! யானே செலவு ஒழிந்தனெனே!—
முரசு பாடு அதிர ஏவி,
அரசு படக் கடக்கும் அருஞ் சமத்தானே.

வேந்தற்குத் தானைத்தலைவனாய் ஒழுகும் தலைமகன் பிரிந்து வினை முடித்து வந்து தலைவியோடு உறைகின்றுழி, 'இன்னும் பிரியுங்கொல்?' என்று கருதிய தலைமகட்குக் கவற்சி தீரச் சொல்லியது. 6

427

பேர் அமர் மலர்க் கண் மடந்தை! நீயே
கார் எதிர் பொழுது என விடல் ஒல்லாயே;
போருடை வேந்தன், 'பாசறை
வாரான் அவன்' எனச் செலவு அழுங்கினனே.

'பிரியுங்கொல்?' என்று ஐயுற்று உடன்படாமை மேற்கொண்டு ஒழுகுகின்ற தலைமகட்குத் தான் பிரிவொழிந்ததற்குக் காரணம் கூறித் தேற்றியது. 7

428

தேர் செலவு அழுங்க, திருவிற் கோலி,
ஆர் கலி எழிலி சோர் தொடங்கின்றே;
வேந்து விடு விழுத் தொழில் ஒழிய,
யான் தொடங்கினனால், நிற் புறந்தரவே.

'பிரியுங்கொல்?' என்று ஐயுற்ற தலைமகள் ஐயம் தீரத் தலைமகன் சொல்லியது. 8

429

பல் இருங் கூந்தல்! பசப்பு நீ விடின்,
செல்வேம்தில்ல யாமே—செற்றார்
வெல் கொடி அரணம் முருக்கிய
கல்லா யானை வேந்து பகை வெலற்கே.

குறிப்பினால் பிரிவு உணர்ந்து வேறுபட்ட தலைமகள் உடம்படுவாளாக, வேந்தற்கு உற்றுழிப் பிரியும் தலைமகன் சொல்லியது. 9

430

நெடும் பொறை மிசைய குறுங் காற் கொன்றை
அடர் பொன் என்னச் சுடர் இதழ் பகரும்
கான் கெழு நாடன் மகளே!
அழுதல் ஆன்றிசின்; அழுங்குவல் செலவே.

'பிரியுங்கொல்?' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் பருவ வரவு கூறி, 'இது காரணத்தாலும் பிரியேன்' எனச் சொல்லியது. 10

44. புறவு அணிப் பத்து

431

நன்றே, காதலர் சென்ற ஆறே!
அணி நிற இரும் பொறை மீமிசை
மணி நிற உருவின தோகையும் உடைத்தே.

'பிரிவு உடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவியவழி, 'அவர் போன சுரம் போகற்கு அரிது என்று ஆற்றேனாகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான், அச் சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது. 1

இனி வருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இஃது ஒக்கும்.

432

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
சுடு பொன் அன்ன கொன்றை சூடி,
கடி புகுவனர்போல் மள்ளரும் உடைத்தே. 2

433

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
நீர்ப்பட எழிலி வீசும்
கார்ப் பெயற்கு எதிரிய கானமும் உடைத்தே. 3

434

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
மறியுடை மான்பிணை உகள,
தண் பெயல் பொழிந்த இன்பமும் உடைத்தே. 4

435

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
நிலன் அணி நெய்தல் மலர,
பொலன் அணி கொன்றையும் பிடவமும் உடைத்தே. 5

436

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
நன் பொன் அன்ன சுடர் இணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமார் உடைத்தே. 6

437

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
ஆலித் தண் மழை தலைஇய,
வாலிய மலர்ந்த முல்லையும் உடைத்தே. 7

438

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
பைம் புதல் பல் பூ மலர,
இன்புறத் தகுந பண்புமார் உடைத்தே. 8

439

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந் தண் நிலைய பாக்கமும் உடைத்தே. 9

440

நன்றே, காதலர் சென்ற ஆறே!—
தண் பெயல் அளித்த பொழுதின்
ஒண் சுடர்த் தோன்றியும் தளவமும் உடைத்தே. 10

45. பாசறைப் பத்து

441

ஐய ஆயின, செய்யோள் கிளவி;
கார் நாள் உருமொடு கையறப் பிரிந்தென,
நோய் நன்கு செய்தன எமக்கே;
யாம் உறு துயரம் அவள் அறியினோ நன்றே.

சென்ற வினை முடியாமையின், கார்காலம் வந்த இடத்து, மீளப் பெறாத தலைமகன், தலைமகளுழைநின்றும் வந்த தூதர் வார்த்தை கேட்டு, இரங்கியது. 1

442

பெருஞ் சின வேந்தன் அருந் தொழில் தணியின்,
விருந்து நனி பெறுதலும் உரியள்மாதோ—

இருண்டு தோன்று விசும்பின் உயர் நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்,
குரும்பை மணிப் பூண் புதல்வன் தாயே.

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடியாமையின், பாசறைக்கண் இருந்து பருவ வரவின்கண் சொல்லியது. 2

443

நனி சேய்த்து என்னாது, நற்றேர் ஏறிச் சென்று,
இலங்கு நிலவின் இளம் பிறை போலக்
காண்குவெம்தில்ல, அவள் கவின் பெறு சுடர் நுதல்—
விண் உயர் அரண் பல வௌவிய
மண்ணுறு முரசின் வேந்து தொழில் விடினே.

இதுவும் அது. 3

444

பெருந் தோள் மடவரற் காண்குவெம்தில்ல—
நீள் மதில் அரணம் பாய்ந்தெனத் தொடி பிளந்து
வைந் நுதி மழுகிய தடங் கோட்டு யானை,
வென் வேல், வேந்தன் பகை தணிந்து,
இன்னும் தன் நாட்டு முன்னுதல் பெறினே.

இதுவும் அது. 4

445

புகழ் சால் சிறப்பின் காதலி புலம்பத்
துறந்து வந்தனையே, அருந்தொழிற் கட்டூர்—
நல் ஏறு தழீஇ நாகு பெயர் காலை
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம்!—
வல்லே எம்மையும் வர இழைத்தனையே!

பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் தலைமகளை நினைந்து, நெஞ்சொடு புலந்து சொல்லியது. 5

446

முல்லை நாறும் கூந்தல் கமழ் கொள
நல்ல காண்குவம், மாஅயோயே!—
பாசறை அருந் தொழில் உதவி, நம்
காதல் நல் நாட்டுப் போதரும் பொழுதே.

பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் உருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது. 6

447

பிணி வீடு பெறுக, மன்னவன் தொழிலே!
பனி வளர் தளவின் சிரல் வாய்ச் செம் முகை,
ஆடு சிறை வண்டு அவிழ்ப்ப,
பாடு சான்ற; காண்கம், வாணுதலே!

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் அவன் வினைமுற்றி மீளும் வேட்கையனாய், பருவ வரவின்கண் தலைமகளை நினைத்துச் சொல்லியது. 7

448

தழங்குரல் முரசம் காலை இயம்ப,
கடுஞ் சின வேந்தன் தொழில் எதிர்ந்தனனே;
மெல் அவல் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்கு பெயல் கனை துளி கார் எதிர்ந்தன்றே;
அம் சில் ஓதியை உள்ளுதொறும்,
துஞ்சாது அலமரல் நாம் எதிர்ந்தனமே.

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் பருவம் வந்த இடத்தினும் மீளப் பெறாது, அரசன் செய்தியும், பருவத்தின் செய்தியும், தன் செய்தியும், கூறி ஆற்றானாயது. 8

449

முரம்பு கண் உடையத் திரியும் திகிரியொடு
பணை நிலை முணைஇய வய மாப் புணர்ந்து,
திண்ணிதின் மாண்டன்று தேரே;
ஒண்ணுதற் காண்குவம், வேந்து வினைவிடினே.

பாசறைக்கண் வேந்தனொடு வினைப் பொருட்டால் போந்திருந்த தலைமகன் அவ் வேந்தன் மாற்று வேந்தர் தரு திறைகொண்டு மீள்வானாகப் பொருந்துழி, தானும் மீட்சிக்குத் தேர் சமைத்த எல்லைக்கண்ணே, அவ் அரசன் பொருத்தம் தவிர்ந்து மீண்டும் வினைமேற்கொண்டானாகச் சொல்லியது. 9

450

முரசு மாறு இரட்டும் அருந் தொழிற் பகை தணிந்து
நாடு முன்னியரோ, பீடு கெழு வேந்தன்;
வெய்ய உயிர்க்கும் நோய் தணிய,
செய்யோள் இளமுலைப் படீஇயர், என் கண்ணே!

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முற்றாமையின், பாசறைக்கண் இருந்து, தன் மனக்கருத்து உரைத்தது. 10

46. பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து

451

கார் செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர் தரு விருந்தின் தவிர்குதல் யாவது?
மர்ற்று அருந் தானை நோக்கி,
ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே!

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் குறித்த பருவம் நினைந்து ஆற்றி இருந்த தலைமகள், அப் பருவ வரவின்கண் பாசறையினின்றும் வந்தார் அரசன் செய்தி கூறக் கேட்டு, ஆற்றாளாய்ச் சொல்லியது. 1

452

வறந்த ஞாலம் தெளிர்ப்ப வீசிக்
கறங்கு குரல் எழிலி கார் செய்தன்றே;

பகை வெங் காதலர் திறை தரு முயற்சி
மென் தோள் ஆய்கவின் மறைய,
பொன் புனை பீரத்து அலர் செய்தன்றே.

குறித்த பருவத்து வாராது தலைமகன் பகைமேல் முயல்கின்ற முயற்சி கேட்ட தலைமகள் கூறியது. 2

453

அவல்தொறும் தேரை தெவிட்ட, மிசைதொறும்
வெங் குரற் புள்ளினம் ஒலிப்ப, உதுக்காண்,
கார் தொடங்கின்றால் காலை; அதனால்,
நீர் தொடங்கினவால் நெடுங் கண்; அவர்
தேர் தொடங்கு இன்றால் நம்வயினானே.

பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 3

454

தளவின் பைங் கொடி தழீஇ, பையென
நிலவின் அன்ன நேர் அரும்பு பேணி,
கார் நயந்து எய்தும், முல்லை; அவர்
தேர் நயந்து உறையும், என் மாமைக் கவினே.

பருவ வரவின்கண் தலைமகள் ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது. 4

455

அரசு பகை தணிய, முரசு படச் சினைஇ,
ஆர் குரல் எழிலி கார் தொடங்கின்றே:
அளியவோ அளிய தாமே—ஒளி பசந்து,
மின் இழை ஞெகிழச் சாஅய்,
தொல் நலம் இழந்த என் தட மென் தோளே!

ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 5

456

உள்ளார்கொல்லோ—தோழி! வெள் இதழ்ப்
பகல் மதி உருவின் பகன்றை மா மலர்
வெண் கொடி ஈங்கைப் பைம் புதல் அணியும்
அரும் பனி அளைஇய கூதிர்
ஒருங்கு இவண் உறைதல், தெளித்து அகன்றோரே?

குறித்த பருவம் வரவும் தலைமகன் வந்திலனாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 6

457

பெய்பனி நலிய, உய்தல் செல்லாது
குருகினம் நரலும் பிரிவு அருங் காலை,
துறந்து அமைகல்லார், காதலர்;
மறந்து அமைகல்லாது, என் மடம் கெழு நெஞ்சே.

பருவ வரவின்கண் ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 7

458

துணர்க் காய்க் கொன்றை குழற் பழம் ஊழ்த்தன;
அதிர் பெயற்கு எதிரிய சிதர் கொள் தண் மலர்
பாணர் பெருமகன் பிரிந்தென,
மாண் நலம் இழந்த என் கண் போன்றனவே!

பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன் வரவு பார்த்திருந்த தலைமகள் பருவ முதிர்ச்சி கூறி, ஆற்ருளாய் உரைத்தது. 8

459

மெல் இறைப் பணைத் தோட் பசலை தீர,
புல்லவும் இயைவதுகொல்லோ—புல்லார்
ஆர் அரண் கடந்த சீர் கெழு தானை
வெல் போர் வேந்தனொடு சென்ற
நல் வயல் ஊரன் நறுந் தண் மார்பே?

'வேந்தன் வினை முற்றினன்; நின் காதலர் கடுக வருவர்' எனக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. 9

460

பெருஞ் சின வேந்தனும் பாசறை முனியான்;
இருங் கலி வெற்பன் தூதும் தோன்ரு;
ததை இலை வாழை முழுமுதல் அசைய,
இன்ன வாடையும் அலைக்கும்;
என் ஆகுவென்கொல், அளியென் யானே?

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகனைப் பருவ முதிர்ச்சியினும் வரக் காணது, தலைமகள் சொல்லியது. 10

47. தோழி வற்புறுத்த பத்து

461

வான் பிசிர்க் கருவியின் பிடவு முகை தகைய,
கான் பிசிர் கற்ப, கார் தொடங்கின்றே;
இனையல் வாழி, தோழி; எனையதூஉம்
நிற் துறந்து அமைகுவர்அல்லர்,
வெற்றி வேந்தன் பாசறையோரே.

பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி வரவு கூறி, 'உரைத்த பருவம் வந்ததாகலான், அவர் வருவர்' என வற்புறீஇயது. 1

462

ஏதில பெய்ம் மழை கார் என மயங்கிய
பேதைஅம் கொன்றைக் கோதை நிலை நோக்கி,
எவன் இனி, மடந்தை! நின் கலிழ்வே? நின்வயின்
தகை எழில் வாட்டுநர் அல்லர்,
முகை அவிழ் புறவின் நாடு இறந்தோரே.

பருவங் கண்டு வேறுபட்ட கிழத்தியைத் தோழி, 'பருவம் அன்று' என வற்புறீஇயது. 2

463

புதல்மிசை நறு மலர் கவின் பெறத் தொடரி, நின்
நலம் மிகு கூந்தல் தகை கொளப் புனைய
வாராது அமையலோ இலரே; நேரார்
நாடு படு நன்கலம் தரீஇயர்,
நீடினர்—தோழி!—நம் காதலோரே.

குறித்த பருவம் வரவும் தலைமகன் தாழ்த்துழி, தோழி காரணம் கூறி, வற்புறீஇயது. 3

464

கண் எனக் கருவிளை மலர, பொன் என
இவர் கொடிப் பீரம் இரும் புதல் மலரும்
அற்சிரம் மறக்குநர் அல்லர்—நின்
நல் தோள் மருவரற்கு உலமருவோரே.

வரைந்த அணுமைக்கண்ணே பிரிந்த தலைமகன் குறித்த பருவம் வந்துழி, 'இதனை மறந்தார்' என்ற தலைமகட்குத் தோழி, 'வரைவதற்கு முன்பு அவர் அன்புடைமை இதுவாகலான் மறத்தல் கூடாது' எனச் சொல்லி வற்புறீஇயது. 4

465

நீர் இகுவன்ன நிமிர் பரி நெடுந் தேர்,
கார் செய் கானம் கவின் பட, கடைஇ,
மயங்கு மலர் அகலம் நீ இனிது முயங்க,
வருவர்; வாழி, தோழி!—
செரு வெங் குருசில் தணிந்தனன் பகையே.

பருவம் கண்டு வேறுபட்ட தலைமகளை, 'வேந்தன் வினைமுடித்தான்' எனக் கேட்ட தோழி, 'வருவர்' என வற்புறீஇயது. 5

466

வேந்து விடு விழுத் தொழில் எய்தி, ஏந்து கோட்டு
அண்ணல் யானை அரசு விடுத்து, இனியே
எண்ணிய நாளகம் வருதல்—பெண் இயல்
காமர் சுடர் நுதல் விளங்கும்
தே மொழி அரிவை!—தெளிந்திசின் யானே.

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளை, 'அவர் போன காரியம் இடையூறு இன்றி முடித்து வருதல் பல்லாற்றானும் தெளிந்தேன்' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது. 6

467

புனை இழை நெகிழச் சாஅய், நொந்துநொந்து
இனையல்—வாழியோ இகுளை!—'வினைவயின்
சென்றோர் நீடினர் பெரிது' என: தங்காது
நம்மினும் விரையும் என்ப,
வெம் முரண் யானை விறற் போர் வேந்தே.

தலைமகன் வினைவயிற் பிரிய ஆற்றாள் ஆகிய தலைமகளைத் தோழி வற்புறீஇயது. 7

468

வரி நுணல் கறங்க, தேரை தெவிட்ட,
கார் தொடங்கின்றே காலை; இனி, நின்
நேர் இறைப் பணைத் தோட்கு ஆர் விருந்து ஆக,
வடி மணி நெடுந் தேர் கடைஇ,
வருவர் இன்று, நம் காதலோரே.

பிரிவு நீட ஆற்றாள் ஆய தலைமகட்குத் தோழி பருவங்காட்டி, 'இன்றே வருவர்' என வற்புறீஇயது. 8

469

பைந் தினை உணங்கல் செம் பூழ் கவரும்
வன் புல நாடற் தரீஇய, வலன் ஏர்பு
அம் கண் இரு விசும்பு அதிர, ஏறொடு
பெயல் தொடங்கின்றே வானம்;
காண்குவம்; வம்மோ, பூங் கணோயே!

பிரிவு நீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி 'அவரை நமக்குத் தருதற்கு வந்தது காண் இப் பருவம்' எனக் காட்டி வற்புறீஇயது. 9

470

இரு நிலம் குளிர்ப்ப வீசி, அல்கலும்
அரும் பனி அளைஇய அற்சிரக் காலை
உள்ளார், காதலர், ஆயின், ஒள்ளிழை!
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோ, நின் மாமைக் கவினே?

பருவம் வந்தது கண்டு, 'தாம் குறித்த இதனை மறந்தார்' என வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது. 10

48. பாணன் பத்து

471

எல் வளை நெகிழ, மேனி வாட,
பல் இதழ் உண்கண் பனி அலைக் கலங்க,
துறந்தோன்மன்ற, மறம் கெழு குருசில்;
அது மற்று உணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி; என் அவர் தகவே?

பருவ வரவின்கண் தூதாகி வந்த பாணன் கூறியவழி, தோழி சொல்லியது. 1

472

கை வல் சீறியாழ்ப் பாண! நுமரே
செய்த பருவம் வந்து நின்றதுவே;
எம்மின் உணரார்ஆயினும், தம்வயின்
பொய் படு கிளவி நாணலும்
எய்யார் ஆகுதல், நோகோ யானே?

குறித்த பருவம் வரவும் தலைமகன் வாரானாகியவழி, தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது. 2

473

பலர் புகழ் சிறப்பின் நும் குருசில் உள்ளிச்
செலவு நீ நயந்தனை ஆயின், மன்ற
இன்னா அரும் படர் எம்வயின் செய்த
பொய் வலாளர் போல—
கை வல் பாண! —எம் மறவாதீமே.

'தலைமகன் பிரிந்த நாட்டில் செல்வேம்' என்ற அவன் பாணற்குத் தலைமகள் சொல்லியது. 3

474

மை அறு சுடர் நுதல் விளங்க, கறுத்தோர்
செய் அரண் சிதைத்த செரு மிகு தானையொடு
கதழ் பரி நெடுந் தேர் அதர் படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவல் என்னும்;
நன்றால் அம்ம, பாணனது அறிவே!

பிரிவின்கண் ஆற்றாமை கண்டு, 'தூதாகிச் சென்று அவனைக் கொணர்வல்' என்ற பாணன் கேட்பத் தலைமகள் கூறியது. 4

475

தொடி நிலை கலங்க வாடிய தோளும்
வடி நலன் இழந்த என் கண்ணும் நோக்கி,
பெரிது புலம்பினனே, சீறியாழ்ப் பாணன்;
எம் வெங் காதலொடு பிரிந்தோர்
தம்மோன் போலான்; பேர் அன்பினனே.

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தலைமகனுழை நின்று வந்தார் கேட்ப, தன் மெலிவு கண்டு இரங்கிய பாணனைத் தோழிக்கு மகிழ்ந்து சொல்லியது. 5

476

கருவி வானம் கார் சிறந்து ஆர்ப்ப,
பருவம் செய்தன பைங் கொடி முல்லை;
பல் ஆன் கோவலர் படலைக் கூட்டும்
அன்பு இல் மாலையும் உடைத்தோ—
அன்பு இல் பாண! —அவர் சென்ற நாடே?

'பிரிவாற்றாமை அவற்கும் உளதன்றே; நீ வேறுபடுகின்றது என்னை?' என்ற பாணற்குத் தலைமகள் கூறியது. 6

477

பனி மலர் நெடுங் கண் பசலை பாய,
துனி மலி துயரமொடு அரும் படர் உழப்போள்
கையறு நெஞ்சிற்கு உயவுத் துணை ஆக,
சிறு வரைத் தங்குவை ஆயின்,
காண்குவைமன்னால்—பாண! —எம் தேரே.

தலைமகள்மாட்டுப் பாணனைத் தூதாக விடுத்த தலைமகன் கூறியது. 7

478

'நீடினம்' என்று கொடுமை தூற்றி,
வாடிய நுதலள் ஆகி, பிறிது நினைந்து,
யாம் வெங் காதலி நோய் மிகச் சாஅய்,
சொல்லியது உரைமதி, நீயே—
முல்லை நல் யாழ்ப் பாண!—மற்று எமக்கே?

பிரிந்து உறையும் தலைமகன் தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனை, 'அவள் சொல்லிய திறம் கூறு' எனக் கேட்டது. 8

479

சொல்லுமதி பாண! சொல்லுதோறு இனிய—
நாடு இடை விலங்கிய எம்வயின், நாள்தொறும்,
அரும் பனி கலந்த அருள் இல் வாடை
தனிமை எள்ளும் பொழுதில்,
பனி மலர்க் கண்ணி கூறியது எமக்கே.

தலைவி விடத் தூதாய்ச் சென்ற பாணன் மாற்றம் கூறக் கேட்ட தலைமகன், 'இவ் வாடை வருத்தத்திற்கு மருந்தாக இன்னும் கூற வேண்டும்' எனக் கூறியது. 9

480

நினக்கு யாம் பாணரேம் அல்லேம்; எமக்கு
நீயும் குருசிலை அல்லை மாதோ—
நின் வெங் காதலி தன் மனைப் புலம்பி,
ஈர் இதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளாதோயே!

தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன் தலைமகனை நெருங்கிச் சொல்லியது. 10

49. தேர் வியங்கொண்ட பத்து

481

சாய் இறைப் பணைத் தோள், அவ் வரி அல்குல்,
சேயிழை மாதரை உள்ளி, நோய் விட
முள் இட்டு ஊர்மதி, வலவ!—நின்
புள் இயற் கலி மாப் பூண்ட தேரே.

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது. 1

இனி வருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இஃது ஒக்கும்.

482

தெரிஇழை அரிவைக்குப் பெரு விருந்து ஆக
வல்விரைந்து கடவுமதி பாக!—வெள் வேல்
வென்று அடு தானை வேந்தனொடு
நாள் இடைச் சேப்பின், ஊழியின் நெடிதே! 2

483

ஆறு வனப்பு எய்த அலர் தாயினவே;
வேந்து விட்டனனே; மா விரைந்தனவே;
முன்னுறக் கடவுமதி, பாக!—
நல் நுதல் அரிவை தன் நலம் பெறவே. 3

484

வேனில் நீங்கக் கார் மழை தலைஇ,
காடு கவின் கொண்டன்று பொழுது; பாடு சிறந்து
கடிய கடவுமதி, பாக!—
நெடிய நீடினம், நேரிழை மறந்தே. 4

485

அரும் படர் அவலம் அவளும் தீர,
பெருந் தோள் நலம் வர யாமும் முயங்க,
ஏமதி, வலவ! தேரே—
மா மருண்டு உகளும் மலர் அணிப் புறவே. 5

486

பெரும் புன் மாலை ஆனாது நினைஇ,
அரும் படர் உழத்தல் யாவது? என்றும்
புல்லி ஆற்றாப் புரையோட் காண
வள்பு தெரிந்து ஊர்மதி, வலவ!—நின்
புள் இயற் கலி மாப் பூண்ட தேரே. 6

487

இதுமன் பிரிந்தோர் உள்ளும் பொழுதே;
செறிதொடி உள்ளம் உவப்ப—
மதியுடை வலவ!—ஏமதி தேரே. 7

488

கருவி வானம் பெயல் தொடங்கின்றே;
பெரு விறல் காதலி கருதும் பொழுதே;
விரி உளை நன் மாப் பூட்டி,
பருவரல் தீர, கடவுமதி தேரே! 8

489

அஞ்சிறை வண்டின் அரியினம் மொய்ப்ப,
மென் புல முல்லை மலரும் மாலை,
பையுள் நெஞ்சின் தையல் உவப்ப,
நுண் புரி வண் கயிறு இயக்கி, நின்
வண் பரி நெடுந் தேர் கடவுமதி, விரைந்தே. 9

490

அம் தீம் கிளவி தான் தர, எம்வயின்
வந்தன்று..........................
....
ஆய் மணி நெடுந் தேர் கடவுமதி, விரைந்தே.

50. வரவுச் சிறப்பு உரைத்த பத்து

491

கார் அதிர் காலை யாம் ஓ இன்று நலிய,
நொந்து நொந்து உயவும் உள்ளமொடு
வந்தனெம்—மடந்தை!—நின் ஏர் தர விரைந்தே.

வினை முற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியது. 1

492

நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்
நல் நுதல் நாறும் முல்லை மலர,
நின்னே போல மா மருண்டு நோக்க,
நின்னே உள்ளி வந்தனென்—
நல் நுதல் அரிவை!—காரினும் விரைந்தே.

இதுவும் அது. 2

493

ஏறு முரண் சிறப்ப, ஏறு எதிர் இரங்க,
மாதர் மான் பிணை மறியொடு மறுக,
கார் தொடங்கின்றே காலை—
நேர் இறை முன் கை! நின் உள்ளி யாம் வரவே.

இதுவும் அது. 3

494

வண்டு தாது ஊத, தேரை தெவிட்ட,
தண் கமழ் புறவின் முல்லை மலர,
இன்புறுத்தன்று பொழுதே;
நின் குறி வாய்த்தனம்; தீர்க, இனிப் படரே!

இதுவும் அது. 4

495

செந் நில மருங்கில் பல் மலர் தாஅய்,
புலம்பு தீர்ந்து, இனியஆயின, புறவே—
பின் இருங் கூந்தல் நல் நலம் புனைய,
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சமொடு,
முள் எயிற்று அரிவை! யாம் வந்தமாறே.

இதுவும் அது. 5

496

மா புதல் சேர, வரகு இணர் சிறப்ப,
மா மலை புலம்ப, கார் கலித்து அலைப்ப,
பேர் அமர்க் கண்ணி! நிற் பிரிந்து உறைநர்
தோள் துணையாக வந்தனர்;
போது அவிழ் கூந்தலும் பூ விரும்புகவே.

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழி, தோழி தலைமகட்குச் சொல்லியது. 6

497

குறும் பல் கோதை கொன்றை மலர,
நெடுஞ் செம் புற்றம் ஈயல் பகர,
மா பசி மறுப்ப, கார் தொடங்கின்றே—
பேர் இயல் அரிவை! நின் உள்ளிப்
போர் வெங் குருசில் வந்தமாறே.

இதுவும் அது. 7

498

தோள் கவின் எய்தின; தொடி நிலை நின்றன;
நீள் வரி நெடுங் கண் வாள் வனப்பு உற்றன—
ஏந்து கோட்டு யானை வேந்து தொழில் விட்டென,
விரை செலல் நெடுந் தேர் கடைஇ,
வரையக நாடன் வந்தமாறே.

இதுவும் அது. 8

499

பிடவம் மலர, தளவம் நனைய,
கார் கவின் கொண்ட கானம் காணின்,
'வருந்துவள் பெரிது' என, அருந் தொழிற்கு அகலாது,
வந்தனரால், நம் காதலர்—
அம் தீம் கிளவி! நின் ஆய்நலம் கொண்டே.

இதுவும் அது. 9

500

கொன்றைப் பூவின் பசந்த உண்கண்,
குன்றக நெடுஞ் சுனைக் குவளை போல,
தொல் கவின் பெற்றன இவட்கே—வெல் போர்
வியல் நெடும் பாசறை நீடிய
வய மான் தோன்றல்! நீ வந்தமாறே.

வினைமுற்றி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது. 10

முல்லை முற்றும்

ஐங்குறுநூறு முற்றும்

இத் தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். இத் தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார்.

மிகையான பாடல்கள்

உள்ளார்கொல்லோ, தோழி! —சிள்ளெனப்
பருந்து வீழ்ந்து எடுத்த பைந் தலை அரவம்
காது அறு கவணது ஏய்க்கும்
தீது உறு கள்ளிஅம் காடு இறந்தோரே? 1

உள்ளார்கொல்லோ, தோழி!—முள்ளுடை
அலங்கு குலை ஈந்தின் சிலம்பி பொதி செங் காய்
துகில் பொதி பவளம் ஏய்க்கும்
அகில் படு கள்ளிஅம் காடு இறந்தோரே? 2

உள்ளார் கொல்லோ, தோழி! —முள்ளுடை
இலவம் ஏறிய கலவ மஞ்ஞை
எரி புகு மகளிர் ஏய்க்கும்
அரில் படு கள்ளிஅம் காடு இறந்தோரே? 3

உள்ளார்கொல்லோ, தோழி! —வெள்ளைப்
புழுங்கல் நெல்லின் பொரி வீழ்த்தென்ன
நுண் குழிப் புற்றின் மண் கால் ஈயல்
கோல் பிடி குருடர் ஏய்க்கும்
மால் உறு கள்ளிஅம் காடு இறந்தோரே? 4

எம் ஊர் அல்லது ஊர் நணித்து இல்லை;
வெம் முரட் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்;
சேந்தனை சென்மோ—பூந்தார் மார்ப!—
இளையள், மெல்லியள், மடந்தை;
அரிய, சேய, பெருங் கான்யாறே. 5

அடும்பு அமல் நெடுங் கொடி உள் புதைந்து ஒளிப்ப,
வெண் மணல் விரிக்கும் தண்ணம் துறைவன்
கொடியன்ஆயினும் ஆக;
அவனே, தோழி! என் உயிர் காவலனே. 6

இந்த ஆறும் ஒரு பிரதியில் மட்டும் காணப்பெற்றன.

வயங்கு கதிர் ஞாயிறு திருகலின், நீர் அறுபு
கயம் துகளாகிய வியம் தபு கொள்கையொடு
இன்னுஆயினும், இனிய ஆகுக—
காதலன் நயந்து பாராட்ட, என்
மாதர் மடப்பிடி போகிய சுரனே. 7

ஆழ்வார் திருநகரித் தேவர்பிரான் கவிராயர் வீட்டுப் பிரதியில், நூலுள் வரும் 371, 372 ஆம் செய்யுட்கள் காணப்படாது, அவைகள் இருத்தற்கு உரிய இடத்தில் இச் செய்யுள் ஒன்று மட்டுமே காணப்பெற்றது.

'இது என் பாவை பாவை; இது என்
அலமரு நோக்கின், நலம் வரு சுடர் நுதல்,
பைங்கிளி எடுத்த பைங்கிளி' என்று, இவை
காண்தொறும் காண்தொறும் கலங்க
நீங்கினளோ—என் பூங்கண்ணோளே? 8

375 ஆம் செய்யுள் முற்பகுதியில் பாடம் வேறுபட்டும், ஐந்து வரியாகவும், இங்குக் காட்டிய வண்ணம் ஒருசில பிரதிகளில் உள்ளது.

பாடினோரும் பாடல்களும்

மருதம் ஓரம்போகி; நெய்தல் அம்மூவன்;
கருதும் குறிஞ்சி கபிலன்; கருதிய
பாலை ஓதலாந்தை; பனி முல்லை பேயனே—
நூலை ஓது ஐங்குறுநூறு.

—பழம் பாடல்

பாரதம் பாடிய பெருந்தேவனார் (கடவுள் வாழ்த்துப்பாடல்)

ஓரம்போகியார்	(மருதம்)	1-100
அம்மூவனார்	(நெய்தல்)	101-200
கபிலர்	(குறிஞ்சி)	201-300
ஓதலாந்தையார்	(பாலை)	301-400
பேயனார்	(முல்லை)	401-500

பாடப்பட்டோர்

ஆதன் அவினி	1-10	சோழர்	56
கடுமான் கிள்ளி	78	தென்னவன்	54
குட்டுவன்	178	மத்தி	61
கொற்கைக் கோமான்	188	விராஅன்	58

சிறப்புப் பெயர் முதலியவை

பத்துக்களின் அகராதி

பாடல் முதற்குறிப்பு அகராதி